# MANAS TATVAM.

OR

## A TREATISE ON MIND

AS PROPUNDED IN VEDANTA PHILOSOPHY

BY


## K. GANESA SASTRIAR

OF

MARUVUR

A DISCIPLE OF

UPADHYAYA SAHAJANANDA

OF

JANAKPUR, NEPAL.



PRINTED AT THE

GOLDEN PRESS, MADRAS, N.C.



*All Rights Reserved.*



1910.

புராணிகர், காளத்தி

திரு. இ. சிதம்பரசாமி பாண்டியர்

அவர்கள்

## அன்பளிப்பு

# மனஸ் தத்துவம்

உ. வே. சா[illegible]
அடையாறு, சென்னை-20.
இ[illegible]

[illegible]

உபாத்தியாயர் ஸஹஜானந்தரெனும் மஹாநுபாவரது

சிஷ்யராகிய

மருவூர்

கெ. கணேச சாஸ்திரியாரால்

இயற்றப்பட்டு

---

மதிராஸ். என். வி.

கோல்டன் பிரஸில் அச்சிடப்பட்டது.

All Rights Reserved.

1910.

Price As. 4.] [விலை அணா 4.

# PREFACE

THE Vedanta Philosophy treats mainly about *Moksha* or final emancipation ; and this state can only be obtained by the realisation of *Paramatma* (or the Supreme Soul). To enable us to obtain a clear knowledge of the Supreme Soul, it is absolutely essential that we should have a thorough understanding of what are *Manas* (mind), *Jivan* (the individual soul), *Loka* (world), *Sarira* (body), *Karma* (action), and *Ishwara* (the dispenser of the fruits of *Karma*). In the Vedanta philosophy these subjects are also dealt with in all their details. Because the treatment of these subjects is so exhaustive and so wonderfully rational that one finds that 'the conclusions of modern science are the very conclusions the Vedanta reached years ago,' the Vedanta is therefore recognised to be the best system of Philosophy even by other nations.

Whatever its merits may be, there are persons who seem to be sceptical in their views about Vedanta and its doctrines and there are also persons who even doubt whether any satisfactory explanation can be found in the whole system in respect of certain points which strike every body and which are mentioned below:—

(i) While it has been held that Brain is the seat of Mind, how then are we to accept the theory that Heart is the seat of Mind, as taught in the Upanishads, Bramhasutras, etc.?

(ii) While Heaven and Hell are no where located except in this Earth, how can we reconcile ourselves to the view taken in the Vedanta that there are other *lokas* specially created to serve as Heaven and Hell ?

(ii) If, as is said in the Vedanta, the soul, in order to reap the fruits of its own actions, goes to Heaven (Swarga) or Hell (Naraka) and returns to Earth as the case may be and, each time it does so, it leaves the physical body and enters into some other

body, how is it that before it goes to other *lokas* the form of the body through which it has to pass is not visible to the human eye?

(iv) Why should we bring in an *Ishwara* when all phenomena in the universe can be explained away by the Laws of Nature?

(v) Atma (*the soul*), the Vedantists say, is Bliss itself. Are we to accept this blindfolded? Cannot this be a device invented by a cunning people to give a sort of consolation to the sorrow-stricken?

(vi) The Vedanta asserts that our present life is the result of past actions. If it be a fact that we are ruled by *Karma*, of what avail are the dictates of Vedanta that one should meditate upon *Brahmam* &c.

The revilers go about preaching that the Vedanta cannot furnish satisfactory explanations answering these and several other similar points. They even go to the extent of saying that it is not a science at all but the production of mystical minds of old. At this stage a work that will easily remove the false notions of sceptical minds will be of immense service. The present little volume will, it is hoped, meet such a need.

True that we are not wanting in works of the kind, but as all of them are in classics it is thought that they will not appeal to ordinary minds. With my poor abilities, an attempt to place before the public the present volume might not even have been dreamt of, but for the one highly fortunate circumstance that happened in my life.

For a time I devoted myself to the study of Vedanta. When I came to Madras, I met one, who possessed a supreme capacity to impart the secrets and unknown truths of Vedanta, in an intelligible manner even to ordinary intellects. Sahajananda, for that was his name, was a native of Janakpur in Nepaul. He was a Brahmin by birth. When I first visited him, I felt I was in the presence of a master. He was by nature averse to show off his learning; but my repeated requests induced him to bless me with his

teachings of Vedanta. His deep spiritual insight, his indifference to material things, his humility and sweetness of manners which never left him, irresistably led one to believe that he must be a really great soul. He spent his last six years here in Madras. For about five years I sat at his feet and listened to his discourses in which he expounded the system of Vedanta with the directness of one who had realised and experienced its truths. To me they were presented with the aid of comparisons and analogies drawn from life around us. They could not have been rendered clearer.

While studying under him I was taking notes then and there. I thought it would be an immense benefit to the public if these notes appeared in the form of a book. With this object the manuscript notes were read out to him. He approved of my idea although he was not to see the idea carried out: for, last year, on the seventh day of July 1909, the great soul became one with the Being.

In this volume according to his teachings the hidden truths of the *Upanishads, Barahmasutras, Bhagavad Gita, Siva Gita, Manu Smriti, Yoga Vasishta*, etc., as taught by my master are brought to light. It bears the name of 'Manas Tatvam' as it treats mainly of *manas* (mind) and its functions.

The ideas contained in this book are generally my master's. If there be any mistakes, they are due to my defective comprehension and I shall be thankful if they are pointed out to me. I hope the public will pardon me for using so very freely Sanskrit words, as I found that it was quite impossible to find suitable Tamil words to express the Vedantic ideas. In my eagerness to present the Vedantic ideas in ordinary plain Tamil so as to be readily understood by people of all calibre, faults, blemishes and errors may have crept in and I trust to the indulgence of the readers for the defects. In spite of care there may be still some undetected typographical errors which will be corrected in the next edition.

I feel strongly that English, and Telugu translations of this

book should be published, and I hope they will not be long in coming.

Let me now discharge the grateful duty of tendering my thanks for the kind patronage and support accorded to my labours by some charitably disposed gentlemen in bringing out this publication.

TRIPLICANE,
*December* 1910.

MARUVUR K. GANESA SASTRI.

# OPINIONS

THE MADRAS SANSKRIT COLLEGE,
*Mylapore*, 20-11-1910.

I have heard the Tamil pamphlet 'Manas Tatvam' read out to me by its author, Mr. Ganesa Sastriar of Maruvur. I have found in it an intelligent, popular and lucid presentation of certain truths regarding what is commonly known as 'Manas' in our Sastras. I am glad to note that the author, in his exposition of sastraic truths, does not sacrifice faithfulness to the teachings of our ancient sages and *Acharyas* for the sake of popularity and he has successfully put his ideas in an interesting and attractive garb, bringing to his aid to a considerable extent, as I learn, the insight he was able to get into the popular methods of presenting sastraic principles, at the feet of Upadhyaya SAHAJANANDA of Janakpur, an eminent Pandit from Nepal, highly reputed for his profound scholarship in the *Vedanta* and *Nyaya* Dharmas and practical wisdom, when the Upadhyaya spent his last years at Madras. I find also, in the pamphlet, an intelligent examination of some well-known theosophical tenets and I hope it would induce many to pause and consider before accepting the theosophical interpretation of Hinduism. I am also convinced that the Pandit, actuated by high motives, is sincerely interesting himself in the enlightenment of the masses. I find to my great pleasure that, as a Popular Tamil lecturer of considerable proficiency in Sanskrit literature and Hindu philosophy, he has been useful to many at Madras and other places. I can confidently commend the Pandit and his work to the kind notice and encouragement of all lovers of Sanskrit and all the gentlemen interested in Hindu philosophy.

(Sd.) S. KUPPUSWAMI SASTRI, M.A.,
PRINCIPAL, MADRAS SANSKRIT COLLEGE,
*Mylapore.*

# MANAS TATVAM.

Mr. Ganesa Sastriar's "*Manas Tatvam*" has been before me for some-time. I asked Mr. Sastriar to give me the pleasure of reading out passages from the pamphlet. I derived both pleasure and instruction from their reading. A somewhat abstruse subject is rendered in easy Tamil and an attempt has been made to present the cardinal points of the discussion clearly and succinctly. It is the orthodox presentation that we have here—a view which the sastriar says he learnt from his *Guru*. In this country it is an accepted principle of Vedantic study that the imparting of correct knowledge must proceed from a Guru who has realised the inwardness of the teaching he transmits to disciples: Many a man believes that he understands the *Gita* and the *Upanishads* and the *Sutras* by reading the translations. They begin to expound their ideas and the world is flooded by presentments which have no sanction in the original. Mr. Sastriar has been endeavouring to combat these pseudo-pronouncements upon the underlying principles of Philosophy which more often lead astray than take straight. I confess to a sense of distrust in these newfangled expositions and have always felt that if our *Vedanta* teachings are worth knowing they ought to be learnt from those who have given their life to the acquisition of that knowledge and who alone are competent to bestow it upon others.

Mr. Sastriar is a forcible writer and his ideas are set forth in a clear and convincing manner. Hindus ought to feel grateful to him for his earnest attempts to bring home to them the truths of the teachings of our *Rishis* in the way they have been understood and accepted by successive generation of orthodox teachers.

THE HONOURABLE MR. T. V. SESHAGIRI AIYAR,

*Madras.*

# அபிப்பிராயங்கள்.

உ

சிவமயம்.

**மஹா மஹா உபாத்தியாயர் ஸ்வாமிநாதையர்,**

*தமிழ்பண்டிதர் ப்ரஸிடென்ஸி காலேஜ, மதிறாஸ்.*

மருஆர், ப்ரஹ்மஸ்ரீ கே. கணேசசாஸ்திரிகள் இயற்றிப் பதிப்பித்துள்ள 'மனஸ்தத்துவம்' என்னும் புஸ்தகத்தை ப்படித்துப்பார்த்தேன். இதில், மனத்தின் இயல்பு, ஸ்தூலசரீர முதலியவற்றின் இலக்கணங்கள், நல்வினை தீவினை, இன்பதுன்பம், மறுபிறப்பு, ஸ்வர்க்க நரகம் இவற்றி னியல்புகள் முதலியவை தக்க ஆதாரங்களுடன் அனுபவவழித்தமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. விஷயங்களை ஆக்ஷேப ஸமாதான ரூபமாக எழுதியிருப்பது மிகவும் அழகாக இருக்கின்றது. இப்புஸ்தகம் வடமொழிப் பயிர்ச்சியில்லாதவர்க்கு இக்காலத்தில் மிகவும் உபயோகமாகுமென்றும் மறுபிறப்பு முதலியன இல்லை யென்றல் முதலிய கோட்பாடுகளை மாற்றுதற்கு இதுதக்க கருவியென்றும் நினைக்கிறேன். தமிழ் நடையைப்பற்றி நூலாசிரியரே முகவுரையில் எழுதியிருத்தலால் அதைப்பற்றி நானும் எழுதுதல் மிகை. இவர்களுடைய ஸம்ஸ்கிருத பாண்டித்தியமும் இந்தப் புஸ்தகத்தின் பெருமையும் பிரஹ்மஸ்ரீ குப்புஸாமி சாஸ்திரிகள் (எம் - ஏ) முதலியோரர் எழுதியிருக்கும் அபிப்பிராயங்களால் நன்கு விளங்குமாயினும் எழுதும்படி சிலர் தூண்டினமையால் இதனை எழுதலானேன்.

5—12—1910 இங்ஙனம்:

வே. ஸ்வாமிநாதய்யன்.

---

ப்ரஹ்மஸ்ரீ மருஆர் கணேசசாஸ்திரிகள் அவர்களால் எழுதியச்சிடப்பட்ட "மனஸ்தத்துவம்" என்கிற புஸ்தகத்தைப் படிக்கக்கேட்டேன் அதில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள "மனஸின் ஸ்வரூபம்" "அதின் ஸ்தானம்" "இறந்த பின்னர் அதின் நிலமை" முதலிய விஷயங்கள் யாவும் நமது மூலப்பிரமாணங்களாகிய "உபநிஷத்து, பகவத்கீதை, ப்ரஹ்ம ஸூத்ரம்" இவைகளை யனுஸரித்தே நிரூபிக்கப்பட்டிருக்கிறபடியால் உண்மையறிய விருப்பமுடையவர்களுக்கு இந்தப் புஸ்தகம் மிகுந்த உதவியாயிருக்கு மென்பதில் எனக்குத் திடமான நம்பிக்கை.

16-12-1910 மைலாப்பூர். இங்ஙனம்:

**மஹாமஹோபாத்தியாயர்-ரா. சந்திரசேகரசாஸ்த்ரி**

*பிரின்ஸிபல் ஸம்ஸ்க்ருத காலேஜ், மதிராஸ்.*

# முகவுரை

வேதாந்தமானது மோக்ஷமடையத்தக்க வழியை உபதேசிக்கும் சாஸ்திரம். பரமாத்ம ஸ்வரூபத்தையறிதலே மோக்ஷஹேது வென்பது வாஸ்தவமே. ஆனால் பரமாத்ம ஸ்வரூபத்தையறிவதில் மனம், ஜீவன், லோகம், தேஹம், கர்மா, கர்மபலதாதாவாகிய ஈசவரன் எனும் இவ்வஸ்துக்களையும் விசாரிக்கவேண்டிய தவசியமாகின்றமையால் இந்தத் தத்துவங்களும் வேதாந்தத்தில் சொல்லப்படுகின்றன. இத்தத்துவங்களைப் பற்றிய விபரங்கள் ஸகலமும் ஸம்பூர்ணமாய் நமது வேதாந்தத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றமையால் ஹிந்து வேதாந்தம் மிகவும்சிறந்ததென்று வெளிநாட்டார்களாலும் விசேஷமாய்க் கொண்டாடப்படுகின்றது.

இந்த சாஸ்திரம் அபாரமாகிய மஹிமை பெற்றுள்ளதாயினும், தற்காலம் யுக்திவிசாரமொன்றையே முக்கியமாய்க்கொண்டு, தத்தம் புத்திபரிபாகத்திற் கெட்டியதையே உண்மையென்றெண்ணி, ஏதோ யுக்திக்கொவ்வாத விஷயங்கள் வேதாந்தத்தில் காணப்படுகின்றனவென்றும் அது உலக வயவஹாரம் ஸரியாய் நடைபெறவேண்டு மென்பதையேகருதிநமது முன்னோர்களால் கட்டுப்பாடாகவே எழுதப்பட்டுளது என்றும் பலர் சொல்லுகின்றனர். அவையாவன,

மனவின் தொழில்களெல்லாம் நடக்கும் இடம் மூளையே யாதலால் Brain எனும் இடமே மனஸ்தானமென்பது உசிதம். இவ்விதமிருக்க உபநிஷதம் ப்ரும்மஸூத்திரம் முதலியவைகளில் மனஸ்தானம்ஹ்ருதய கமலம் என்பதாகக்காணப்படுகின்றதே; இதனை எவ்விதம்ஒத்துக்கொள்வது ?

2. ஸ்வர்க்க நரகமெனும் லோகாந்தரமுள்ளதாகச் சொல்லப்படுகின்றதே. ஐந்துகண்டங்களாயுள்ள இந்தப்பூவுலகத்திற்கு அந்நியங்களாய் வேறு லோகங்கள் இருக்கின்றனவென்பது பொருந்தவில்லையே; இப்படியிருக்க ஸ்வர்க்க நரகங்களெனும் லோகாந்தரங்கள் எங்கேயோ உள்ளனவென்பதை எப்படி ஒத்துக்கொள்ளக்கூடும்?

3. இந்த மனிததேகம் நீங்கியதும் ஜீவர்கள் வேறு சரீரத்தைப்பற்றிக்கொண்டு தத்தம் கர்மங்களுக்குத் தக்கபடி ஸ்வர்க்க நரகங்களுக்குச் செல்லுகின்றனரென்றும், அங்கிருந்து மீண்டும் இவ்வுலகம் வந்து சேருகின்றனரென்றும் சொல்லப்படுகின்றதே. இதை யெப்படி நம்புவது ? இறந்ததும் வேறுசரீரத்தைப் பற்றிக்கொண்டு லோகாந்தரம் செல்லுதல் உண்மையானால் மரணகாலத்தில்,அப்படி பற்றப்படுவதாகிய வேறு ஸ்தூல சரீரமானது ஸமீபத்தில் உள்ளவர்களால் ஏன் காணப்படக்கூடாது ?

ஸ்வர்க்கலோகத்தில் அபாரஸுகம் அனுப்பிக்கப்படும் எனின் அதை விரும்பித் தானதருமம் முதலிய நல்லகாரியங்களைச் செய்வார்களென்றும், நரக துக்கம் உள்ளது எனின் அதற்கஞ்சி கெட்டகாரியம் செய்யாமலிருப்பார்களென்றும் கருதியே ஸாமான்னியமாகிய அறிவுபரிபாகமுடையவர்களுக்காக, ஸ்வர்க்க நரகங்களுள்ளனவென்று எழுதப்பட்டிருக்கின்றதென்பதே உசிதம் என்று ஏன்சொல்லக்கூடாது ?

4. உலகவியவஹாரங்கள் யாவும் ஸ்வபாவத்தினலேயே நடைபெறுகின்றதா யிருக்கின்றமையால், ஈச்வரனென்றொருவனுள்ளதாக ஏன் சொல்லவேண்டும்?

5. வேதாந்தத்தில் ஆத்மா ஆனந்தரூபன் என்றன்றோ சொல்லப்படுகின்றது. யுக்தி திருஷ்டாந்தங்களுக்குச் சிறிதும் ஒவ்வாதஇவ்விஷயத்தை எப்படி ஒத்துக்கொள்ளுவது? தன்னை ஆனந்த ஸ்வரூபன் என்று நம்பியிருந்தார்களானல் பெருந்துக்கம் நேர்ந்த ஸமயத்தில் மனம் நொந்துபோகாமல் தேறுதல் பெறுவார்கள் என்ற கருத்தினலேயே முன்னேரால் அவ்வாறு எழுதிவைக்கப்பட்டதென்று ஏன் சொல்லக்கூடாது?

“ஜீவர்கள் முன்செய்த வினையின் பயனை அனுபவியாமல் இருக்க முடியாதென்றும், இந்த ஜன்மத்தில் நேருவனவாகிய ஸகல ஸங்கதிகளும் பூர்வவினையாலேயே” என்றும் சொல்லப்படும் வேதாந்தத்திலேயே, இதற்கு முற்றும் விரோதமாய் புருஷயத்தினம் வேண்டியதவசியம் என்பதாய்க்கொண்டு ‘ இதனைச்செய், இதனைத்தியானிப்பாயாக, இதனையறிக’ என்பது முதலிய விஷயங்களும் சொல்லப்படுகின்றன. இப்படி முன்னுக்குப்பின் முறணுவதாகிய இந்த சாஸ்திரத்தைஏன் ஒத்துக்கொள்ள வேண்டும் ?

என்பவை முதலிய ஆக்ஷேபங்களாம். இவ்வாறுள்ள ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானங்கள் காணப்படாமையால் வேதாந்த சாஸ்திரம் பிசகு என்றும் எண்ணிப் பிறருக்கும் இவ்வாறுபோதிக்க முயலுகின்றமையால் அவர்களுக்கு “இவ்வாக்ஷேபங்கள் தவறு” என்று மனதில் நன்ருய்ப்பதியும்படி, வேதாந்தத்திலுள்ள விஷயங்களை எடுத்துக்காட்டும் புஸ்தகம் ஒன்றிருக்குமானல், தற்காலம் மிகவும் உபயோகமாகுமென்று கொண்டு இந்தப்புஸ்தகம் எழுதப்பட்டது.

வேதாந்தத்தைப்பற்றி முன்னேர்களால் அபாரமாய்க் கிரந்தங்களெழுதப்பட்டிருக்கினும் அவை, ஸம்ஸ்க்ருத பாஷையில் மிகவும் உழைத்துச் சாஸ்திராந்தரங்களை யுணர்ந்துள்ளவர்களுக்கு மாத்திரம் படித்துத்தெரிந்துகொள்ள இயலுமாதலின், ஸாதாரணமாய் எல்லோரும் படித்து முற்கூறியவைபோன்ற ஆக்ஷேபங்களெல்லாம் தவறு என்று கண்டு, வேதாந்

தத்திலுள்ள விஷயங்களை எளிதில் தெரிந்துகொள்வதற்கு இப்புஸ்தகம் தக்க கருவியாகுமென்று கருதி எழுதப்பட்டது.

அபாரமாயுள்ள வேதாந்த சாஸ்திர ஸம்பந்தமாகிய விஷயங்களைப் பற்றி நிகழும் ஆக்ஷேபங்களுக்கு, ஸமாதானங்களைக் காட்டுவதாய்எண்ணங் கொண்டு புஸ்தகமெழுதி வெளியிடத்துணிபடைதல், அற்பஅறிவுடையே னாகிய எனக்குச்சிறிதும் தகாததே. ஆயினும் பிற்கூறும் காரணத்தால் என் மனம் இவ்வாறெழுதத்துணிபுற்றது. அதாவது, யான் ஹிந்துமதத்தைத் தெரிந்துகொள்வதில் மிகவும் ஆவலுடையவனாய் பெரியோரிடம் சிலகாலம் பழகிப்பிறகு சென்னைக்கு வந்தேன். இந்நகரில் தேசயாத்திரைசெய்துகொண்டு வந்து தங்கிய ஓர்பெரியவரைத் தரிசிக்கப்பெற்றேன். பிராமணகுலதிலகராகிய அந்தப்பெரியவர் காங்கியகுப்ஜர்களது வகுப்பினர். அவரது இருப்பிடம் நேபாளத்தைசசேர்த்த ஜநகபூர் எனுமிடம். அவரது நாமதேயம் "உபாத்தியாய ஸஹஜாநந்தர்" என்பது. சிலமாஸகாலம் பழகியதில் அந்தப்பெரியவர் வேதாந்த சாஸ்திரத்தை நன்குணர்ந்தவரென்று தோன்றியது. அவர்தமது பாண்டித்தியம் வெளிப்படுவதில் சிறிதும் விருப்பமுள்ளவராகக் காணப்படாவிடினும், யான்மிகவும் கேட்டுக்கொண்டமையால் அவரிடம் எனக்குச் சிலகாலம் வேதாந்த சிரவணம் செய்யநேர்ந்தது. அவரது விவேகம், வைராக்கியம், அடக்கம், பொறுமை, எல்லோரிடமும் ஸமபாவனை முதலிய பெருந்தன்மைகளைக் கவனித்ததில், அவர் உண்மையனுபவம் பெற்ற மஹானுபாவரென்றூஹிக்க இடமிருந்தது. ஆறுவருஷகாலம் அவர் இந்நகரிலிருந்தனர். யான் அவரிடம் சற்றேறக்குறைய ஐந்துவருஷகாலம் பழகினேன். அவர் என்போன்ற அற்ப அறிவுடையவர்களுக்கும் எளிதில் விளங்கும்படி ஸர்வஸாமான்னியங்களாகிய திருஷ்டாந்தங்களையும், தற்காலத்தவரது ஞானபரிபாகத்திற்குத் தக்க யுக்திகளையும் கொண்டு அபாரமாயுள்ள வேதாந்த சாஸ்திரத்தைப் போதித்தனர். சிரவணம் செய்யுங்காலத்தில் அவரால் சொல்லப்படும் விஷயங்களை ஸங்கிரஹமாய் ஞாபகத்திற்கென எழுதிக்கொண்டு வந்தேன். அவர்போதித்தவாறு சிறுபுஸ்தகமாய் எழுதிவெளியிட்டால் தற்காலத்தவர் செய்யும் ஆக்ஷேபங்களுக்குச்சிறிதும் இடமின்றி, நம்சாஸ்திரத்தினுண்மை எளிதில் அறியப்பட்டதாகுமென்று எண்ணி, அவ்வாறெழுத வேண்டுமென்று அவரைக்கேட்டுக்கொண்டேன். அவரிடம் இந்நகரில் பழகிய எனது நண்பர்களும் அவ்வாறே விருப்புற்றனர். அந்தப்பெரியவர் தம்மிடம் சிரவணம்செய்தவாறு புஸ்தகம் எழுதும்படி எனக்கு அனுமதிதந்தனர். ஞாபகத்திற்கெனக்குறித்து வைத்துகொண்டிக்கும் விஷயஸங்கிரஹத்தை அவரிடம் படித்துக்காட்டினேன். அந்தமஹானுபாவர் சென்ற 1909ஆ ஜூலை 7உயன்று சென்னை நகரில் பரிபூர்ணராயினர். பிறகு அவ்விஷயங்களெல்லாவற்றையும் ஸங்கிரஹித்து இப்புஸ்தகவுருவமாய் அச்சிடலானேன்.

இந்தப் புஸ்தகத்தில், அம்மஹானுபாவரால் போதிக்கப்பட்டவாறு உபநிஷத், ப்ரும்ஹஸூத்ரம், பகவத்கீதை, சிவகீதை, மனுஸ்ம்ருதி, வாஸிஷ்டம் முதலிய முன்னூல்களிலுள்ள அரிய சில மர்மங்களை விளக்கி விஷய ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கின்றது. மனவின் ஸ்தானபேதம், கிரியாபேதம், மனவின் காரணப் பொருள், இறந்த பிறகு மனமடையும் ஸ்திதி முதலிய விஷயங்களை நிரூபணம் செய்யும் வாயிலாகவே வேதாந்த சாஸ்திரத்திலுள்ள விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றமையால் இப்புஸ்தகத்திற்கு "மனஸ்தத்துவம்" என்று பெயரிடப்பட்டது.

இதில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள், அநேகமாய் அந்த மஹானுபாவரிடம் சிரவணம் செய்யப்பட்டவைகளே யாயினும், எனது அறியாமையால் யாதானும் விஷயத்தவறுதல் ஏற்பட்டிருக்கின் அதனை எடுத்துக்காட்டிப் போதிப்பவர்க்கு யான் பன்முறை வந்தனமளிப்பதும் தவிர, இப்புஸ்தகம் மறுமுறை அச்சிடப்படுமாயின் அந்தத் தவறுதலைத் தவிர்த்து விடுகிறேன்.

இந்தப் புஸ்தகத்தில் ஸம்ஸ்க்ருத பதங்கள் அநேகமாய் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன அதற்குக் காரணம், வேதாந்த சாஸ்திரத்திலுள்ள விஷயங்களின் கருத்தை ஸம்ஸ்கிருத பதங்களின்றி வேறு சொற்களால் தெரிவிக்க என்னால் இயலாதது என்பதே. படிப்பவர்கள் ஸகலருக்கும் எளிதில் பொருள்பட வேண்டுமென்பதையே முக்கியமாய்க் கருதி எழுதப்பட்டிருக்கின்றமையால் இப்புஸ்தகத்தில் இலக்கண வழுக்கள் ஏராளமாய் இருக்குமென்பது நிச்சயமே. ஆயினும் கற்றறிந்த பெரியோர் அதனால் இப்புஸ்தகத்தை இகழார் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாயுள்ளதென்பது இதனைப் படிப்பவர்க்கு நன்கு விளங்கும்.

அச்சுப்பிழை முதலிய குற்றம் இப்புஸ்தகத்தில் நிகழாதிருக்க வேண்டுமென்று கூடுமானவரையில் கவனிக்கப்பட்டதாயினும், அவ்வாறு பிழையிருக்கக்கூடும். மறு பதிப்பினில் அவைகளை விலக்கிக்கொள்ள ஆவலோடிருக்கின்றேன்.

இப்புஸ்தகம் இங்கிலீஷ் தெலுங்கு முதலிய பாஷாந்தரங்களில் மொழி பெயர்த்து அச்சிடவேண்டுமென்ற விருப்பம் எனக்கு விசேஷமாயுள்ளமையால் அவ்வாறு கூடிய சீக்கிரத்தில் வெளியாகுமென்றும் எண்ணுகிறேன். இப்புஸ்தகம் அச்சிட்டு வெளியாகமென்டுமென்ற பேராவலோடு பொருளுதவி புரிந்த மதிராஸ் தண்டையார்பேட்டை ம-ா-ா-ஸ்ரீ, ஜி. முநிஸாமிசெட்டியார். தம்புசெட்டி தெரு, ம-ா-ா-ஸ்ரீ, தி. நாராயணஸாமிசெட்டியார் ஷை தெரு ம-ா-ா ஸ்ரீ, கோதண்டராமசெட்டியார் கனதனவான்களும் விவேகிகளுமாகிய இவர்களுக்கு யான் என்றென்றும் நன்றி பாராட்டக்கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருவல்லிக்கேணி
ஸாதாரண ௵
மார்கழி ௴

கே. கணேசசாஸ்த்ரீ.

மருதூர்.

# மனஸ்தத்துவத்தின்

# விஷயாநுக்ரமணிகை.


| | |
|---|---|
| மனஸ்தத்துவ ஸங்கிரஹம் ... ... ... | 1 |
| மனம் ஸ்தூலசரீரமே என்னும் சங்கை ... ... | ,, |
| மனம் மூளையைத்தவிர வேறல்ல என்னும் சங்கை ... | 2 |
| மனம் மூளையிலும் வேறு என்பது ... ... ... | 3 |
| மனத்தின் பரிமாணத்தை பற்றிய சங்கை ... ... | 4 |
| மனத்தின் பரிமாண நிர்ணயம் ... ... | 5 |
| கிரியாஸ்தானத்திலும் கிரியையின்றி சும்மாவிருக்கும் இடமாகிய நிஜஸ்தானம் வேறு என்பது* ... ... | 6 |
| ஜாக்கிரத்கிரியாஸ்தானம் மூளையே என்பது ... ... | 7 |
| ஸ்வப்னக்கிரியாஸ்தானம் சிறுமூளை என்பது ... ... | 8 |
| ஸுஷுப்தியில் மனம் ஒழுங்குமிடம் ஹ்ருதய கமலம் என்பது | 9 |
| மனம் ஒடுங்கியபோது மிஞ்சியபொருள் அஞ்ஞானஸுகம் என்பது | 12 |
| மனஸ்தானப்ரமாணம் ... ... ... | 14 |
| மனம்செய்யும் வேலை ... ... ... | 15 |
| மனதிற்குள்ள காரணப்பொருளின் நிரூபணம் ... ... | 16 |
| அம்சம் அம்சியைச்சேரும் என்பது .. ... | 17 |
| மனம் இந்திரியம் பிராணன் இவைகள் ஸூக்ஷ்ம பூதங்களின் அம்சங்களால் உண்டாயின வென்பது ... ... | 19 |
| ஸூக்ஷ்மசரீர ஸ்வருபம் ... ... ... | 20 |
| மரித்ததும் மனத்தின் நிலமை ... ... ... | 21 |
| ஜீவன் ஸூக்ஷ்ம சரீர அவயவங்களைச் சேர்த்துக்கொண்டு லோகாகாந்தரம் செல்லுதல் ... ... | 21 |
| ஜன்மாந்தரம் உள்ளதென்னும் நிர்ணயம் ... ... | 22 |
| மற்றோர் ஸ்தூலத்தைபற்றிக்கொண்டு ஜீவன் லோகாந்தரம் செல்லுதல் ... ... ... ... | 25 |
| பார்த்திவ ஸ்தூலதேக நிரூபணம் ... ... | ,, |
| ஜலீயதேக நிரூபணம் ... ... ... | 26 |
| ஆக்கிநேய தேகநிரூபணம் ... ... ... | 27 |
| வாயவ்யதேக நிரூபணம் ... ... ... | 28 |
| ஸ்வர்க்க நரகஸ்வரூபம் ... ... ... | 29 |

பாவிகள் யாதனை தேகமல்லது வாயவ்யதேகத்தோடு நரகம் செல்லுதல் ... ... ... ... ,,
ஸ்வர்க்க நரகத்திலிருந்து ஜீவர் இங்கு வந்து பிறத்தல் ... ,,
ஸ்வர்க்கநரகங்களைப்பற்றிச்சொல்லும் மற்றவாது அபிப்பிராயத்தின் சுருக்கம் ... ... ... 30
ஸ்வர்க்க நரகங்கள் ஸ்தூல பூதங்களாகிய உலகங்கள் என்பது ... 31
ஸ்தூல ஸம்பந்தமின்றி மனோமாத்திரத்தால் ஸுகதுக்கானுபவம் நிகழாதென்பது ... ... ... 33
ஸ்வப்பனத்திலும் மனத்திற்கு ஸ்தூலதேக ஸம்பந்தமுள்ளதென்பது ... ... ... ... 34
ஸ்தூலசரீரமின்றி ஸுகதுக்க ஸங்கல்பாதிகள் நிகழாவென்பதற்கு பகவத்கீதா ஸம்மதி ... ... ... 35
ஆதித்திய சந்திராதிகள் லோகாந்தரம் என்பதற்கு ச்ருதி ப்ரமாண நிரூபணம் ... ... ... 36
லோகாந்தரத்திலிருந்து ஜீவர்கள் இங்குவந்து பிறத்தலுக்கு ச்ருதிப்ரமாணம் ... ... ... 37
ஜீவன் இத்தேகத்திலிருந்து வெளிப்பட்டு வேறு தேகத்தைப்பற்றிச்சென்று ஸ்வர்க்கநரகங்களில் ஸுகதுக்கங்களைப் புசிப்பதற்கு சிவகீதாப்ரமாணம் ... ...
உபாஸ்திசெய்தவர் ப்ரும்மலோகம் செல்லுவதற்கு ஷை பிரமாணம் 38
பஞ்ச பூதாம்சங்களாலாகிய வேறு சரீரத்தைப் பற்றிக்கொண்டு நரகம் செல்லுதற்கு மனுஸ்ம்ருதி ப்ரமாணம் ... ... ,,
ஸூக்ஷ்ம சரீராவயங்களை ஒழுங்கு சேர்த்துக்கொண்டு ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டு லோகாந்தரம் செல்லுதற்கு பகவத்கீதாஸம்மதி ... ... ,,
லோகாந்தரகதாகதிக்கு ப்ரஹ்மஸூத்திர ப்ரமாண நிரூபணம் ... ,,
தூங்கும்போது ஸ்தூலசரீரத்தை விட்டுப்பிரித்து விலக்கிவைத்து இறந்துபோன போனவர்களைக்கண்டு பேசலாம் என்பது யுக்திக்கொவ்வாததென்பது ... ... 39
ஸ்தூலசரீரமிராவிடில் கர்ம ஞானேந்திரியங்கள் வேலைசெய்யா என்பதற்கு ப்ரம்ஹஸூத்திர ஸம்மதி ... ... 40
மனத்திற்கு மோக்ஷம் வரையில் நாசமில்லையென்பது ... 41
வாஸனைகளே சுபாசுபகாரியங்களில் ஏவுகின்றன என்பது ... 42
ஈச்வரன் ஒருவன் இருக்கின்றான் எனும் நிரூபணம் ... 44
ஈச்வர ஸ்வரூப நிரூபணம் ... 46
ஸுஷுப்தியில் ஸுகமுள்ளதென்று நிரூபணம் ... ... 48
ஸுஷுப்தி ஸுகம் ஈச்வர ஸ்வபாவ நியதம் என்பது ... 50
அக்ஞானத்தைத் துலைக்கு முபாயம் ... ... ,,

வாஸனையை வெல்லும் உபாயம் ... ... 51
வாஸனை வேறு ப்ராரப்தகர்மம் வேறு என்பது ... ... 52
வாஸனைகளால் வரும் ஸங்கற்பகாமங்களை பௌருஷயத்தினத் தால் தடுக்கலாம் என்பது ... ... 53
ப்ராரப்தாயத்தமாகிய ஸுகதுக்கங்களைத் தடுத்தல் அரிது என்பது ... ... 54
வாஸனைகளுக்கும் ப்ராரப்த கர்மத்திற்கும் பேதமுள்ளது என்பதற்கு சுருதி, ப்ருஹ்ம ஸூத்திரம், வாஸிஷ்டம் முதலிய ப்ரமாணங்களின் ஸம்மதி ... ... ... 54
ஜீவன் முக்தி ... ... 56

முற்றிற்று.

ஸ்ரீரஸ்து

ஶாரதாயை நம:

# மனஸ் தத்துவம்.

---

மனது எனப்படுவது யாது? அது எங்குள்ளது? என்பது முதலிய விஷயங்களைப்பற்றி விவேகித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். ஸகல மனிதர்களும் பிரத்தியக்ஷமாய்க் காணுவது ஸ்தூல சரீரத்தையேயன்றி மனதைக் காணமுடியாது. விருப்பம், வெறுப்பு, ஸங்கற்பம், ஸந்தேகம், நிச்சயம், ஊஹம் முதலிய ஸகலமும் மனதின் செய்கையாம். மனது காணக்கூடாததாகிய நுட்பமான சக்திபோலுள்ளது. ஆதலால், அது ஸூக்ஷ்மம் என்னப்படுகின்றது

மனது என்பது ஸ்தூல சரீரமேயென்று நாஸ்திகர் சொல்லுகின்றனர். அதாவது, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, என்னும் நான்கு பூதங்களும் தேகவடிவமாய் பரிணமிக்குமாயின், அத்தேகத்தில் விமர்சசக்தி யேற்படுகின்றது. விருப்பம் முதலியவைகள் அந்த விமர்ச சக்தியாலேற்படுவதே தவிர வேறில்லை. மரணகாலத்தில் அந்த விமர்சசக்தி குலைந்தழிந்துபோகின்றதாதலால் தேஹமே மனதென்றேற்படுகின்றதென்று கொள்ளுகின்றனர். ஆனால். ஸ்தூலதேஹமே மனதென்பது உசிதமேயல்ல. ஸ்தூல தேஹாகாரமாய்ப் பரிணமித்த நான்குபூதங்களின் சேர்க்கைவசத்தால் விமர்சசக்தி ஏற்படுகின்றதென்பதுபற்றி ஸ்தூலதேஹமே மனதென்பதாயின், ஒன்றும் தெரியாத தூக்கமாகிய ஸுஷுப்திகாலத்திலும், மூர்ச்சை காலத்திலும், விமர்சசக்தியிருக்கவேண்டும். ஆனால், ஸுஷுப்தி மூர்ச்சை ஸமயங்களில் ஓர்விதமாகிய விமர்சத்தையுங் காணோம். தேஹாகாரமாய்ப் பரிணமித்ததுமுதல் மரணம் வரையில் விமர்சசக்தியுள்ளதெனின், ஸுஷுப்தி மூர்ச்சைகளில் அப்படிப்பட்ட சக்தி ஏன் காணப்படவில்லையென்றால் தக்க விடையில்லாமற் போகின்றதாதலால், இங்ஙனங் கொள்ளுவது கூடாதென்றறியப்படுகின்றது.

இனி ஸ்தூலதேஹத்தின் ஓர் பாகமாகிய மூளையே மனதென்று சொல்லக்கூடாதோவெனின், கூடாது. அஃதெங்ஙனமெனின், ஸ்தூல தேஹமானது, தோல், சதை, ரத்தம், மாம்ஸம், எலும்பு, மலம், மூத்திரம்,

கேசம், நகம் எனும் இவைகளின் சேர்க்கையே. பரிசோதித்துத்துப் பார்க்குங்கால், இவைகளைத்தவிர மற்றேதும் காணப்படுகின்றதில்லையாதலால் இவைகளே ஸ்தூலதேஹமென்னப்படுகின்றது. இனி மூளையானது ஸ்தூலதேஹமே யென்பது நன்ருய்த் தெரியக்கூடியது. மூளையே மனதென்ருல் மூளையுள்ளபோதெல்லாம் மனதின் தொழிலேற்படவேணடும். ஸுஷுப்தி, மூர்ச்சை முதலிய ஸமயங்களில்மூளை யுள்ளதன்றே ஆனல், அத்தருணம் மனம் வேலைசெய்யக்காணேமே அவ்விதமே மரித்த தேகத்திலும் மனது தொழிற்படுகின்றதாகக் காணப்படவில்லை. ஆதலால் ஸ்தூல சரீரமே மனதென்பது உசிதமல்ல. உண்மையில் மனதென்பது ஸ்தூலசரீரத்திலும் அந்நியம் என்றும், ஸ்தூலசரீரத்தில் ஓர் ஆற்றல்போ லுள்ளதாய், சங்கற்பம், காமம், நிச்சயம், ஊஹம் முதலியவைகளைச் செய்யும் ஓர் ஸூக்ஷ்மவஸ்துவென்றும் அறியவேண்டியது.

இனி மனதென்பது மூளையைத்தவிர வேறில்லையாதலால் மூளையே மனதென்று சொல்லத்தகும். மனதின்தோற்றமாவது Feeling, Thought, Will, உணர்ச்சி, எண்ணம். நிர்மானம் என்று மூன்றுவிதமாயுள்ளது. இம் மூன்றினுள் எது ஏற்பட்டாலும் மூளைகொஞ்சம் சலிக்கின்றது. இவ்வளவு மட்டுமேதவிர, மனது தொழிற்படுகின்றதென்பதைப் பரிசோதித்தால் வேறு யாதுங் காணப்படுகின்றதில்லை. இதனல், மனது தொழிற்படுகின்றதென்பது மூளையின் சலனமென்றே ஏற்படுகின்றமையால், சலனம் என்பதும் தொழிலேயாதலால், மனது மூளையே என்பது உசிதமாயிருக்க, மூளை வேறு மனம் வேறு என்று ஏன் சொல்லவேணடுமெனின். இது விவேகித்தறியாமல் சொல்லுதலே என்பதாம் அதாவது, மூளையென்பது சிரஸிலுள்ள ஓர் ஸ்தூலமாகிய பாகமாதலால், அது ஸ்தூல சரீரமேயென்றும், ஸ்தூல சரீரத்திற்கு அறியுந் தன்மையே இல்லையென்றும், பூர்வம் நிரூபிக்கப்பட்டதாயினும், அவ்வுண்மையை இங்கும் சற்று ஆராய்வோம். மூளையில் சலனம ஏற்படும்போது எண்ணம் முதலியது ஏற்படுகின்றது வாஸ்தவமே. மனது வேலைசெய்வதைப் பரிசோதித்தாலும் மூளையின்சலனத்தைத் தவிர வேறு யாதும் காணப்படுகின்றதில்லை யென்பதும் உசிதமே. மனம் ஸூக்ஷ்ம வஸ்துவாதலால் அது செய்யுந் தொழிலும் ஸூக்ஷ்மமே. பரிசோதித்துக் காணக்கூடியது ஸ்தூலப்பொருளும் அதன் கிரியையுமே தவிர, ஸூக்ஷ்ம வஸ்துவையாவது அதன் கிரியையாவது ஸ்தூலமாகிய பரிசோதனையால் காணமுடியாது மூளை சலிக்கும்போது மனதின் தொழிலாகிய எண்ணம், உணர்ச்சி முதலியவைகள் உண்டாகின்றனவென்பதைக்கொண்டே மூளையும்மனதும் ஒன்றென்னலாமா? ஸவாரி செய்வோனது கால்கள் சலிக்கும்போது ஸைக்கள் Cycle, ஓடுகின்றது. ஸைக்கிளும் ஸவாரிசெய்வோனது காலும் ஒன்றென்னலாமா? கடியாரத்திற்குள்ளுள்ள சக்கரம் சலிக்கும்போது மணிகாட்டி முள்ளும் நிமிஷங்காட்டி முள்ளும் சலிக்கின்றது. அதனல், கடியாரத்தின் சக்கரங்களும் மணி

நிமிஷங்காட்டும் முள்ளுகளும் ஒன்றென்னலாமா? சக்கரங்களின் சலனம் வேறு; முள்ளுகளின் சலனம் வேறு; முள்ளுகளின் சலனம் வெளிப்படையாய்க் காணப்படுகின்றது. சக்கரத்தின் சலனம் வெளியில் தெரிவதில்லை. சக்கரம் வெளியில் தெரியாதிருக்கும்போது அதன் சலனம் எப்படித்தெரியும்?

ஒன்று ஓர் வேலை செய்துக்கொண்டிருக்கும்போது மற்றொன்று ஓர் வேலைசெய்தால் இரண்டுவேலைகளையும் ஒன்றென்றுகொண்டு தொழிற்படுவனவாகிய இரு பொருள்களையும் ஒன்றென்பது உசிதமல்லவன்றோ; எண்ணம், உணர்ச்சி முதலியன சூக்ஷ்மக்கிரியைகள். மூளையின் சலனம் ஸ்தூலக்கிரியை. ஸ்தூல சூக்ஷ்மக்கிரியைகளிரண்டும் ஒன்றாவதெப்படி? ஸ்தூலமும் சூக்ஷ்மமும் ஒன்றாகுமானால், அதன் கிரியைகளும் ஒன்றாகுமென்னலாம். மணிகாட்டு முள்ளின் சலனமும் கடியாரத்திற்குள்ளுள்ள சக்கரத்தின் சலனமும் ஒன்றென்பது உசிதமாகுமானால், மூளையின் சலனமும் மனதின் வேலையும் ஒன்றென்பது உசிதமாகும். மூர்ச்சித்துக் கிடப்பவனுடைய மூளை சலிக்கும்படி தலையை எப்படியாவது அசைத்துவிடலாம். ஆனால் அத்தருணம் எண்ணம், உணர்ச்சிமுதலியது உண்டாகுமா? இறந்துபோன சவசரீரத்திலும் மூளையுள்ளதே; அதை எவ்வளவு சலிக்கச்செய்தாலும் எண்ணம் முதலியதுண்டாகுமா? ஆராய்ந்து பாராமல் மூளையும் மனதும் ஒன்றென்பது உசிதமேயல்ல. மூளையிருக்கின்றதேயாயினும் சிற்சில ஸமயம் எண்ணம் முதலிய தேற்படுகின்றதில்லையாதலால், நியாயாதிபதியும் அவருட்கார்ந்து வழக்கு விசாரிக்கும் ஆஸனமும் போலவே மனதும் மூளையுமென்பதுசிதம். நியாயஸ்தலத்தில ஆஸனம் எப்போதுமுள்ளதாயினும் நியாயாதிபதிஅதன்மீது உட்கார்ந்திருக்கும்போது நியாய விசாரணை செய்யப்படுகின்றது. அல்லாதபோது நியாயவிசாரணை செய்யப்படுகின்றதில்லை. இதுபோலவே மூளை எப்போதுமுள்ளதேயாயினும், அம்மூளையில் மனம் நன்றுதொழிற்படாவிடில் எண்ணம்முதலியதுண்டாகின்றதில்லை. மனம்வந்துவேலைசெய்யும்போது உணர்ச்சிமுதலியதேற்படுகின்றது. ஆதலால், மூளையிலும் மனம் அன்னியமே என்க.

இதுவரையில் செய்த ஆராய்ச்சியால் ஸ்தூலதேஹம் மனமல்லவென்றும், மனம் மூளையிலு மன்னியமாயுள்ளதென்றும், நிர்ணயிக்கப்பட்டது. இனி மனமானது ஸ்தூலதேஹமுழுதும் பரவியிருக்கும் வியாபகவஸ்துவா, அல்லது அத்தியந்த பரமாணுவஸ்துவா, அல்லது அத்தியந்த பரமாணுவும் விபுவுமல்லாது எந்தவஸ்துவோடு கூடுமோ அந்த வஸ்துவின் பரிமாணமுடையதாகும பரிச்சின்ன பரிமாணவஸ்துவா, எனின், இவ்வுண்மையைச் சற்று விவேகிக்கவேண்டும்.

உலகில் எந்த மனிதனுக்கும் யாதானும் ஓரிந்திரியத்தின்வழி அதன் விஷயமாகிய பொருள் அறியப்படும்போது மற்ற இந்திரியங்கள் வேலை

செய்யக்காணோம். உதாரணமாக நாம் அரிய விஷயங்களடங்கிய ஓர் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருக்கும்போது நம்மை நோக்கி எதானும் சமாசாரத்தை எவனுவது சொல்லுவானுயின், அது நமக்குத் தெரிவதில்லை. அதாவது கண் பார்த்துக்கொண்டிருக்கும்போது காது கேழ்ப்பதில்லை. காது ஓர் விஷயத்தைக் கவனித்துக்கொண்டிருக்கும்போது மற்ற இந்திரியங்கள் வேலை செய்வதில்லை. மனது விபுவாயிருந்தால் எல்லாவிந்திரியங்களிலும் எப்போதும் ஸம்பந்தித்துக்கொண்டிருக்கவேண்டும். ஆகையால் ஸமகாலத்திலேயே ஐந்து இந்திரியங்களும் வேலை செய்யவேண்டிய தவசியம் என்றேற்படுகின்றது. அது அநுபவ விரோதமாதலால் மனம் விபுவல்லஎன்பது பொருந்தும். மனது பரமாணு பரிமாண முடையதெனின், அது எந்த இந்திரியத்தோடு எப்போது ஸம்பந்திக்கின்றதோ அந்த ஸமயத்தில் அந்த இந்திரியம் வேலை செய்கின்றதென்பதும், மற்ற இந்திரியங்கள் வேலை செய்வதில்லையென்பதும் உசிதமாகின்றது, ஆதலால், மனம் அத்தியந்தம் அணு என்பதே தகும் என்றறியவேண்டியதாம்.

மனதை அணுவென்பது உசிதமல்ல. ஓரேகாலத்தில் ஐந்து இந்திரியங்களும் வேலைசெய்வது லோகாநுபவத்தில் உள்ளதே. பெரிய முறுக்கு அப்பளாம்முதலிய தின்பண்டங்களைத்தின்பதாகிய ஒரேகாலத்தில் அதன் ரூபமும், அதன் பரிசமும், அது நொருங்கும்போதுண்டாகும்சப்தமும், அதன் வாசனையும் அறியப்படுகின்றது. அஷ்டாவதானம் செய்பவனுக்கும்எல்லாவிந்திரியங்களும் ஸமகாலத்திலேயே வேலைசெய்கின்றது. இவ்வனுபவங்களைக் கவனித்தால், மனது ஏககாலத்தில் எல்லா விந்திரியங்களிலும் ஸம்பந்தமுள்ளது பற்றி விபுவே என்பது உசிதமாயிருக்க, என் அணுவென்று சொல்லவேண்டுமெனின், இங்கு திருஷ்டாந்தமாகக் காட்டப்பட்ட விஷயங்களைக் கவனிக்கினும் மனது அணுவென்பதே உசிதமெனக் காணப்படுகின்றதென்க. அதாவது மனம் அணுவாயினும் மிக்க வேகமுடையதாதலால் அதிவிரைவினில் ஒன்றுவிட் டொன்றுய்ப் போக்கு வரவு செய்கின்றது. அவ்விதம் சஞ்சரிக்கும் காலபேதம் மிக்க நுட்பமாதலால் அது நமக்கு விசதமாய்த் தெரியாமல் ஒரேகாலத்தில் ஐந்து இந்திரியங்களோடும் ஸம்பந்தித்துள்ளதாய்த்தோன்றுகின்றது. எண்ணிறந்த தாமரையிதழ்களை வரிசையாய் அடுக்கிவைத்துக்கொண்டு கூர்மையாகிய ஊசியால் அவைகளைக்குத்தினுல், அவ்விதழ்களெல்லாம் ஓர் நொடிப்போதில் துளைக்கப்பட்டனவாயினும், ஒவ்வோரிதழோடும் ஊசிஸம்பந்தித்த க்ஷணலேசங்கள் வேறுகவேயுள்ளன. அவ்விதம் ஊசிஸம் பந்தித்தது அதிவிரைவினில் ஆதலால், அந்த க்ஷணலேசபேதம் தனித்தனியே தோன்றுமல் ஒரே ஸமயத்தில் துளைக்கப்பட்டதெனப் பிரமம் ஏற்படுகின்றது. இது போலவே முற்கூறிய திருஷ்டாந்தங்களிலும் என்க. மனது, இந்திரியத்தோடு ஸம்பந்தித்த க்ஷணலேசம் வேறுவேருகவே யுள்ளதாயினும், அக்ஷணலேச பேதம் நுட்பமாயுள்ளதாதலால் நமக்குத் தெரிவதில்லை. அஷ்டாவதானம்

செய்ய அப்பியஸிப்பது, மனதை சீக்கிரமாய் ஒவ்வோரிந்திரியத்தோடும் ஸம்பந்திக்க அப்பியாஸம் செய்வதேயாம். ஆதலால் மனம் விபுவல்ல. அன்றியும், விபுவாயுள்ளதெனின் எல்லா விந்திரியஙகளோடும் எப்போதும் ஸம்பந்த மிருக்கவேண்டுமாதலால், ஸ்வப்பனத்தில் வெளிப்பொருளும், ஸுஷுப்தியில் எப்பொருளும் தோன்ருமலிருப்பதற்கு நியாயமில்லாமற்போகின்றது. இவ்விதம் கவனிக்க மனது அணுவென்று தோன்றுகின்றது.

இவ்விதம் மனது அணுவென்பதே உசிதமென்று தோன்றினும், உண்மையில் எந்த வஸ்துவோடு கூடுகின்றதோ, அந்த வஸ்துவின் பரிமாணம் மனதிற்கு ஏற்படுகின்றது என்பது ஸர்வானுபவஸித்தம். உண்மையில் அணுவெனின், எப்போதும மனம அணுவாகவே யிருக்கவேணடும். விபுவெனின், எப்போதும் விபுவாகவே யிருககவேணடும். ஆனல் அப்படி ஒரே விதமாய் இருப்பதில்லை. ஓர்ஸமயம் பெரிய வஸ்துவில் செல்லும்போது மனது அந்தவஸ்துவின் பரிமாணத்தைப பெறுகினறது. சிறியவஸ்துவில் செல்லும்போது அவ்வஸ்துவின் பரிமாணத்தைப் பெறுகின்றது. இதனுல் மனது பரிசின்ன பரிமாண முடையதும, அத்தியந்த நுட்பமாகியதும், அற்புதமாகிய ஆற்றலுடையதுமான ஓர் விசித்திர தத்துவம என்றே யறிதல் உசிதம் என்க.

ஓர் ஜந்துவுக்கு ஒரே மனமா, அல்லது அநேக மனமா, எனின் ஓர் மனமே என்க. கத்தி முதலியவைகளால் துண்டிக்கப்பட்ட அரணை, தேள், பூரான் முதலிய ஜநதுககளின் இரணடு மூன்று துணடஙகளிலும் சலனம் (அசைவு)என்பது ஏற்படுகின்றது. அசசலனம் வேதனையாலேயே யன்ருே. வேதனை மனமின்றி ஏற்படாதாதலால, இரணடுமூன்று துண்டஙகளிலும் இரணடு மூன்று மனம் உள்ளதாக ஒத்துக்கொள்ளவேணடியதாகின்றது. ஆதலால் ஒவ்வோர் தேகத்திறகும் அநேக மனங்களுள்ளன என்பது உசிதமேயெனின் அல்ல அதாவது சலனமேற்படுதற்குக்காரணம் வேதனையேயென்பது ஸரியல்ல. ரததத்தின முறிவாகிய மாற்பாட்டினுலும், வாயுவினுலும் சலனம் ஏற்படக்கூடும். ஆதலால் முற்கூறியனவாகிய ஜந்துக்களின் துண்டுபட்ட அவயவஙகளிலும், ரக்தமுறிவு முதலிய மாறுபாடு ஏற்படக்கூடுமாதலால், சலனம் மனமின்றியும் ஏற்படலாம். ஆதலின் ஓர் தேகத்திற்கு ஓர் மனமே என்பது உசிதம் என்க.

இவ்விதம் மனம் அணுவென்பதும், அது விசித்திரமாகிய செய்கையைச் செய்யக்கூடிய அபார மஹிமையுடைய பதார்த்த மென்பதும் ஒருவாறறிவிப்பட்டது. இனி மனது ஸ்தூல தேகத்தில் எந்தவிடத்திலுள்ளது, என்பதைப்பற்றிச் சற்று விவேகித்தறியவேணடும். அதாவது ஆரிய சாஸ்திரம் கற்றுணர்ந்தவர்கள் மனஸ்தானம் இருதயகமலம் என்கின்றனர். தற்காலம் வஸ்து பரிசோதனையில் மிக்க யத்தினத்தோடுழைக்கும் மேற்குத் திசையோரது சாஸ்திரம் படித்தவர், மனஸ்தானம் Brain,

மூளை என்கின்றனர். ஸ்தானமாவது. இடம் எனும் பொருளையுடைய சொல் என்றறிக. மஹாமேதாவிகளாலும் Brain மூளையே மனஸ்தான மென்று நிச்சயிக்கப்பட்டதாயிருக்க இருதய கமலமே மனஸ்தானம் என்பது எப்படி நம்பப்படும் எனின் இதைச்சற்று ஆராய்வாம்.

கிரியை நிகழும் இடமானது கிரியாஸ்தானம் என்னப்படும். கிரியை, தொழில், வேலை Action, எனும் சொற்கள் ஒரே அர்த்தத்தையுடையன. உழுது பயிரிடுதல் ஓர்கிரியை. அது நிகழும் ஸ்தானம் வயல். கிரியையைச் செய்வோனுடையஇருப்பிடம் அதாவது வேலைசெய்யா திருக்குமிடம் நிஜ ஸ்தானமென்னப்படும். உலகில் கிரியாஸ்தானத்தைக் காட்டிலும்,அக்கிரியையைச் செய்வோனது சும்மாவிருக்கும் ஸ்தானமாகிய நிஜஸ்தானம் வேறாகவேயிருக்கின்றது. அக்கினியின் கிரியையாகிய தஹித்தல் கட்டைக்கு வெளியிலும், அதனிருப்பிடம் கட்டையிலும். காற்றிலும் உள்ளது. மின்சாரத்தின் கிரியை கம்பிவழியாய்ப் பலதூரம் சென்று பிரகாசத்தையுண்டு பண்ணுதல், வண்டியைச செல்லுவித்தல் முதலியது. நிஜஸ்தானம் கம்பியிலும் அந்நியமே. மாடு குதிரை முதலியவைகளின் கிரியையாகிய பொதி சுமந்துபோதல், வண்டி யிழுத்தல் முதலியதின் ஸ்தானம் சாலைவீதி முதலியனவும், அவைகளின் நிஜஸ்தானம் தொழுவம்,லாயம் முதலியனவுமாயுள்ளது. குடியானவனது வேலையாகிய உழுது பயிரிடுதல் முதலியதின் ஸ்தானம்வயலும், அவனது நிஜஸ்தானம் வீடுமாயுள்ளது. நியாயாதிபதியின் கிரியையாகிய வழக்கு விசாரித்தலின் ஸ்தானம் கோர்ட்டும், அவரது நிஜஸ்தானம் வீடுமாயுள்ளது.

இவ்விதம் உலகிலுள்ள எந்த திருஷ்டாந்தத்தைக் கவனித்தாலும், கிரியாஸ்தானத்தைக் காட்டிலும் நிஜஸ்தானம் வேறாகவேயுள்ளது என்பது பிரத்தியக்ஷமாய்க் காணக்கூடியதாதலால்,பிரத்தியக்ஷமாய் அனுபவிக்கப்பட்டுள்ளதாகிய இந்த நியமத்தை மறுக்க நியாயம் யாதுமில்லை. ஆதலின் சேதனத்தின் கிரியையாயினும் அசேதனத்தின் கிரியையாயினும் கிரியாஸ்தானத்தைக் காட்டிலும் கிரியையின்றியுள்ளதாகிய நிஜஸ்தானம் வேறு என்பது நியாயஸித்தம் என்க.

கிரியையானது பாஹ்யக்கிரியை,ஆந்தரக்கிரியை என்றிருவிதமாயுள்ளது.பாஹ்யக்கிரியையாவது வெளியில காணக்கூடியனவாகிய தஹித்தல், சலித்தல், வண்டியிழுத்தல், உழுதல்,வழக்குவிசாரித்தல் முதலிய கிரியையாம். ஆந்தரக்கிரியையாவது உள்ளத்தில் நடக்கின்றனவாகிய விரும்புதல், வெறுத்தல், ஊஹித்தல், ஸந்தேகித்தல், சிந்தித்தல், நிசசயித்தல் முதலியதாகிய மனம் செய்யும் வேலையே யென்றறிக.

மனது வேலைசெய்யுமிடம் மூளையென்பதை நாமும் ஒத்துக்கொள்கின்றோம். ஆனால் மனதிற்கு மூளை நிஜஸ்தானமல்ல என்பதே,நாம் அறியவேண்டியது. மேற்குத்திசையோர் மனதின் ஸ்தானம் மூளைஎனும் இட

மே என்கின்றனர். உண்மையில் மூளையைப்போல வேறு இடமுமுண்டு. ஆனால் இவைகள் கிரியாஸ்தானங்களேதவிர மனதின் நிஜஸ்தானமல்லவென்பதறியத்தக்கது. மனது வேலைசெய்யுமிடம் மூளையென்பது யுக்தியனுபவங்களுக்கிணங்கி யிருக்கின்றமையால், யாம் அதை யொத்துக்கொள்ளத்தடையேதுமில்லை. ஆனால் கிரியாஸ்தானத்தைக் காட்டிலும் சும்மாவிருக்குமிடமாகிய நிஜஸ்தானம் வேறு, என்னும் நியாயத்தை இங்கு அநுஸரிக்கவேண்டும். அப்படி அநுஸரித்துப் பார்க்கின் மனது வேலைசெய்யுமிடமாகிய மூளையெனும் கிரியாஸ்தானத்தைக் காட்டிலும், அது வேலைசெய்யாதிருக்குமிடமாகிய நிஜஸ்தானம் வேறாகவே யிருக்கவேண்டுமென்றேற்படுகின்றது. மனது வேலைசெய்யுமிடம் மூளையென்பது நம்மிருவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட விஷயம். ஆனால் அதன் நிஜஸ்தானம் இன்னதென்பதை விவேகித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இனி மூளையிலேயே White matter, Grey matter, என்றிரண்டிடமுள்ளது இவைகளுள் ஏதானும் ஓரிடத்தை கிரியாஸ்தானமாகவும், மற்றோரிடத்தை நிஜஸ்தானமாகவும் கொண்டு மூளையெனும் ஓரிடமே கிரியாஸ்தானமென்றும், நிஜஸ்தான மென்றும் சொல்லக்கூடாதோ, எனின் அல்ல. அதாவது மனது செய்யும் வேலை யிரண்டு விதமாயுள்ளது. ஸரியாய்ச் செய்யும் வேலையொன்று, தாறுமாறாய்ச்செய்யும் வேலையொன்று. ஸரியாய் வேலைசெய்யும்போதுள்ள தோற்றம் உண்மையாகவும், தாறுமாறாக வேலைசெய்யும் போதுள்ள தோற்றம் பொய்யாகவும் இருக்கின்றது. ஸரியாய் வேலைசெய்யும்போது ஜாக்கிரத் என்றும், தாறுமாறாக வேலைசெய்யும்போது ஸ்வப்பனம் என்றும் சொல்லப்படும். விழித்துக்கொண்டிருக்கும்போதுள்ள நிலைமைஜாக்கிரத் என்றும், கண் காதுமுதலிய ஸகல இந்திரியங்களும் அடங்கியும் மனதுமாத்திரம் அடங்காமல் காசிக்கு வடக்கில் ராமேச்வரமும், கங்கைக்கு வடக்கில் தாமிரபர்ணியும் இருக்கின்றதாகவும் மரம் முதலியது பேசுகின்றதாகவும், தான் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்றதாகவும் இதுபோன்ற தாறுமாறாய் எண்ணுதலாகிய வேலையைச் செய்தல் ஸ்வப்பனாவஸ்தையென்று மறிக.

இனி ஜாக்கிரத் காலத்திலும் ஸ்வப்பன காலத்திலும், மனது வேலை செய்வது மூளையெனும் ஒரே இடத்திலா, அல்லது வேறு வேறிடத்திலா என்றுஆராய்ந்து பார்க்கவேண்டும். பித்தர் முதலியவர்களுக்கு விழித்துக்கொண்டிருக்கும்போதே தாறுமாறாய்த் தோன்றுதலுக்குக் காரணம் மனம் வேலைசெய்யும் ஸ்தானமாகிய மூளை கெட்டுப்போனதே என்பது எல்லோராலும் அறியப்பட்ட விஷயம். பித்தர்களுக்கு மனது ஸரியாய் வேலைசெய்யவேண்டுமானால் தக்க சிகித்ஸையைச்செய்து மூளையின் கேட்டைப் போக்கிக்கொள்ளவேண்டும். பித்தர்களுக்கு மனது மூளையிலேயே வேலை செய்தாலும், கிரியாஸதானம் கெட்டுப்போனமையால் தாறுமாறு

கத் தோன்றுகின்றது ஸ்வப்பனகாலத்திலும் மூளையிலேயே மனதுவேலை செய்கின்றதெனின்,ஜாக்கிரத்தில் போலவே ஸரியான தோற்றமே ஏற்படவேண்டும். அவ்விதமின்றி ஸ்வப்பனகாலத்தில் மாத்திரம் தாறுமாருகத் தோன்றுகிறதற்கு நியாயமில்லை. இனி ஸ்வப்பனகாலத்திலும் மனம் மூளையிலேயே வேலை செய்கின்றதாயினும் அத்தருணம்மாத்திரம் மூளை கெட்டுப்போகின்றது எனின்,பிறகு மூளையின் கேட்டைப் போக்குதலுக்குத்தக்க சிகித்சை யேற்பட்டே ஸகலருக்கும் ஜாக்கிரதில் ஸரியான தோற்ற மேற்படவேண்டும். ஆனல் உலகில் ஸ்வப்பனம் காண்போர்களெல்லோரும் ஜாக்கிரத்தில் வருவதற்குச் சிகித்ஸை செய்துகொள்ளுகிருர்கள் என்பது கண்டதுமில்லை கேட்டதுமில்லை. ஆதலால் ஸ்வப்பனத்தில் மனம் வேலைசெய்யுமிடம்,மூளைக்கந்நியமாயுள்ள வேறு இடமென்றே சொல்லும்படியாயிருக்கின்றது கட்குடித்தவர்களுக்கு மனது மூளையிலேயே வேலைசெய்கின்றதாயினும் தாறுமாருய்த் தோற்றமேற்படுவது போலவே ஸ்வப்பனகாலத்திலுமுள்ளது, என்பது உசிதமன்றே என்ருல் உசிதமல்லவென்க. அதாவது கட்குடித்தவர்க ளெல்லோருக்கும் மனது தாறுமாருய் வேலைசெய்கின்றதில்லை. சிலர் எவ்வளவு குடித்தாலும் புத்தி நிலை தவருமலிருக்கக்காணகின்ரேம். சிலருக்கு குடித்தபின் முன்னிலும் தீக்ஷ்ணமாய் புத்தி வேலை செய்வதையும் காணகின்ரேம் குடித்தவர்களுக்குக் கண் காது முதலிய இந்திரியஙகளும் வேலை செய்கின்றன. எவருக்கும ஸ்வப்பனம் காணும்போது இந்திரியம் வேலை செய்வதில்லை ஆதலின் ஸ்வப்பனம் காணபோர்களையும் குடித்தவர்களையும் ஸமமாய்ச்சொல்லக்கூடாது ஸ்வப்பனத்தில் ஜாக்கிரத் வேலையின் ஸ்தானமாகிய மூளையைக்காட்டிலும் வேறு இடத்திலேயே மனது வேலைசெய்கின்றதாகச் சொல்லவேண்டும். White matter, Grey matter, எனும் இரண்டிடங்களுள் ஒன்றை ஜாக்கிரத்கிரியாஸ்தானமாகவும், மற்றென்றை வேலையின்றியுள்ள நிஜஸ்தானமாகவும், சொன்னல்ஸ்வப்பனக் கிரியாஸ்தானம் யாது, எனின், அதற்கு தக்கவிடை சொல்லவேண்டுமன்ரே; இனி அதனை யாம் சொல்லுவாம் ஜாக்கிரத் கிரியாஸ்தானம்போல் அவ்வளவு விஸ்தாரமிராவிடினும்அநேகமாய் ஜாக்கிரத்தில் பரிசயம்பெற்ற பொருளையே ஸ்வப்பனத்தில் தாறுமாருகச சிந்திக்கின்றமையால் மூளையினினம் போன்றதும் சிறிதாயுமுள்ள ஓர் இடமிருக்க வேண்டுமென்றேற்படுகின்றது. இனி அவ்விதமாகிய இடம் யாதெனின், அது கழுத்தின் பிறபக்கத்துள்ள சிறுமூளை Little brain எனும் இடம் என்றறிக. அதுவே Cerebellum, என்றும் சொல்லப்படும்

இதுவரையில் ஆராய்ச்சிசெய்ததில், ஸ்தூலதேகத்திலுள்ள அணுவாகிய ஓர் ஸூக்ஷ்ம பதார்த்தமே மனதென்றும்.அது ஜாக்கிரத்தில் வேலை செய்யுமிடம் மூளை யென்றும், ஸ்வப்பனத்தில் வேலை செய்யுமிடம் Cerebellum, என்னுமிடம் என்றும், மூளையும் மனதும் ஒன்றல்ல வென்றும்,

மனதிற்கு மூளை நியாயாதிபருக்கு அவரது ஆஸனம்போலுள்ளதென்றும் நிர்ணயிக்கப்பட்டது. மூளையிலிருந்து சிறுமூளைக்கு, மனது எது வழியாய்ப் போக்குவரத்து செய்கின்றதெனின், மின்சாரமானது கம்பிவழியாய்ப் போக்குவரத்து செய்கின்றதுபோல நுட்பமாகிய நாடியின் வழியாய்ப் போக்குவரத்து செய்கின்றதென்க. மின்சாரமானது தான் அபிவ்யக்தமாகும் இடமாகிய நிஜஸ்தானத்திலிருந்து கம்பிவழியாய்ப் பலதூரம் சென்று, பற்பல விடங்களில் பற்பல வேலைகளைச் செய்வது போலவே, மனதும் தனது நிஜஸ்தானத்திலிருந்து நாடியின் வழியாய் Cerebellum சிறுமூளை, Brain மூளை, எனும் இடங்களில் வந்து ஸ்வப்பன ஜாக்கிரங்களைச் செய்கின்றது.

மனது வேலையின்றி சும்மாவிருக்குமிடமாகிய நிஜஸ்தானம் யாது, எனின் கிரியாஸ்தானத்திலும் நிஜஸ்தானம் வேறு என்று முற்கூறிய நியாயத்தின்படி, மூளை சிறுமூளை யெனும் இரண்டிடங்களும் கிரியாஸ்தானங்களாதலால், அவ்விடங்களுக்கு அந்நியமாகவே யிருக்கவேண்டுமென் றறியப்படுகின்றது. அந்த இடம் ஹ்ருதய கமலமேயாம். மனதிற்கு விருத்தி நிலமை, விருத்தியபாவநிலமை என்றிரண்டு நிலமைகளுள்ளன. காமம், ஸங்கற்பம், ஸந்தேகம் முதலிய மனத்தோற்றமுள்ள ஜாக்கிரஸ்வப்பனங்கள் விருத்தி நிலமை யென்றும், காமஸங்கல்பாதிகளுள் யாதுமின்றி உபசாந்தமாய்த் தூங்குதலாகிய ஸுஷுப்தியே, விருத்தியபாவநிலமை என்றும் அறிக. மனது விருத்தியிராவிடில் லயமடைந்திருக்கும். ஆதலின் நிஜஸ்தானத்தை லயஸ்தான மென்றும், இங்கு சொல்லுவது தகும். லயமாவது முன்னரும் தோற்றமுற்றுப் பின்னரும் தோற்றமுற்றுத் தற்காலத்தில் மாத்திரம் தோற்றமிரா திருத்தலே என்க. உதாரணமாக, பனிக்கட்டியானது, முந்தி திரவரூபமாயிருந்திருக்கின்றது. இனியும் திரவரூபமாகக் கூடும். ஆயினும் தற்காலம் மாத்திரம் திரவரூபம் மாறி கனரூபம் பெற்றிருக்கின்றது. ஆதலின் ஜலம் லயித்திருக்கின்றதென்பதாம்.

Phonograph எனும் சப்தாநுகரண யந்திரத்தினுருளையில் கிரஹிக்கப்பெற்ற கீதநாதமானது ஸூக்ஷ்ம ரூபமாய் லயித்திருக்கின்றதென்பது தகும். முந்தியும் நாதரூபமாய் பிறர்காதுக்குக் கேட்கப்படும் படியான நிலமையிலிருந்து பின்னரும் பிறர்காதுக் கெட்டக்கூடிய நிலமையிலிருந்தும், இடையில் சிலகாலம் மாத்திரமே நாதரூபம் தோன்றாமல் பதிவுருபமாயிருக்கின்றதாதலால், அதையும் உதாரணமாய்க் கொள்ளலாம். இவ்விதமே மனதிற்கும் உள்ளதென்க மனது முன்னரும் காமஸங்கல்ப முதலிய உருவமாய்த் தோற்றமுற்று, பின்னரும் காமஸங்கல்பாதி வுருவமாய்த்தோற்ற முறுவதாய், இடையில் சிலகாலம் மாத்திரமே காமஸங்கல் பாதிகள் யாதுமின்றி லயித்திருக்கின்றது. இத்தகைய லயத்தை

யடைந்திருக்கும்போது மனது ஸூக்ஷ்ம ரூபமாயிருக்கின்றதென்றும், பிறகு ஸ்வப்பன ஜாக்கிரங்களில் காமஸங்கற்பாதி வடிவமாய்த் தோற்ற முறுதலை மனது ஸ்தூல ரூபமாயிருக்கின்றதென்றும் சொல்லலாம். அப்படி மனம் ஸூக்ஷ்ம ரூபமாய் ஸுஷுப்தியி லடங்கியிருத்தலை, லயம் என்றும் சொல்லுவதாம். ஆதலால், நிஜஸ்தானம், ஸுஷுப்தி ஸ்தானம், லயஸ்தானம், ஸூக்ஷ்ம ஸ்தானம் எனும் சொற்கள் ஒரே அர்த்தத்தையுடையன வென்றறிக.

ஹ்ருதய கமலமாவது, கேவலம் ரக்தம் நிறைந்துள்ளவிடம். அது சற்றேறக்குறைய தாமரைமொக்குப் போலுள்ள மாம்ஸகண்டம். இவ்விதமிருக்கினும், அந்த இடமானது நாடியின்வழி சென்று மனது ஸூக்ஷ்மமாய் லயித்திருக்கத்தக்க இயல்புடையது. ஹ்ருதயகமலத்திலிருந்து பற்பல நாடிகள் வெளிப்படுகின்றன. அந்நாடிகள் பற்பல அவயவங்களில் சென்றிருக்கின்றன. மூளை, சிறுமூளை எனும் இரண்டிடங்களிலும் மனது பற்பலவாறாய் காமஸங்கல்பாதி விருத்திகளாய்த் தோற்றமுற்று நடித்தலாகிய, ஜாக்கிர ஸ்வப்பனங்களில் உழன்று. பின்னர் ஹ்ருதயகமலத்திற்கு நாடியின் வழியாய் வந்து, அடங்கிவிடுகின்றது. அந்த ஸமயம் ஒன்றும் தெரியவில்லை. இன்னதென்று சொல்லக்கூடாத அலௌகிகமாகிய ஹர்ஸுக முள்ளது.

இனி ரக்தநாடிகள் நிறைந்துள்ளதாகிய ஹ்ருதயகமலம் எனும் இடத்தில் மனம் அடங்குகின்றதென்பது யுக்திக்கொவ்வுகின்றதாயில்லையே; அதனையெப்படி ஒத்துக்கொள்ளுவது எனின். அதாவது. உலகில் நமது புத்தியின் யுக்திக்கெட்டவில்லை யென்பதுகொண்டு ஓர் விஷயத்தை மறுப்பது உசிதமல்ல. பெரிய விருக்ஷமானது, கண்ணுக்கு நன்றாய்ப்புலப்படாத அதிஸூக்ஷ்மமாகிய விதையில் அடங்கியிருக்கின்றதென்பது நம்மால் நிச்சயமாய் ஒத்துக்கொள்ளப்படும் விஷயமே. ஆயினும் அவ்வளவு பெரும் விருக்ஷம் இவ்வளவு சிறியவிதையில் அடங்கியிருக்கின்றதெவ்விதமென்று யோஜித்துப் பார்ப்போமானால் அது நமது புத்தியின் யுக்திக்கு நன்றாய் எட்டவில்லை. ஏதோ சக்திரூபமாய் இவ்விதையில் மரம் அடங்கியிருக்கின்றதென்று வாசாமாத்திரமாகவே சொல்லவேண்டியதாகின்றது.

யோநிவாய்ப்பட்டு கர்ப்பகோசம் சென்றது ஓர் சிறு துளியே. உட்புகும்போது அதிஸூக்ஷ்மமாய் உள்ளதாயினும், வெளி வரும்போது தலை, உடல், கை, கால்முதலிய அவயவங்களோடு கூடி, ஸ்தூலமாயிருத்தல் நம்மால் காணக்கூடியதே. உள்செல்லும்போது அதிஸூக்ஷ்மமாயிருந்த, திரவம், வெளிவரும்போது இவ்விதம் அங்கப்ரத்தியங்கங்களோடு வந்ததெவ்விதமெனின், அது யுக்திக்கெட்டவில்லை. ஏதோ ஸ்வபாவமென்றே சொல்லவேண்டியதாகின்றது. Oxygen ஆக்ஸிஜன் Carbou கார்பன்

ஆகிய இரண்டும் சேர்ந்து கெமிகல் ஆக்ஷன் Chemical Action ஏற்பட்டு ஜ்வாலைரூபமான ஸ்தூலத்தன்மையை அக்கினி பெறுகின்றது. ஜ்வாலை ரூபமாகிய ஸ்தூலத்தன்மையைப் பெறுதற்குமுன் கட்டையிலும் ஆக்ஸிஜனிலும் அக்கினிகாரண ரூபமாயிருக்கின்றது என்பது உசிதம் இவ்வளவு பிரகாசமாயுள்ள ஜ்வாலை இக்கட்டையிலும் ஆக்ஸிஜனிலும் எப்படி அடங்கியிருந்ததெனின், அதுவும் நமது புத்திக்கு யுக்தமாகத் தோன்றவில்லை. பழத்திற்குக்காயும், காய்க்குப்பிஞ்சும், பிஞ்சுக்குப்பூவும் காரணமென்பது எவருமறிந்த விஷயம். காரணத்திலில்லாதது காரியத்தில் வாராது என்பது நியாயஸித்தமாதலின், பழத்திலுள்ள விசேஷத்திற்கு ப்பூவிலுள்ள விசேஷம் காரணம் என்பதில் ஆக்ஷேபத்திற் கிடம்யாதுமில்லை. ஆதலால் பழத்திலுள்ள அற்புதமாகிய தித்திப்பு ப்பூவிலுமிருக்கின்றதென்றே யொத்துக்கொள்ள வேண்டியதாகின்றது பூவிலோ அம்மாதுர்யம் காணப்படுகின்றதில்லை யாயினும், அதில் அடங்கியே யுள்ளதென்பது நியாயஸித்தம். அப்படிப்பட்ட மாதுர்யம் பூவில் எப்படி அடங்கியிருக்கின்றதெனின், அதுவும் யுக்திக்கெட்டுவதில்லை. யுக்திக்கெட்டாததாயினும் நியாயவாயிலாக ஒத்துக்கொள்ளவேண்டிய விஷயங்கள் உலகில் எண்ணிறந்தனவா யிருக்கின்றன. விதையில் மரமும், ரேதஸில் புருஷனும், கட்டையில் அக்கினிஜ்வாலையும், பூவினில் தித்திப்பும் அடங்கியிருந்ததல், மனதிற்கெட்டா விடினும் எப்படி ஸ்வபாவமென்று சொல்லவேண்டிய தாயுள்ளதோ, அப்படியே ஹ்ருதயகமலத்தில் மனம் ஒடுங்கியிருக்கக்கூடிய ஸ்வபாவமுள்ளது என்பது உசிதமென்றறிக.

மனம் ஹ்ருதயகமலத்தில் ஸுஷுப்தி காலத்தில் ஒடுங்கியிருக்கின்றதென்பதை ஒத்துக்கொள்ளுகின்றோம். இனி அவ்விதம் மனம் ஒடுங்கிய ஸமயத்தில் மிஞ்சியுள்ளது யாது? எனின் சொல்லுவாம். உலகில் காரணமிராவிடில் காரியமில்லை; காரணமிருந்தே காரியம் ஏற்படவேண்டியது; என்பது நியதமே. உதாரணமாக, மண், பொன் முதலிய காரணமின்றி குடம் முதலியதேற்படுகின்றதில்லை. நெருப்பின்றி புகையில்லை. காரணம் பிரத்தியக்ஷமாய்க் காணப்படாவிடினும் அதன் காரியத்தைக்கொண்டு அனுமானித்தறியக்கூடும். தூரத்தில் புகையை மாத்திரம் கண்டு, நெருப்பு அங்குள்ளதென்று அனுமானிக்கலாம். வீட்டிற்குள் இருக்கும்போது இடிசசத்தம் கேட்கப்படுகின்றதை மாத்திரம் கொண்டு ஆகாயத்தில் இத்தருணம் மேகமுள்ள தென்றறியலாம். இவ்விதமேயன்றி, காரணமிராமல் காரியமுள்ளதென்பதை எவரும் ஒத்துக்கொள்ள மாட்டார். ஆதலால் காரணமின்றி காரியம் ஏற்படாது என்பது, நியாயஸித்தமே யென்றறிக.

ஸ்மரணத்திற்கு(நினைவிற்கு) உள்ளகாரணம் அனுபவமேயாம். பூர்வம் எதனையாகிலும் கேழ்வையாலாவது பார்வையாலாவது அனுபவித்திருந்தால் பிறகு அது நினைவிற்கு வரும். காசியெனும் நகரத்தை நினைத்தோ

மானால் பூர்வம் அந்நகரை, பார்வையாலாவது, கேழ்வையாலாவது அனுபவித்திருந்திருக்க வேண்டும் என்பது நிச்சயமே. நெருப்பின்றி புகையில்லை என்பதுபோலவே அனுபவமின்றி ஸ்மரணமில்லை என்பதும் என்க.

ஸுஷுப்தி நீங்கியதும் ஸகலரும் இதுகாறும் நான் ஒன்றும் தெரியாமல் ஸுகமாய்த் தூங்கினேன் என்கின்றனர். ஒருவருக்கு அல்லது இருவருக்கு மாத்திரம் இப்படியில்லை. ஸ்வப்பனம் காணாமல் நல்ல நித்திரை செய்த ஸகல மனிதர்களுக்கும் தூங்கி யெழுந்ததும் "ஒன்றும்தெரியாமல் ஸுகமாய்த் தூங்கினோம்" என்று எண்ணம் ஏற்படுதல் அனுபவ ஸித்தம். பூர்வம் இப்படி யிருந்ததாகப் பின்னர் எண்ணுகின்றமையால் அது ஸ்மரணமே என்றறிக. ஆதலால் "ஒன்றும் தெரியாமையையும், ஸுகத்தையும் ஸ்மரிக்கின்றனர் என்பதே உண்மை. ஒன்றும் தெரியாமை யாவது அஞ்ஞானம் என்னலாம். அஞ்ஞானமும் ஸுகமும் தூங்கி யெழுந்ததும் ஸ்மரிக்கப்படுகின்றமையால், அந்த ஸ்மரணத்திற்குக் காரணமான அஞ்ஞானானுபவம், ஸுகானுபவம் ஆகிய இரண்டும், ஸுஷுப்தி காலத்தில் ஏற்பட்டிருக்கவேண்டு மென்றே தீர்மானிக்கப்படுகின்றது. இவ்விதம் நியாயவாயிலாக ஆராய்ந்து பார்க்குங்கால்,ஸுஷுப்தி ஸமயத்தில் அஞ்ஞானம், ஸுகம் ஆகிய இவ்விரண்டும் அனுபவிக்கப் பட்டிருக்கின்றமையால் மனம்வேலையின்றி ஒடுங்கியுள்ளதாகிய ஸுஷுப்தி காலத்தில் மிஞ்சியுள்ளது, அஞ்ஞானம் ஸுகமெனும் இவ்விரண்டேயாம்.

இனி அஞ்ஞானம் என்று தனியாய் ஒன்றுள்ள தென்பதை ஏன் ஒத்துக்கொள்ளவேண்டும்? மனதிற்குவேலை ஒன்றுமிராதிருத்தல் மாத்திரமே அவ்விதம் எண்ணப்படுகின்றதென்று சொல்லக்கூடாதோவெனின், அல்ல என்க. அவ்விதமானால் ஸுஷுப்தி காலத்தில் ஸுகமாத்திரம் உள்ளதென்றேற்படும். அப்படியானால் ஸுகமாத்திரமாகவே யிருந்தேன் என்று, எல்லோரும் எண்ணவேண்டியதாகுமன்றி, ஒன்றும் தெரியாமல் சுகமாய்த்தூங்கினேனென்று எண்ணுதற்கு நியாயமில்லாமற்போகின்றது. அன்றியும் அஞ்ஞானமென்பதை ஒத்துக்கொள்ளாவிடில், நான் இது வரையில் நன்றாயறிந்துகொண்டு ஸுகமாய்த் தூங்கினேன், என்றே எல்லோருக்கும் ஸ்மரணம் ஏற்படவேண்டும். அதுவோ, உலகில் அனுபவத்திற்கு விரோதம் ஆதலால்,ஸுஷுப்தி ஸமயத்தில், மனம் மிக்கஸூக்ஷ்ம ரூபமாய் ஹ்ருதயகமலத்தில் ஒடுங்கிப்போகவே, மிஞ்சியுள்ளது அஞ்ஞானமும் ஸுகமுமேயென்றறிக.

இவ்விதம் ஸுஷுப்தியில் மிஞ்சியுள்ளதாகிய அஞ்ஞானமே காரண சரீரமென்றும், அவித்தை யென்றும், ஆணவமென்றும், ஆவரணமென்றும், இருளென்றும், பாசமென்றும், மலமென்றும், தமஸ் என்றும் சொல்லப்படுகின்றது விழித்துக்கொண்டிருக்கும்போதும், ஸ்வப்பனம் காணும் போதும் மனதின்வேலையாகிய சித்தவிருத்தியுள்ள தாதலால், மழையோ

சையோடுகூடிய காற்றோசை போலவே. அனுபவிக்கப்பட்டதாகத் தெரி
கின்றதில்லை. மழையோசை யடங்கியதும் காற்றோசை மாத்திரம் வியக்த
மாய்க்கேட்கப்படுகின்றது போலவே, சித்த விருத்திகளடங்கிய ஸுஷு
ப்தியில் மாத்திரம் அஞ்ஞானம் அனுபவிக்கப்படுவதாகத் தோன்றுகிறது.
இவ்விதம் மனது வேலையாதுமின்றி லயித்து,ஸுகமாத்திரமாயுள்ள இடம்
ஹ்ருதயகமலம். ஆதலால் மனதிற்கு ஹ்ருதயகமலமே, நிஜஸ்தானம் என்
னப்படுகின்றது. உதாரணமாக, நியாயாதிபதியின் (ஜட்ஜியின்) இருப்பி
டம் யாது எனின், அவர் வேலையில்லாமலிருக்கும் வாஸஸ்தானமாகிய
வீட்டைச்சொல்லுவார்களே யன்றி, அவர் நீதிவிசாரிக்கும் ஆஸனத்தைச்
சொல்லுவார்களில்லை. இதுபோலவே, மனதின் ஸ்தானம் யாதெனின்,
அது விருத்திகள் யாதுமின்றி யொடுங்கிச் சும்மாவிருக்குமிடமாகிய ஹ்ரு
தயகமலத்தைச் சொல்லவேண்டுமேயன்றி, அது வேலைசெய்தல்லற்படும்
Cerebellum சிறுமூளையெனு மிடத்தையாவது Brain மூளையெனும் இட
த்தையாவது சொல்லுதல் உசிதமல்ல வென்றறிக.

பயிரிடும் குடியானவன் வயலில் நெடுநேரம் வரையில் உழுதல்வெட்
டுதல் முதலியவேலைகளைச் செய்தலுத்து, ப்பின்னர் அங்கிருந்து தனதிரு
ப்பிடம் நோக்கிவர, அப்படிவரும்போதும் கலப்பை மண்வெட்டி முதலி
யவைகளைச் சுமப்பதனாலும், தாறுமாறாய் அங்குமிங்கும் ஓடித்திரியும் மாடு
களைத் தன்வசப்படுத்தி ஓட்டும் நிமித்தம், அவைகளின் வழிசென்றுழலுவ
தாலும், மிக்கவருந்தி, க்கடைசியில் வீடுவந்து படுத்துக்களைப்பாறுதல்
போலவே, மனது ஜாக்கிரத்தில் மூளையிலிருந்து கொண்டு இந்திரியங்க
ளோடு ஸம்பந்தித்து, விஷயங்களில் சென்றுழன்று,சிரமமடைந்து தான்
சும்மா இருந்துலயிக்கும் ஸ்தானமாகிய ஹ்ருதயகமலத்தை நோக்கிவர,
அப்படிவரும்போதும் ஸ்வப்பன ஸ்தானமாகிய ஸெரிபெல்லத்திலிருந்து
தாறுமாறாகிய சிந்தனைகளால் மிக்க உழன்று பின்னர் நாடிமார்க்கமாய்
ஹ்ருதயகமலம் வந்தடைந்து, லயித்திருக்கின்றது.

இவ்விதம் நிஜஸ்தானத்திலிருந்து கிரியாஸ்தானங்களுக்கும், கிரியா
ஸ்தானங்களிலிருந்து நிஜஸ்தானத்திற்கும், போக்குவரத்து செய்கின்ற
மையால் மனதிற்கு ஸ்தானம் மூன்று. ஆயினும் கிரியாஸ்தானங்கள் இர
ண்டாம். நிஜஸ்தானம் ஒன்றும். மூளையும் சிறுமூளையும் கிரியாஸ்தானங்
கள். ஹ்ருதயகமலமே நிஜஸ்தானம். நித்திரை காலத்தில் மாத்திரம் தலை
தொங்குதலைக் கவனித்தாலும், மனது அத்தருணம் மூளையிலில்லை, என்
று (விளங்குகின்றது) ஊஹிக்கக்கூடியது. திடீரென யாதானும் பயம்நேர்
ந்தகாலத்தில், ஒன்றும் தோன்றாமல் ஸ்தம்பம் போலாவதற்குக்காரண
மும், மனது திடீரென தனது ஸ்தானமாகிய ஹ்ருதயகமலம் செல்லு
தலே, என்பதும் ஊஹிக்கப்படுகின்றது. இவ்விதம மனதின் நிலைமை என்
பது நம்முன்னோர்களால் பன்னெடுங்காலமாய் அறியப்பட்டு வந்தவிஷ
யம். இவ்விதமாகிய உண்மையே,

[illegible]
[illegible]

என்பதாதி வாக்கியங்களா லுபதேசிக்கப்பட்டுள்ளது இவ்விதமிருக்க, மேற்குத்திசையோர் மனதின் ஸ்தானம் மூளையொன்றே என்றதற்குக்காரணம், அவர்கள் ஜாக்கிரத்கால மொன்றையே பரிசோதித்தவர்களென்பதாம். அவர்கள் உலகவியாபாரமொன்றையே முக்கியமாய்க்கொண்டு ஸ்தூலபதார்த்தங்களாகிய பௌதிகப்பொருள்களையே நன்கு உழைத்து, பரிசோதித்தவர்கள். உலகவியாபாரம் ஜாக்கிரத அவஸ்தையிலேயே நடந்தேறுவதாதலால், ஜாக்கிரத்தையே அவர்கள் பரிசோதிக்கவேண்டிய தவசியமாயிருந்தது. ஜாக்கிரத்தை பரிசோதித்தவரையில் மனது வேலை செய்யுமிடம் மூளையே என்றறிந்து கொண்டனர். ஜாக்கிரத்தை பரிசோதித்ததுபோல ஸ்வப்பனத்தையும், ஸுஷுப்தியையும், பரிசோதிக்கவேண்டியிருத்தல் அவசியமாயேற்பட்டிருக்குமானால் அதன் ஸ்தானத்தையும் அறிந்துகொண்டிருப்பார்கள். ஸ்வப்பன ஸுஷுப்தி காலங்களில் மனதின் நிலைமையை இன்னவித மென்றறிதலால, அவர்களுக்காகவேண்டிய காரியம், யாது மிருந்ததாகத் தெரியவில்லை.

நமது வேதசாஸ்திரங்களிலோவெனின், ஜாக்கிரத்தில் ஒருக்ஷணத்தில் பலவிதமாய்த் திரியும் சித்தவிருத்திகளுக்கும், ஸ்வப்பனத்தில் தாறுமாறாகவோ, ஸரியாகவோ, தோன்றியடங்கும் சித்த விருத்திகளுக்கும், ஸுஷுப்தியில் சித்த விருத்தி யாது மின்றியொடுங்கிவிடவே, மிஞ்சியுள்ள அஞ்ஞானத்திறகும் ஸாக்ஷியாய், விளங்கும் நித்தியஞானாநந்த வஸ்துவை யறிந்தனுபவித்தலே, ஜனனமரணப் பிணியை நீக்குதலுக்குபாயமென்று சொல்லப்படுகின்றமையால், நம்முன்னோர்கள் அவ்விதம் பரமாத்ம வஸ்துவையறிதற்கென முயற்சிக்க, மனதின் மூன்றுவிதமாகிய நிலைமைகளையும், அவ்வவஸ்தைகளில் கிடந்தல்லற்படும் ஜீவனின் நிலைமைகளையும் அறியவேண்டியிருந்தமையால், பௌதிகப்பொருளில் சிறிதும் மனதைசசெலுத்தாமல் உலகவியாபாரத்தை, துச்சமாய்த்தள்ளி உண்மையனுபவம் பெற்றுள்ள ஸத்குருவை, தேடித்திரிந்துகண்டு சரணமடைந்து, அவர்களுபதேசித்த வண்ணம் பலகாலம் அப்பியஸித்து, தன்னியர்களாயிருந்தனர். ஆதலின், நம்மவர்களுக்கே இவ்வுண்மை நன்றாய் அறியப்பட்டிருந்தது. ஆனால் தற்காலத்தில் நம்மவர்கள் அநேகமாய் ஆத்ம மனஸ்தத்துவம், உலகவியாபாரம், எனுமிவ்விரண்டு விஷயங்களுள் ஒன்றிலும் ஆராய்ச்சி செய்யாமல், இரண்டும் கெட்டவர்களாய் காமக்குரோத மாத்ஸர்யாதி வசர்களாய்க் கெட்ட சிந்தனைகளாலும்,கெட்ட நடவடிக்கைகளாலும், அரிய இப்பிறவியை வீணாக்கிக்கொண்டு, அல்லற்படுதற்கே ஆளாகின்றனர். இது நிற்க இனி எடுத்தக்கொண்ட விஷயத்தில் நாடுவாம்.

மனது செய்யும் வேலை யாதென்பதைப் பற்றிச் சற்று விவேகிப்பாம். அதாவது, ஒரு மனிதனே சற்று நேரம் ஸூத்திரதாரனாகவும், சற்று நேரம் அரசனாகவும், சற்றுநேரம் ரிஷியாகவும், சற்றுநேரம் நடனமாதாகவும் நடிப்பதுபோல, மனமே சற்றுநேரம் காமரூபமாயும், சற்றுநேரம் ஸங்கற்பரூபமாயும், சற்றுநேரம் ஸம்சயரூபமாயும், சற்றுநேரம் சிரத்தைரூபமாயும, சற்றுநேரம் தைரியரூபமாயும், சற்றுநேரம் பயரூபமாயும், சற்றுநேரம் லஜ்ஜைரூபமாயும சற்றுநேரம் விஷயாகாரமாயும், சற்றுநேரம் லோபரூபமாயும், சற்றுநேரம குரோதரூபமாயும், சற்றுநேரம் மாத்ஸரியரூபமாயும், சற்றுநேரம் பக்திரூபமாயும், சற்றுநேரம் துக்க ரூபமாயும், இவ்வாறு பற்பல வுருவங்களாய்த் தோன்றுகின்றது.

மனம் எந்தெந்தப் பொருளில், கண் முதலிய இந்திரியங்களின் வழியாய் ஸம்பந்திக்கின்றதோ, அந்தந்தப் பொருள் வடிவமாகவே பரிணமிக்கின்றது, அங்ஙனம ஏற்படும் பரிணாமமே விருத்தியெனப்படும் க்ஷணம் பெண்டீர் வடிவமாயும், க்ஷணம் புதல்வர் வடிவமாயும், க்ஷணம் புதல்வி வடிவமாயும், க்ஷணம் செல்வவடிவமாயும், க்ஷணம் கல்வி வடிவமாயும், க்ஷணம் வீடு வடிவமாயும், க்ஷணம் வாஹனவடிவமாயும் க்ஷணம் பக்ஷி வடிவமாயும, க்ஷணம் பந்து வடிவமாயும், க்ஷணம் மித்திரவடிவமாயும், க்ஷணம் சத்துருவடிவமாயும், க்ஷணம் நகரவடிவமாயும், க்ஷணம் மலைவடிவமாயும், க்ஷணம் ஸமுத்திர வடிவமாயும், க்ஷணம் வனவடிவமாயும், க்ஷணம் நதிவடிவமாயும், க்ஷணம் தடாகவடிவமாயும், க்ஷணம் விமானவடிவமாயும், க்ஷணம் ஆடை வடிவமாயும், க்ஷணம் ஆபரணவடிவமாயும், க்ஷணம் ராஜ்ஜியவடிவமாயும் மனமே பரிணமிக்கின்றது உண்மையை யோஜித்துப் பார்க்கின் மனக்கற்பனைக் கந்நியமாய் ப்ரபஞ்ச வியாபாரம் யாதுமில்லையென்பது நன்கு விளங்குகின்றது அழகிய மங்கையானவள் வைராக்கியமுடைய ஸந்நியாஸியின பார்வைக்குப் பிணமாயும், புலிக்கு நல்ல உணவாயும், காமுகனுக்கு காமஸாதனமாகிய ஸ்திரீரத்னமாகவும், தத்துவ ஞானிக்குத்தோல், சதை, மாம்ஸம், ரத்தம், எலும்பு, மலம், மூத்திரம், கேசம், நகம் எனும் இப்பதார்த்தங்களின் சேர்க்கையாகவும், காணப்படுகின்றாள். காணப்படும் பொருள் ஒன்றேயாயினும் காண்போர்களின் மனக் கற்பனையின் வைசித்திரியத்தாலன்றோ வேறு வேறு பொருளாய்த் தோன்றுகின்றது எப்பொருளுமில்லாத ஸ்வப்னத்தில் ஓர் நொடிபோதில் அபாரமாகிய ராஜ்ஜியபாரமும், அளவிறந்த துக்கமும், அனுபவிக்கப்படுகின்றதே. அத்தனையும் மனதின் கற்பனையைத் தவிர வேறு யாதானுமுண்டா?

மனக்கற்பனை யாதுமில்லாத ஸுஷுப்தி காலத்தில் ப்ரபஞ்ச வியாபாரம் யாதாவது தோன்றுகின்றதா? இல்லையன்றோ. மனச்சேஷ்டையில்லாத நித்திரையில் எந்த வஸ்துவிலாவது விருப்பமாவது வெறுப்பாவதுண்டா? இவன் சத்துரு, இவன் மித்திரன், நான் பணக்காரன், நான்

ஏழை, நான் வித்துவான், நான் மூடன், நான் சுகி, நான் துக்கி, இது சீதம், இது உஷ்ணம், இது நல்லது, இது கெடுதி, இவள் எனது காமினீ, இவள் என் பெண்டீர், இவன் எனது கணவன், இவன் நமது புதல்வன், இவள் நமது பெண், இது எனது பொருள், இது எனது பாக்கியம், இது எனது வேலை, இவனை சிக்ஷிக்கவேண்டும், இவனை ரக்ஷிக்க வேண்டும், இவன் மேன் குலத்தோன், இவன் கீழ்குலத்தோன் என்பது முதலிய எண்ணிறந்த வியவஹாரங்களுள் யாதானும் ஒன்றுண்டா? யாது மில்லை யன்றோ. ஆராய்ந்து பார்த்தால் கண்ணுக்கெட்டாததும் மிக்க நுட்பமுமா யுள்ளதாகிய இம்மனதின் கற்பனையாலேயே அபாரமாகிய இந்த ப்ர பஞ்ச வியாபாரங்கள் ஸகலமும் நடந்தேறுகின்றன, என்பது நன்றாய் விள ங்குகின்றதன்றோ. ஓர் க்ஷணத்தில் பலகோடி ப்ரபஞ்சமாய் உதித்தொ டுங்குதலாகிய மனதின் ஆற்றலைக் காட்டிலும் ஆச்சரியகரம் உலகில் யாதிருக்கின்றது? இவ்விதம் ஸுஷுப்தியில் மனக்கற்பனை யாது மில் லாமையால் உலகவியாபாரம் யாதுமில்லை. ஜாக்கிரஸ்வப்பனங்களில் மன க்கற்பனை யிருக்கின்றமையால் ஸகல ப்ரபஞ்ச வியவஹாரங்களுமேற் படு கின்றன.

உலகில் எந்த வஸ்துவைக் கவனித்தாலும் அதற்கோர் காரண மிருந்தே யுண்டாயிருக்கின்றதென்று விளங்குகின்றது. காரணமில்லாத வஸ்து உலகில் யாதுமில்லை காரியம் காரணத்தாலேயே ஏற்பட்டிருத்தல் நியதமாயுள்ளது. இந்த நியமப்படிக்கு, மனதிற்கும் ஓர்காரணமிருக்க வேண்டுமன்றோ. மண்ணால் குடமும் பொன்னால் ஆபரணமும் மரத்தினால் வாஹனமும் உண்டாகின்றதைக் காண்கின்றோம். இதுபோல் மனதிற்கு ள்ள காரணம் யாது? எனின் அதனையிவ்விதமறிக.

காரியத்திற்குத் தக்க காரணமிருக்கவேண்டுமே யன்றி காரியம் ஓர் விதமாயும் காரணம் மற்றோர்விதமாயும் இருக்கின்றதில்லை. மண் குடத் திற்கு மண்ணும், பொன் குடத்திற்குப் பொன்னும், மாமரத்திற்கு மாங் கொட்டையும், ஆலமரத்திற்கு ஆலம் விதையும் காரணமென்பது யாவ ராலும் அறியப்பட்ட விஷயம் மனம் ஸூக்ஷ்ம வஸ்துவேயன்றி ஸ்தூல வஸ்துவல்ல. மனது, கண் முதலிய இந்திரியங்களால் அறியக்கூடாததாத லால், ஸூக்ஷ்ம வஸ்துவேயாம் எது ஸ்தூலவஸ்துவோ அது கண்முதலிய இந்திரியங்களுக்கு விஷயமாகும். சரீரத்தை எவ்வளவு பரிசோதித்தாலும் தோல், சதை, மாம்ஸம், எலும்பு முதலியவைகளே காணப்படுகின்றன வன்றி மனது காணப்படுவதில்லை. மனது என்பது ஓர் சக்திபோலுள்ள தென்று முன்னமேயே சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட நுட்பமாகிய மனது எனும், ஸூக்ஷ்ம வஸ்துவின் காரணமும் ஸூக்ஷ்மமாகவே யிருந் திருக்கவேண்டும். ஸ்தூல வஸ்துவுக்கு ஸ்தூலமாகிய காரணம், ஸூக்ஷ்ம வஸ்துவுக்கு ஸூக்ஷ்மமாகிய காரணமென்பது உசிதமன்றோ. ஆதலால் மனதினது காரணம் ஸூக்ஷ்ம வஸ்துவே என்று ஏற்பட்டது.

இனி, அது எந்த வஸ்துவென்று விவேகிக்க வேண்டும். ஆதலால், அதில் சிறிது நாடுவோம். உலகில் அம்சமானது, அம்சியையே நாடிக் கொண்டிருக்கும் என்பது இயல்பு. காரியம் அம்சமும், காரணம் அம்சியுமென்பது அறிக. மண், கல் முதலியன அம்சங்களென்றும், அவைகளின் அம்சி பிருதிவி என்னப்படும் பூமியென்றும், மழைத்துளி முதலியன அம்சங்களென்றும், அவைகளின் அம்சி பூமியிலுள்ள ஜலம் என்றும், தீபஜ்வாலை முதலியன அம்சங்களென்றும், அவைகளின் அம்சி பெரிதாகிய அக்கினி மண்டலம் (ஆதித்தலோகம், அக்கினிலோகம் முதலியது) என்றும், மூச்சுக்காற்று அம்சமென்றும், அதன் அம்சி வெளியிலுள்ள வாயு என்றும், அறியத்தக்கது.

மண், கல் முதலியவைகளை உயர எறிந்தால், அவைகள் மேலே போய்க்கொண்டே யிருக்கின்றனவல்ல வேகமுள்ள மட்டும் மேலே சென்று, பிறகு கீழே விழுகின்றது. நமது பிரயத்தினத்தால், அம்சியை விட்டு அம்சங்களைப் பிரியச் செய்தாலும், அவை தமது இயற்கையாகிய "அம்சம் அம்சியை நாடும்" எனும் நியமத்தினுல், பூமியையே வந்தடைகின்றன. மழைத்துளி முதலியது, பூமியில் விழுவதோடு மாத்திரம் நின்றுவிடுகின்றதில்லை. பள்ளமுள்ள பக்கங்களிலும், பூமிக்குள்ளும், செல்லுகின்றதாய், அம்சியாகிய ஜலம் உள்ள இடத்தையே நோக்குகின்றது. தீபஜ்வாலை முதலியதை எவ்வளவு தந்திரம் செய்து தகைந்தாலும், அது மேனோக்கிக்கொண்டே யிருக்கின்றது. குறுக்குமுகமாகவாவது, கீழ்முகமாகவாவது, நோக்குவதில்லை. ஆதலால் அதன் இனமாகிய அம்சி, மேலேயிருக்கின்றதென்று நிச்சயிக்கப்படுகின்றது. ஆகாசம், அவுட்டு முதலிய வாணங்களும் தம்மிடம் அக்கினி யம்சம் உள்ளவரையில் மேலே சென்று, அவ்வம்சம் வெளிப்பட்டதும் கீழே விழுகின்றன. மூச்சை எவ்வளவு சிரமப்பட்டுத் தகைந்து ச்வாஸபந்தனம் செய்பினும், அது அவ்விதமே நிற்கின்றதில்லை. வெளியில் தானுகவே வந்து சேருகின்றது. இந்த உதாஹரணங்களை யெல்லாம் கவனித்தால், எந்த வஸ்து எதையே நாடுகின்றதோ, அந்த வஸ்துவுக்கு அதுவே அம்சி, என்பது நியமம் என்றறியப்படுகின்றது. மனது எப்போதும் சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் எனும் வெளிப்பொருள்களையே நாடுகின்றது. கண், காது முதலிய இந்திரியங்களின் மூலமாய் வெளிவஸ்துக்களை அடைந்தறிகின்றது. அவ்வாறில்லையாயின், உள்ளிருந்து மனது வெளி வஸ்துக்களையே சிந்திக்கின்றது. ஸுஷுப்தி மூர்ச்சை தவிர மற்ற ஸமயங்களில், பிரபஞ்ச நாட்டத்தை விடுத்து, ஓர் க்ஷணமும் ஓய்வு பெறுகின்றதில்லை. அம்சம் அம்சியையே நாடும் எனும் நியமத்தைக் கவனித்தால், மனதின் அம்சியானது பஞ்ச பூதங்களே என்றேற்படுகின்றது. பிரபஞ்சப் பொருள்களெல்லாம் பஞ்சபூதங்களிலேயே அடங்கியிருக்கின்றமையால், மனது எப்போதும் பஞ்ச பூதங்களையே நாடுகின்றதென்று சொல்லுவது உசிதம். மனது

பஞ்ச பூதங்களையே நாடிக்கொண்டிருக்கின்றமையால், அதன் அம்சி பஞ்ச பூதங்களே யென்று நிச்சயிக்கப்படுகின்றது.

மனது ஸூக்ஷ்ம வஸ்துவாதலால், அதன் காரணமும் ஸூக்ஷ்மவஸ்துவாகவே இருந்திருக்கவேண்டும். என்றும், மனது பஞ்ச பூதங்களாகிய பிரபஞ்சங்களையே நாடிக்கொண்டிருக்கின்றமையால். அதன் காரணம், பஞ்ச பூதங்களாகவே இருக்கவேண்டு மென்றும் நிச்சயிக்கப்பட்டது. இனி பஞ்சபூதங்கள் ஸ்தூலங்களன்றோ; ஸூக்ஷ்மமாகிய மனதிற்கு ஸ்தூல காரணம் உள்ளதென்பது உசிதமோ. என்று சங்கை ஏற்படக்கூடும். ஆதலால், இவ்விஷயத்தில் சற்று புத்தியைச் செலுத்த வேண்டும்.

உலகில் எந்த வஸ்துவை நோக்கினும், அது ஸூக்ஷ்ம நிலைமையிலிருந்தே, பிறகு ஸ்தூல வஸ்துவாயிருக்கின்றதென்பது, நன்றாய் விளங்குகின்றது. உதாரணமாக, கண்ணுக்குப் புலப்படாத சிறுவிதையிலிருந்து பெருங்கூட்ட மிருக்கத்தக்க நிழலைத்தருவதாகிய ஆலமரமுண்டாகின்றது. அவ்வளவுபெரிய ஆலமரமானது. அச்சிறு விதையில் பூர்வம் எப்படி அடங்கியிருந்தது எனின், சக்திவடிவமாயிருந்து, பிறகு முளையாகிய ஸூக்ஷ்ம வடிவம்பெற்று, ப்பிறகு ஸ்தூல விருக்ஷமாகின்றதென்க. அவ்விதமே அக்கினியும், ஜ்வாலைரூபமாகிய ஸ்தூலத்தன்மையைப்பெறுவதற்கு முன், காரணரூபமாயிருந்து, பிறகு ஆக்ஸிஜன் Oxygen கார்பன் Carbon எனும் இரண்டும் சேர்ந்து கொஞ்சம்உஷ்ணம் உண்டாகும்போது ஸூக்ஷ்மரூபமாயிருந்து, பிறகு Chemical Action ஏற்பட்டு, ஜ்வாலைரூபமாகிய ஸ்தூலத்தன்மையைப்பெறுகின்றது. இவ்விதம் உலகிலுள்ள எந்த வஸ்துவைப்பற்றி யோசித்தாலும் ஸ்தூலம், ஸூக்ஷ்மம். காரணம் ஏனும் மூன்று நிலைமை பெற்றுள்ளதென்பது நன்றாய்ப் புலப்படுகின்றது. இந்நியாயத்தைச் சற்று இப்பிரபஞ்சத்திலும் பொருந்தப் பார்க்கவேண்டும். உலகினில் நம்மால் காணப்படுவது, பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனும் ஐம்பூதங்களே. ஸமுத்திரம், ஏறி, தடாகம், நதி, மலை, காடு, நாடு, நகரம், மனிதர், பறவை. மிருகம், ஊர்வன முதலிய ப்ராணிகளின் தேஹம் முதலிய இப்பொருள்களின் கூட்டமாகிய உலகத்தை பரிசோதித்தால் மண், ஜலம், தீ, காற்று, வெளி என்னும் பஞ்சபூதங்களுக் கந்நியமாய் யாதுமில்லையாதலால், பஞ்சபூதத்திலேயே உலகம் அடங்கியிருக்கின்றது என்பது நன்றாய் விளங்கும்,

இவ்விதங்களாகிய பஞ்சபூதங்களுக்கும், பூர்வம் ஸூக்ஷ்ம நிலைமை, காரணநிலைமை எனும் இரண்டு நிலைமைகளிருந்திருக்க வேண்டுமன்றோ. காரண ஸூக்ஷ்ம நிலைமைகளைப் பெறாமல் ஸ்தூல நிலைமை ஏற்படுவதில்லையென்று, பூர்வம் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றமையால், இதில் சங்கை செய்வதற்கிடமில்லை ஆதலால், ஸ்தூலங்களாகிய பஞ்சபூதங்களுக்கு ஸூக்ஷ்ம காரண நிலைமைகளுள்ளன வென்பதை, யொத்துக்கொள்ள வேண்டிய தவ

நியமாகின்றது. அவ்விதம பூதங்களுக்குள்ள காரண நிலைமையே பிரளயமென்று சொல்லப்படுகின்றது. ஸூக்ஷும நிலைமைபெற்றுள்ள பஞ்சபூதங்களே மனதினது காரணமாம். மனது விமர்ச சக்தியுள்ளதாயிருக்கின்றமையால், ஸத்துவகுணமமைந்திருக்கின்றதென்றும் அறியப்படுகின்றது. ஆதலால், ஸூக்ஷும நிலைமைபெற்றுள்ள பஞ்சபூதங்களின் ஸத்துவாம்சங்களால்,மனதுண்டாகிய தென்பதே யுக்திக்கும் ஒவ்வுகின்றது. இவ்விதம் ஸூக்ஷும பூதங்களைத்தவிர, மற்றெதனையாவது மனதினது காரணம என்றுவது, மனதிற்கு காரணமேயில்லையென்றுவது சொல்லுதல், எவ்விதத்திலும் ஒவ்வாதென்றறிக. ஆதலால் மனதினது காரணம், ஸூக்ஷும பூதங்களின் ஸத்துவாம்சங்களே. அதாவது, ஸூக்ஷும பிரிதிவியின் ஸத்துவாம்சம், ஸூக்ஷும அப்புவின் ஸத்துவாம்சம், அக்கினி ஸூக்ஷுமத்தின் ஸத்துவாம்சம்,வாயு ஸூக்ஷுமத்தின் ஸத்துவாம்சம,ஆகாச ஸூக்ஷும ஸத்துவாம்சம், ஆகிய இவைகளெல்லாவற்றின் சேர்க்கையால் மனதுண்டாகியது என்க. பூதஸூக்ஷுமங்களை தன்மாத்திரைகளென்றும் சொல்லப்படுகின்றன.

இங்ஙனம் மனது மாத்திரம ஸூக்ஷும பூதங்களின் அம்சங்களால் உண்டாகிய தென்பதல்ல.இந்திரியங்களும், ப்ராணன்களும்கூட ஸூக்ஷும பூதங்களாலுண்டாயின. அதாவது நம்மால் காணப்படுவதாகிய இந்த ஸ்தூலதேஹத்தினில்,ஸூக்ஷுமசரீரமென்றொன்றுள்ளது.கண்ணெனப்படும் சக்ஷுரிந்திரியம், காதென்னப்படும் ச்ரோத்திர இந்திரியம், மூக்கென்னப்படும் நாசியிந்திரியம, நாக்கென்னப்படும் ஜிஹ்வேந்திரியம், மெய்யென்னப்படும் தொக்கிந்திரியம, இவைகள் ஞானேந்திரியங்களென்னப்படுகின்றன. கண், காது முதலிய ஸ்தூலகோளகங்களே இந்திரியங்களென்னக் கூடாதோ வெனின், அல்ல. அதாவது, ஸுஷுப்தி, மூர்ச்சை, ஸ்வப்பனம் இந்த ஸமயங்களில் இந்த கண், காது முதலிய ஸ்தூலகோளகங்களிருந்தும், உருவம் சப்தம் முதலிய விஷயங்கள் அறியப்படவில்லை. ஆதலால், கண் காது முதலிய இடங்களிலிருந்துகொண்டு, உருவம் சப்தம் முதலிய விஷயங்களை அறிவதாகிய சக்திபோலுள்ள, ஸூக்ஷுமங்களாகிய இந்திரியங்கள் இருக்கின்றனவென்று ஊஹிக்கப்படுகின்றது. கண், காது முதலிய கோளகங்களில், அவ்விந்திரியம் வந்து கூடினால், உருவம் சப்தம் முதலியது அறியப்படுகின்றது. ஆதலால், ந்யாயாதிபதியும் அவரது ஆஸனமும், மனமும் மூளையும் போலவே, இந்திரியங்களும் கண் முதலிய ஸ்தூலகோளகங்களுமென்பதறிக.

இவ்விந்திரியங்கள் ஸூக்ஷுமங்களே யாதலால். இவைகளின் காரண வஸ்துக்களும ஸூக்ஷுமங்களாயிருக்க வேண்டுமென்றே. அதாவது பிரிதிவி ஸூக்ஷுமத்தின் ஸத்துவாம்சத்தால் க்ராணேந்திரியமும், அப்பு ஸூக்ஷும ஸத்துவாம்சத்தால் ஜிஹ்வையெனும் ரஸனேந்திரியமும், தேயு ஸூக்ஷும ஸத்துவாம்சத்தால் சக்ஷுரிந்திரியமும், வாயு ஸூக்ஷும ஸத்துவாம்சத்தால்

தொக்கெனும் இந்திரியமும், ஆகாச ஸூக்ஷ்ம ஸத்துவாம்சத்தால் சுரோத்திரம் எனும் இந்திரியமும், உண்டாயிற்று. இவ்வாறு பஞ்சபூதங்களின் ரஜோம்சத்தால், கர்மேந்திரியம் உண்டாயிற்று கர்மேந்திரியமாவது, கர்மம் எனின் கிரியை; அதைச்செய்யும் சக்திபோலுள்ளது கர்மேந்திரியமென்றறிக. கர்மேந்திரியமாவது வாக்கு, பாணி, பாதம், குஹ்யம், குதம் எனும் ஐந்து இந்திரியங்களாம். கிரியையானது ரஜோகுணத்தால் நிகழ்வதாதலால், இவைகளின் காரணங்களும் ஸூக்ஷ்மமாகிய பிரிதிவி முதலிய பூதங்களின் ரஜோம்சங்கள் என்றறிக. எந்த ப்ராணியும் மூச்சையிழுத்துக் கொண்டும், வெளியில் விட்டுக்கொண்டுமிருக்கின்றது. ப்ராணனென்பது இதுவே தானு, அல்லது வேறுயாதானுமொன்று, என்றறியவேண்டும். இதுவே யெனின, மூச்சைவெளியில் விட்டதும் இறந்துபோகவேண்டும்; ஆனுல் அவ்விதம் ஏற்படுகின்றதில்லையாதலால், முற்கூறியதாகிய மனது, இந்திரியம், முதலியது போலவே, ப்ராணனெனும், ஓர் ஸூக்ஷ்மமாகிய வஸ்து, இத்தேகத்திற்குள் இருக்க வேண்டுமென்றேற்படுகின்றது. மூச்சுவெளியில போனுலும், அந்தப்ராணன் உள்ளிலிருக்கின்றமையால், மரணம் ஏற்படுகின்றதில்லை. மூச்சிழுப்பதும் விடுவதும் அந்த ப்ராணனிருப்பதனுலேயே என்பது உசிதம். இனி அந்த ப்ராணனுக்கு காரணம் யாதெனின், அதுவும் ஸூக்ஷ்ம மாதலால், அதன் காரணமும் ஸூக்ஷ்ம மாகவே யிருக்கவேண்டுமென்றே; அதாவது பிரிதிவி முதலிய ஸூக்ஷ்மங்களாகிய பஞ்சபூதங்களின் ரஜோம்சங்களால், ப்ராணனுண்டாயிற்றென்றறிக. இவ்வுண்மை பற்றியே.

> 𑌸𑌤𑍍𑌵𑌾𑌂𑌶𑍈𑌃 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌦𑍍𑌧𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌪𑌞𑍍𑌚𑌕𑌮𑍍
> 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌗𑌕𑍍𑌷𑌿𑌰𑌸𑌨𑌾𑌘𑍍𑌰𑌾𑌣𑌾𑌖𑍍𑌯𑌮𑍁𑌪𑌜𑌾𑌯𑌤𑍇
> 𑌏𑌤𑍈𑌰𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 ।
> 𑌰𑌜𑍋𑌂𑌶𑍈𑌃 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌤𑍁
> 𑌵𑌾𑌕𑍍𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌪𑌾𑌯𑍂𑌪𑌸𑍍𑌥𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌾𑌨𑌿 𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇
> 𑌤𑍈𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 𑌸𑌹𑌿𑌤𑍈𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 ।

என்பதாதி, நம்முன்னேர்களால் உபதேசிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதம் இந்திரியங்கள், ப்ராணன், மனது எனும் மூவகையாகிய ஸூக்ஷ்ம வஸ்துக்களின் சேர்க்கையே ஸூக்ஷ்ம சரீரமென்னப்படுகின்றது. இந்திரிய ப்ராண மனங்களின் சேர்க்கையாகிய ஸூக்ஷ்ம சரீரமானது, இந்த ஸ்தூலதேகத்திற்குள் இருக்கும் வரையில் ஜீவதசையென்றும், இதைவிட்டுப் பிரிந்து போதலே மரணமென்றும் சொல்லப்படுகின்றது.

இனி மரித்ததும் மனது எந்தஸ்திதியடைகின்றது? மனதும் ஸ்தூலதேஹத்தோடுகூட நாசமடைகின்றதா, அல்லது வேறு இடத்திற்குப்போ

கின்றதா, ஏனின் அதைச்சற்று விசாரிப்போம். பிரிதிவியிலும் ஜலம் நுட்பம்; ஜலத்திலும் தேயு நுட்பம்; தேயுவிலும் வாயு நுட்பம்; வாயுவிலும் ஆகாயம் நுட்பம்; பஞ்சபூதங்களிலும் மனம் நுட்பமாகியது. பஞ்சபூதங்கள் இந்திரியங்களுக்கு விஷயங்களாயுள்ளன. மனதை எவ்விந்திரியத்தினும் காணமுடியாது. ஆகாயமானது, இந்திரியங்களாலறிய முடியாதாயினும், அதன் குணமாகிய சப்தம் இந்திரியத்திற்கு விஷயமேயாம். மனது எந்த இந்திரியத்திற்கும் விஷயமல்ல. ஆதலால், ஸூக்ஷ்மமென்னப்படுகின்றது. மனமானது இந்திரியங்களுக்கு விஷயமல்லாததாயிருந்து கொண்டு அபாரமாகிய காரியத்தைச் செய்கின்றது. மனதின் வேகமிவ்வளவென்று சொல்லமுடியாது. அவ்வளவு நுட்பமாயினும், அதன் சக்தி அபாரமாயுள்ளது. அதிலும் ஆச்சர்யகரமாகிய பதார்த்தம் உலகில் யாதுமில்லை. ஸ்தூல சரீரமானது மரித்தபின், நீரிலோ, நெருப்பிலோ, அல்லது மண்ணிலோ அழிந்து போகின்றது. ஸ்தூலமாகியவஸ்துவையே மண் முதலியது அழிக்குமன்றி, ஸூக்ஷ்ம வஸ்துவை அழிக்க இயலாது வாயுவை, மண், தீ, நீர் இவைகள், அழிக்க முடியாதன்றோ. வாயுவிலும் ஸூக்ஷ்மமாகிய மனதை, மண்ணாவது, நீராவது, நெருப்பாவது எப்படியழிக்கவியலும்? இயலாதாதலால், ஸ்தூல சரீரத்திற்கே நாசமேற்குமன்றி, மனதிற்கு நாசமேற்காது.

மனதிற்கு மாத்திரமப்படி யென்பதல்ல. இந்திரியம் ப்ராணன் எனும், இவைகளுக்கும் நாசமில்லை யென்றறிக. மனதைப்போல பூத ஸூக்ஷ்மங்களாலேயே இந்திரிய ப்ராணன்கள் உண்டாயின. ஆதலால் இந்திரியப்ராண மனதுகளின் சேர்க்கையாகிய ஸூக்ஷ்மசரீரத்திற்கு மண்ணாலாவது, நீராலாவது, நெருப்பாலாவது நாசமில்லை யென்று ஏற்பட்டது. இந்த ஸ்தூல சரீரத்தின் நிலமை குலைந்து மரிக்கவே, இதிலுள்ள இந்திரிய பிராண மனங்களாகிய ஸூக்ஷ்ம சரீரம் வெளிப்பட்டு, ஸ்வர்க்கநரகமாகிய லோகாந்தரத்திற்குச் செல்லுகின்றது. ஸூக்ஷ்மசரீரமானது சக்திபோலுள்ளதாதலால், அது ஓர் ஆச்ரயமுமின்றி அந்தரத்தில் நிற்கின்றதென்பது பொவ்வாது. சக்தியெல்லாம், வ்யக்தியாகிய ஓர் ஸ்தூல வஸ்துவை ஆச்ரயித்தேயன்றோ நிற்கும். அதுபோலவே ஸூக்ஷ்ம சரீரமும், யாதானும் ஓர் வ்யக்தியைப்பற்றிக்கொண்டே ஸ்வர்க்க நரகங்களுக்குச் செல்லுகின்றது, என்பதே உசிதம் என்றறிக.

ஜீவன் என்பது, எப்போதும் மனதோடுகூடியுள்ள பொருள். மனது ஸூக்ஷ்ம சரீரத்தின் முக்கிய அங்கம். ஆதலால், ஸூக்ஷ்ம சரீரம் லோகாந்தரம் செல்லுகின்றதென்றதினால், ஜீவனும் செல்லுகின்றான் என்றும், ஏற்படுகின்றது. லோகாந்தரம் என்பது யாது, எனின் அது ஸ்வர்க்கம் நரகம் என்றிருவிதமாயுள்ளது. ஸ்வர்க்கமே புண்ணிய பூமியென்றும், நரகமே பாபபூமியென்றும், சொல்லப்படுகின்றது. புண்ணிய பாபபோக பூமி

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்.

களாகிய லோகாந்தரங்களில், இங்குள்ள ஜீவர்கள் செல்லுகின்றதும், அங்குள்ள சுகதுக்கங்களை புஜிக்கின்றதும், புஜித்த பின்னர் மறுபடியும் இவ்வுலகில் வந்து பிறப்பதும் வாஸ்தவம் எனின், ஜன்மாந்தரம் (அதாவது மறுபிறப்பும்) உள்ளதென்பதை யொத்துக்கொண்டதாகின்றது. ஆனால் அது நம்பக்கூடியதல்ல. மறுபிறப் பிருந்தாலன்றோ அதனை ஒத்துக்கொள்ளலாம்; மறுபிறப்புள்ள தென்பதற்கு நியாயம் யாதுளது? சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற தென்பதை மாத்திரம் கொண்டு, யுக்திக்கொவ்வாத விஷயத்தை ஒத்துக்கொள்ளுவது உசிதமா? உண்மையில் ஜன்மாந்தரம் என்பது இராவிடினும், ஏதோ இப்பிறப்பில்செய்த வினையின் பயனை, மறுபிறப்பில் புஜித்தே தீரவேண்டுமென்று எழுதிவைத்திருந்தால், ஸாமான்னிய பரிபாகமுடைய மனிதர், அதைக்கொண்டு பயந்து கெட்டகாரியம் செய்யாதிருப்பார்கள், அப்படியிருந்தால் உலகவியாபாரம் ஸரியாய் நடைபெறும். என்றெண்ணியே பெரியோர் ஜன்மாந்தரம் உள்ளதென்று எழுதிவைத்து விட்டனர், என்று சொல்லக்கூடாதா? என்று இவ்விதம் பலபலவாறாய் சங்கையேற்படக்கூடியது. ஆதலின் இதனைசசற்றாராயவேண்டும். அதாவது, ஜன்மாந்தரம் உள்ளதென்பதை, சாஸ்திரம் சொல்லுகின்ற தென்பதைக்கொண்டு மாத்திரம் ஒவ்வலாகுமா, என்று ஆக்ஷேபித்தாலும், யுக்திவாயிலாகக் கவனித்தால் ஒத்துக்கொள்ள வேண்டிய தவசியமாகின்றது.

கிரியையின் காலத்திலும், அதன் பலபோககாலம் வேறாகவே உள்ளது. உதாரணமாக (பாகம்) சமயல் எனும் கிரியையின் காலத்தைக் காட்டிலும், அதன் பலபோகமாகிய போஜனத்தின் காலம் வேறாகவே யிருக்கின்றது. படித்தல் என்பது ஓர் கிரியை. அதன் காலத்திலும் அதன் பயனாகிய உத்தியோகம் செய்யுமகாலம் வேறாகவே இருக்கின்றது. (க்ருஷி) உழுது பயிரிடுதல் எனும் கிரியையின் காலத்திலும், அதன் பயனாகிய தான்யலாபகாலம் வேறாகவே இருக்கின்றது. ஔஷதம் ஸாப்பிடுதல் எனும் கிரியையின் காலத்திலும், அதன் பயனாகிய ஆரோக்கியத்தின் காலம் வேறாகவே இருக்கின்றது. உலகில் உள்ள எந்த கிரியையைக் கவனித்தாலும், கிரியாகாலத்திலும் அதன் பலபோககாலம் வேறாகவே இருக்கின்றதென்பது நியதம் என்றறிக.

கற்கண்டு சாப்பிட்டவனுக்குத் தித்திப்பும், வேப்பங்காய் சாப்பிடுகின்றவனுக்குக் கசப்பும், அனுபவிக்கப்படுகின்றதே யன்றி வேறல்ல. அதுபோலவே, உலகில் நல்லது செய்கிறவர்களுக்கு ஸுகமும், கெட்டது செய்கின்றவர்களுக்கு துக்கமுமே ஏற்படவேண்டும். ஆனால் சிலர் நல்லதையே செய்துகொண்டிருக்கினும் துக்கத்தையே யனுபவிக்கின்றதையும், சிலர் கெட்டதையே செய்துகொண்டிருக்கினும் சுகத்தையே அனுபவிக்கின்றதையும் காண்கின்றோம். ஜன்மாந்தரமில்லையென்றால், இங்கு பிறந்தபின் இறக்கும் வரையில செய்யும் கர்மங்களின் பயனும் இந்த ஜன்

மத்திலேயே அனுபவிக்கப்பட்டுத் தீருகின்றதென்பதாக ஏற்படுகின்றது. இப்பிறப்பிலேயே பயனுள்ளதென்றால், தீமை செய்கின்றவனுக்கு ஸுகமும், நன்மை செய்கின்றவனுக்குத் துன்பமும் வர நியாயம் இல்லாமற் போகின்றது. ஆதலால் இப்பிறவியில் செய்யும் கர்மங்களுக்கு, இப்பிறவியிலேயே பயனுள்ளதென்று சொல்ல முடியவில்லை. அன்றியும் பூர்வம், கிரியாகாலத்திலும் அதன் பலபோக காலம் வேறாகவே யிருக்கின்றதென்று நிரூபித்த நியமத்திற்கிணங்க. கவனித்துப் பார்த்தால், இப்பிறவியானது கர்மகாலமாகவே இருக்கின்றமையால், இக் கர்மங்களின் பயனை, புஜிக்கவேண்டியதாகிய போககாலம் இந்தப் பிறவியிலும் வேறாகவே இருக்கவேண்டுமென்றே சொல்லவேண்டியதாகின்றது. ஆதலின், ஜன்மாந்தரம் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டியதே என்க.

இனி இப்பிறவியிலேயே ஓர் கருமத்தைச்செய்யும் காலத்தில், மற்றோர் கர்மத்தின் பயனை, புஜிக்கின்றானென்று கொண்டு, இந்தப் பிறவியையே கர்மகாலமாகவும், அதன் பலபோககாலமாகவும் கொள்ளக்கூடாதோ வென்றால், இதுவும் உசிதமல்ல. அதாவது, காரண காரியங்களுக்கு, இடம் ஒன்றாகவே இருக்கவேண்டுமென்ற நியமும் உலகிலிருக்கின்றது. உதாஹரணமாக, நெருப்பைத் தொடுதல் காரணமும், உஷ்ணானுபவம் காரியமுமாம் அப்படியே போஜனம் செய்தல் காரணமும், பசி யடங்குதல் காரியமுமாம். தீர்த்தத்தை யருந்துதல் காரணமும், தாஹமடங்குதல் காரியமுமாம். இதில் ஆசங்கைக் கிடமில்லை ஒருவன் நெருப்பைத் தொட மற்றொருவனுக்கு உஷ்ணத்தினால் துன்பமும், ஒருவன் புசிக்க மற்றொருவனுக்குப் பசி யடங்கவும், ஒருவன் நீரருந்த மற்றொருவனுக்கு தாஹமடங்கவும் கண்டதில்லை. ஆதலால், கிரியையைச் செய்தவனே அதன் பயனை யனுபவிக்க வேண்டும் என்றேற்படுகின்றது. இதுவேயன்றி, ஒருவன் கிரியைசெய்ய, மற்றொருவன் அதன் பயனை யனுபவித்தான் என்பது, உசிதமாகுமா? அவ்விதமில்லை யன்றோ; கிரியையின் கர்த்தா எவனோ, அவனே அதன் பயனையனுபவிப்பவன் எனும் நியமத்தை மறுப்பதற்குச் சிறிதுமிடமில்லை

உலகில் பிறவிக்குருடராகவும், பிறவி முடவர்களாகவும், சிற்சிலர் பிறத்தலைக்காண்கின்றோம். குருட்டுத்தன்மையாலும், முண்டமாய்ப்பிறத்தலாகிய அங்கஹீனத்தன்மையாலும், அச்சிசுக்களுக்குத் துன்பமேற்படுவதன்றி, ஸுகமேற்படுவதில்லை. அவ்விதம் குருடர்களாகவும், கால் கைகளற்ற முண்டங்களாகவும் பிறந்து, தவித்தலுக்கு காரணம் யாது எனின், அச்சிசுக்களின் செய்கையே காரணமென்று சொல்லவேண்டியதாகின்றது. ஆனால் பிறவியாகவே ஏற்பட்ட குறைகளாதலின், அவைகளுக்குறிய காரணங்களாகியசெயல்களை, அச்சிசுக்கள் இப்பிறவியில் செய்திருக்கின்றன என்பது உசிதமல்ல. இனி, கர்ப்பவாஸகாலத்தில் தாயினுடைய குறையினாலாவது, அல்லது கர்ப்போற்பத்தி காலத்திலுள்ள தந்தையின் குறை

யினாலாவது. அவ்விதம் அந்த, சிசுக்களுக்கு நேர்ந்தது என்பது உசிதமே யென்றால், அல்ல. காரண கார்யங்கள் ஓரிடமே யிருக்கவேண்டுமென்று நிரூபிந்த நியாயத்தைக் கவனித்தால், சிசுக்களின் கெடுதிக்கு அவைகளின் செய்கையே காரணமென்று சொல்லவேண்டியதாகின்றது. பிறவியாய் நிகழ்ந்த அங்கஹீனத்தன்மையால் வரும் துன்பத்திற்கு, சிசுக்களின் இப்போதிய செய்கையே காரணம் என்பது, பிரத்தியக்ஷவிரோதமாதலாலும், தாய் தந்தையர்களின் செய்கையே காரணமென்பது, யுக்திக்கு மாறனுகின்றதுபற்றி நியாயவிரோதமாகின்றமையாலும், இப்பிறவியில் சிசுக்கள் எவ்விதமாகிய கெட்டசெய்கையையும் செய்யாவிடினும், இதற்கு முன் செய்திருந்திருக்க வேண்டியதவசியம் என்றே சொல்லவேண்டியதாகின்றது. ஆதலால், ஜன்மாந்தரம் உள்ளதென்பதே யுசிதமென்றறிக. அன்றியும், இந்த ஜன்மத்தில் செய்யும் கருமத்தின் பயனே இங்கு புஜிக்கப்படுகின்றதென்றால், பால்யம் முதல் நல்லதையே செய்யும் சிலருக்குத்துன்பமே வருதல். பிரத்தியக்ஷமாயக் காணக்கூடியதாயிருக்கின்றதே; அதற்கு கதியென்னவெனின், யுக்தமாகிய விடையைக்காணேம் ஆதலால் முன்ஜன்மத்தில் செய்கைகள், ஏற்பட்டிருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்படுகின்றது. இந்த ஜன்மத்தில் நன்மையையே செய்கின்றவர்களாயினும், பூர்வஜன்மத்தில் பாவம் செய்தவர்களாதலால், அதன் பயனாகிய துன்பத்தை இப்போது அனுபவிக்கின்றனர் என்றும், இந்த ஜன்மத்தில் கெட்டகாரியங்களையே செய்கின்றவர்களாயினும், பூர்வ ஜன்மங்களில் நல்லவினைகளைச் செய்தவர்களாதலின், அவைகளின் பயனாகிய ஸுகத்தை இந்த ஜன்மத்தில் புஜிக்கின்றனர் என்றும், வியக்தமாயறியப்படுகின்றது. இவ்விதமே இந்த ஜன்மத்தில் செய்யும் பெரும் புண்ணியங்களின் பயனை யனுபவிக்க ஸ்வர்க்கலோகத்திற்கும், கடும்பாவங்களின் பயனை யனுபவிக்க நரகலோகத்திற்கும், ஜீவர்கள் செல்லுகின்றனர் என்று சொல்லப்படுகின்றது.

இனி ஸ்வர்க்க நரகங்கள் எங்குள்ளன? அங்குள்ள ஜீவர்கள் எவர்? அவர்களது தேஹம் எப்படிப்பட்டது? அவர்கள் செய்யும் காரியம் யாது? அங்கிருந்து இங்குவருவது எவ்விதம்? என்பது முதலிய சங்கைகளேற்படக்கூடும் அவ்வுண்மையின் விபரம் லோகாந்தரம் எனும் புஸ்தகத்தில் என்னால் விரிவாய் எழுதப்பட்டுள்ளது. ஆயினும் இங்கும் சற்றுச் சுருக்கமாய் சொல்லப்படுகின்றது.

நம்மால், ஆசியா முதலிய ஐந்துகண்டங்களுக்கு அந்நியமாய் வேறு இடம் உள்ளதாகக் காணப்படவில்லை. ஆயினும், இப்பூவுலகத்தைக் காட்டிலும் வெகு தூரத்தில், எண்ணிறந்த பலவுலகங்களுள்ளன என்பது நிச்சயமே அவ்வுலகங்கள் இப்போதும் நம்மால் ஸ்தூலமாகக் காணப்படுகின்றன. இவைகளே பாபலோகம் என்றும், புண்ணியலோகம் என்றும் அறிக.

இந்த உலகத்தில் ஜீவர்கள் பார்த்திவ சரீரம் பெற்று வஸிக்கின்றது போலவே, அவ்வுலகங்களிலும் ஜீவர்கள் அவ்விடங்களுக்குத்தக்க ஸ்தூல சரீரம் பெற்றிருக்கின்றனர். இவ்வுலகத்தில் ஜீவர்கள் கர்மத்தைச் செய்கின்றதுபோலவே, அங்குள்ள ஜீவர்கள் ஸுகதுக்கங்களை புஜிக்கின்றனர். மனிதப்பிறவியில் நல்லகாரியங்களைச் செய்தால் ஸ்வர்க்கத்தில் ஸுகத்தை புஜிக்கலாம். இங்கு மனிதர்கள் இறந்ததும், இந்த ஸ்தூலதேஹத்தை விட்டு, வேறு ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டு ஸ்வர்க்க நரகங்களில் சென்று ஸுகதுக்கங்களை புஜிக்கின்றனர்.

இந்த ஸ்தூலதேஹத்தை விட்டதும், மற்றோர் ஸ்தூலதனைப் பற்றிக்கொண்டே ஜீவன் லோகாந்தரம் செல்லுகின்றான் என்பது வாஸ்தவமானால், அப்படிப் பற்றிக்கொள்ளப்படுவதாகிய மற்றோர் ஸ்தூலதேஹம், மரணகாலத்தில் ஸமீபத்திலுள்ளவர்க்கு ஏன் தெரியவில்லை எனின், அது இவ்விதமறிக. இங்கு இறக்குங் காலத்தில் மற்றோர் ஸ்தூலதேஹம் வருகின்றதும், இந்தஸ்தூலத்தைவிட்டு ஸூக்ஷ்ம சரீரத்தோடு அதை பற்றிக்கொண்டு லோகாந்தரம் செல்லுகின்றதும், வாஸ்தவமே. ஆயினும், அந்த ஸ்தூலசரீரம், இங்கு நம்மவர்க்குள்ள ஸ்தூல சரீரம் போன்றதாகவே யிருக்குமானால், அது கண்ணுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால், அது வேறு விதமாகிய ஸ்தூலதேஹம் என்க.

ஸ்தூலசரீரமென்று பொதுவாய்ச்சொல்லப்படினும்,பிருதிவியின் அம்சம்மிகுதியாய் அமைந்துள்ள பார்த்திவஸ்தூல தேஹமே இங்கு காணப்படுவதாம். ஜலாம்சம் மிகுதியாயுள்ள ஜலீயசரீரம் ஜலத்தில் வாழும் ஜந்துக்களுக்கு உள்ளதைக் காண்கின்றோம். பிருதிவி எனும் பூதத்தை முக்கியமாய்க்கொண்டு, பார்த்திவஸ்தூல சரீரம் இருக்கின்றது போலவே, ஜலமெனும் பூதத்தை முக்கியமாய்க்கொண்டு, ஜலீயஸ்தூல சரீரமிருக்கின்றது. இந்த நியாயத்தின்படி அக்கினியம்சம் மிகுதியாயுள்ள ஆக்கிநேய ஸ்தூல சரீரமும், வாயுவம்சம் மிகுதியாயுள்ள வாயவ்ய ஸ்தூலதேஹமும் இருக்கக் கூடுமென்று, ஊஹிக்கப்படுகின்றது.

பிருதிவியாகிய இப்பூவுலகில், ஜீவர்கள் பார்த்திவ சரீரத்தோடிருக்கின்றது போலவே, ஜலம் மிகுதியாயுள்ள உலகத்தில், ஜீவர்கள் ஜலீய ஸ்தூலதேஹத்தோடு இருக்கின்றனர். இனி அக்கினியம்சம் மிகுதியாயுள்ள உலகத்தில், ஆக்கிநேய சரீரமும், வாயு அம்சம் முக்கியமாயுள்ள லோகங்களில், வாயவ்ய சரீரமும் இருக்கக் கூடியதென்று அறிக.

ஆகவே, ஸ்தூலசரீரமானது பார்த்திவம்,ஜலீயம்,ஆக்கிநேயம், வாயவ்யம் என்று நான்குவிதமாயுள்ளது. பார்த்திவ சரீரம் பிருதிவியினாலேயே உண்டாய்,பிருதிவியினாலேயே வளர்ந்து,பிருதிவியிலேயே ஒடுங்கும். பார்த்திவ சரீரம் ஜீவிக்க, பிருதிவி ஸம்பந்தமாகவே உள்ள ஜலம்,தீ, வாயு இவை

கள் வேண்டும். உதாஹரணமாக, பிருதிவியிலிருந்து மனிதர் முதலிய பார்த்திவ சரீரம் பெற்ற ஜீவர்கள் வெகுதூரம் உயரச்சென்றால், அங்குள்ள காற்றினில் பார்த்திவ தர்மமாகிய கனம் குறைந்துள்ளதாதலால், அதைக்கொண்டு ஜீவிக்க முடியாது. மற்ற பூதங்களின் அம்சங்களும் இந்த பார்த்திவ தேஹத்தில் உள்ளனவாயினும், பிருதிவியின் அம்சமே மிகுதியாயுள்ளதாகையால் பார்த்திவம் என்னப்படுகின்றது.

ஜலீய ஸ்தூலசரீரம் ஜீவிக்கவேண்டியதாயின், ஜல ஸம்பந்தமாகவே உள்ள உணவு, காற்று முதலியவைகள் வேண்டியன. மீன் முதலிய ஜலீய சரீரத்தைக் கரையில் எடுத்துப்போட்டுவிட்டால், கரையிலுள்ள காற்றைக் கொண்டாவது, கரையிலுள்ள ஆஹாரத்தைக் கொண்டாவது ஜீவிக்காதென்பதும், மனிதர் அறிந்த விஷயமே. ஜலீய சரீரத்தில் மற்ற பூதாம்சங்களும் உள்ளனவாயினும், ஜலாம்சமே மிகுதியாயுள்ளது. இவ்வுலகிலும் ஜலம், காற்று இவ்விரண்டும், எந்த விடம் சிலாக்கியமாயுள்ளதோ, அந்த இடத்திலுள்ள ஜீவர்களே, ரோகம் முதலியவைகளாகிய கெடுதிகளுள் ஒன்றுமின்றி ஸுகமாயிருக்கின்றனர். இதனால் ஜீவராசிகளின் ஸுகத்திற்கு முக்கிய காரணம் நல்லதீர்த்தம்,நல்லகாற்று,இவைகளே, என்றேற்படுகின்றது. சந்திரமண்டலத்திலுள்ள தீர்த்தத்திற்கு நிகராகிய தீர்த்தம் எங்குமில்லை. அதன் மாதுர்யமும் சுத்தமும் ஒப்புயர்வில்லாத மஹிமை பெற்றிருக்கின்றது. ஆதலால் அம்மண்டலத்திலுள்ள ஜலம், அமிருதம் என்று சொல்லத்தக்கது. அவ்வளவு அற்புதமாகிய தீர்த்தம் அமைந்துள்ள இடம் சந்திரமண்டலமாகிய லோகம். அவ்விதமே, அதில் காற்று முதலிய மற்ற பூதங்களும் சுசியாயுள்ளமையால், அங்குள்ள ஜீவர்களுக்கு அபார ஸுக முள்ளது, என்று ஊஹிக்கப்படுகின்றது. அது புண்ணியம் செய்தவர்கள் சென்று ஸுகிக்கும் இடம். ஆனது பற்றியே அவ்வுலகம் ஸ்வர்க்கம் என்று சொல்லப்படுகின்றது. அங்கு புண்ணியத்தினால் சென்றவர்களாகிய தேவர்களும், பிதிரர்களும் இருக்கின்றனர். இவ்வுலகில் ஆமை, மரவட்டை, கீடம், மண்ணுண்ணிப்பாம்பு முதலிய இழிய ஜீவராசிகளுக்கும் பார்த்திவ சரீரமே. பசு, பக்ஷி முதலிய மத்திம ஜீவர்களுக்கும் பார்த்திவ சரீரமே. உத்தம ஜீவராசிகளாகிய மனிதர்களுக்கும் பார்த்திவ சரீரமே உள்ளது. இவ்விதமாயினும் அனந்தகோடி தாரதம்மியங்களுள்ளன. பார்த்திவ தேஹ ஜீவராசிகளுள். சில ஜந்துக்களுக்கு உள்ளில் எலும்பும் வெளியில் மாம்ஸமும், சில ஜந்துக்களுக்கு வெளியில் எலும்பும், உள்ளில் மாம்ஸமும், சில ஜீவராசிகளுக்கு வாயே மூக்காகவும், சில ஜந்துக்களுக்குக் கண்ணே காதாகவும், இவ்வாறு எண்ணிறந்த தாரதம்மியம் காணப்படுகின்றதுபோலவே, ஜலீய சரீரங்களிலும் அநந்தகோடி தாரதம்மியங்களுள்ளன. ஜலீய சரீரங்களில் மிக்க உத்தமமாகிய நிலைமை பெற்றுள்ள சரீரம் சந்திராதி லோகங்களிலுள்ளது. பிதிரர் என்பவர்களும் அங்குள்ளவர்களே. ஜலீய சரீரத்திற்கு உணவு, ஜலஸம்பந்தமாகவே இருக்க

வேண்டுமென்று பூர்வம்சொல்லப்பட்டது. ஆனதுபற்றியே பிதிரர்களுக்கு ஜலதர்ப்பணம் விதிக்கப்பட்டது என்றறிக.

இனி ஆக்கிநேய சரீரமாவது, அழகு அக்கிநியின் தர்மமேயாம். காந்தி என்பது அக்கிநியினுடையதே; அக்கிநியின் தர்மமானது மிக்க சுத்தமானது. ஆதலால் ஆக்கிநேயசரீரம் மிக்க அழகுபொருந்தியதாயும், ஜ்வலிக்கின்றதாயும்,மிகவும் சுத்தமாயும் இருக்கக்கூடியது என்று அறியப் படுகின்றது. அக்கிநியம்சமே மிகுதியாயுள்ளதும் மற்ற பூதங்களின் அம் சங்கள் ஸ்வல்ப்பங்களாயுள்ளதும் ஆக்கிநேய சரீரமென்றறிக. நம்மவர்க் கும் தேஹத்தில், உஷ்ணம் மிகுதிப்பட்டுள்ள ஸமயத்தில் நித்திரை வரு கின்றதில்லை. அவ்விதம் ஆக்கிநேய சரீரிகளுக்கும் தூக்கம் அவ்வளவாய் இராது, என்று தோன்றுகின்றது. மிக்கக் கூர்மையாய் வேலைசெய்யும் புத்தியுடையோர்களுக்கு.தேஹத்தில் உஷ்ணமேஅதிகப்பட்டிருக்கக்காண் கின்றோம். அங்ஙனமே ஆக்கிநேய சரீரிகளுக்கும் புத்தி மிக்கக்கூர்மையாக வே யிருக்கக்கூடியதாம் என்க. உஷ்ணம் மிகுதிப்பட்டுள்ள தருணம் கா மம் அதிகரிக்கும். ஆதலின், ஆக்கிநேய சரீரிகளுக்கு, காமாதிக்கம் இருக் கக் கூடியது என்றும் அறிக. ஸகல அசுத்தங்களையும் நீக்கி அக்கிநி சுத்தி செய்கின்றது, ஆதலின் ஆக்கிநேய சரீரிகள் அசுத்தலேசமுமின்றி மிகவும் சுத்தராகவே இருக்கின்றவர் என்றும், மனிதரையும் சுத்தராக்குவோர் என்றுமறிக.இனி ஆக்கிநேய சரீரிகள் யார் எனின், ஆதித்தியலோகம்,பிரு ஹஸ்பதிலோகம் முதலிய ஸ்வர்க்கலோகங்களிலுள்ள தேவர்களேயென்க. ஆக்கிநேய சரீரிகள் என்பது பற்றியே தேவர்கள் திவ்விய சரீரிகளென் றும், அழகுடையோரென்றும், ஜாஜ்வல்யமாய் ஜ்வலிக்கின்றவரென்றும், தேவர்கள் தந்ததாவனுதிசுத்தி செய்யாவிடினும், மிக்கத்தூய்மை பெற்ற வர்களென்றும், நித்திரையில்லாதவர்களென்றும், புத்தியில் சிறந்தவர்க ளென்றும், சிற்றின்பபோகமுள்ளவர்க ளென்றும், நம் இந்து சாஸ்திரம் சொல்லுகின்றது. ஆக்கிநேய சரீரிகளுக்கு அக்கிநிஸம்பந்தமாகவே உணவு முதலியது வேண்டியதாதலால், தேவர்களை உத்தேசித்து அக்கிநி யில் ஹோமம் விதிக்கப்பட்டுள்ளது. இங்கு அக்கிநியில் போடுவது அங் குள்ள தேவர்களுக்கு எப்படிசசேரும் எனின், அது மந்திரசக்தி யுக்தமா கின்றமையால் அங்கு சேரக்கூடியதென்பது, லோகாந்தரம் எனும் புஸ் தகத்தில் விரிவாய் எழுதி யிருக்கிறேன். அதைப்படிக்க உண்மை விளங் கும்.

வாயுவம்சம் மிகுதியாயுள்ளது வாயவ்ய சரீரம். வாயுவின் அம்சமே ப்ராண னுதலால் வாயவ்ய சரீரிகளுக்கு ப்ராணபலம் விசேஷமாயுள் ளது. ஆதலின் அவர்களுக்கு மரணம்நேராது. நேருதலரிது. வாயவ்ய சரீரத்தில் மற்ற பூதங்களின் அம்சங்களும் இருக்கினும் அவைகள் மிகுதி யாகிய வாயுவம்சத்தோடுகலந்து அடங்கியுள்ளனவாதலால்,(Tonic)டானி க்கில் கலந்துள்ள (Iron) இரும்பு எவ்வாறு காணக்கூடியதல்லவோ

அவ்வாறே நமது கண்ணுக்குப் புலப்படுகின்றதில்லை. டானிக்கில் உள்ள இரும்பு நம்கண்ணுக்குப் புலப்படாவிடினும், இப்போதுள்ள பூதக்கண்ணுடியிலும் மிக்கநுட்பமாகிய கண்ணுடி கிடைக்குமாளுல் ஒருக்கால் காணக்கூடும். அதுபோலவே மற்ற பூதாம்சங்களோடு கலந்துள்ள வாயவ்ய சரீரமும், நம்போன்றவர்களுக்குள்ள நேத்திரேந்திரிய சக்தியைக்காட்டிலும், மிகுந்தசக்தி பலம்பெற்ற கண்களையமையப்பெறின், நம்மவர்களாலும் காணக்கூடியதே என்க. ஆதித்திய உபாஸ்தி, யோகம், முதலிய வித்திகளைப்பெற்றோமாயின், நேத்திரேந்திரிய சக்தி மிக்கவிசேஷமாய் ஏற்பட, வாயவ்ய சரீரத்தைக்காணலாம். வாயவ்ய சரீரம்பெற்றுள்ளவர் யாவர் எனின், பூதப்ரேத பிசாசங்கள் முதலிய தேஹிகளாம். இவ்வுலகில் மிகவும்பாவங்களைச் செய்தவர், இறந்ததும் வாயவ்ய சரீரத்தைப்பெற்று, நரகம் சென்று யாதனைகளையநுபவிக்கின்றனராதலின், வாயவ்ய தேஹத்தை யாதனுதேஹமென்றும் சொல்லுவதுண்டு. வாயவ்ய தேஹத்திற்கு ப்ராண பலம் விசேஷமாயிருக்கக்கூடியதாதலின், நரகத்தில் எவ்வளவு யாதனைகளை யநுபவிக்கின்ருர்களாயினும், அவர்கள் இறக்கின்றதில்லை என்றும் சொல்லப்படுகின்றது.

பசு, நாய், பூனை, கோட்டான் முதலிய ஜந்துக்களுக்கு, இருளிலுள்ள பொருளைக் காண்பதற்கு வெளிச்சம் வேண்டியதில்லையாதலின், நம்மிலும் அந்த ஜந்துக்களுக்கு நேத்திரேந்திரிய சக்தி, விசேஷமாயுள்ளதென்பது உசிதம். ஆனது பற்றியே ஒருக்கால் வாயவ்ய சரீரத்தை அவைகள் காணலாம், என்றும் தோன்றுகின்றது. பசு கதறினும், அல்லது கோட்டான் கூவினும், அல்லது பூனை அழுதாலும், அல்லது நாய் அழுதாலும், யாருக்காவது மரணம் நேருமென்று, நம் கிராமாந்தரங்களிலுள்ள விருத்தாப்பியர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றோம். இதைச் சற்று யோஜித்தால் யாதனு சரீரமானது நாய், பூனை, பசு, கோட்டான் முதலியவைகளால் காணக்கூடியது என்றும், அங்ஙனம் அந்ததேஹத்தைக் கண்டு அவைகள் அவ்வாறு கத்துகின்றன என்றும், விளங்குகின்றது. நரகயாதனைகளை யனுபவிக்கும் பாவிகளுக்கு மாத்திரம் இப்படிப்பட்ட சரீரம் என்பதில்லை. பூத பிசாசங்களுக்கும் இவ்விதமாகிய வாயவ்ய சரீரமே என்க. பார்த்திவ, ஜலீய, தைஜஸ சரீரங்களில் உத்தமம், மத்திமம், அதமம், எனும் தாரதம்மிய மிருப்பதுபோலவே வாயவ்ய தேகத்திலும், உத்தம மத்திமாதம, தாரதம்மியமுண்டு. நரகயாதனை யனுபவிக்கும் பாவிகளுக்கும், பிசாசம் முதலியவைகளுக்கும், அதமவாயவ்ய சரீரமென்றறிக.

உலகில் பாவஞ் செய்தல் எளிதாகவும், புண்ணியஞ் செய்தலே அரிதாகவும் இருக்கின்றமையால், பாவஞ் செய்தவர்கள் எண்ணிறந்த பலரும், புண்ணியம் செய்தவர்கள் ஓர் சிலரும் இருக்கக்கூடும். புண்ணிய லோகம் செல்லும் ஜீவர்கள் மரிக்கும் காலத்தில், பக்கத்தில் நாமிருக்க

நேருதல் அரிது. முற்கூறிய நால்வகை தேஹங்களிலும், வாயவ்யதேஹம் மிகவும் நுட்பமாதலால் அது நமது கண்ணுக்குத்தென்படுதல் அரிது. இனி ஸ்வர்க்கங்கள் யாவை எனின், சந்திராதி லோகங்களும், ஆதித்திய பிருஹஸ்பதியாதிலோகங்களும்,ஸ்வர்க்கலோகங்களேயாம் என்க. அவ்வுலகிற்குறிய தேஹத்தோடு அங்கு ஸுகிக்கின்றனர். ராஹு, கேது,சனிமுதலிய மண்டலங்கள் நரகங்கள் என்றும்,அவ்வுலகங்களுக்கு மாறாகவோ அல்லது வேறுவிதமாகவோ, துக்க ஏதுவாகும்படி ஸ்தூல சரீரத்தைப் பெற்று, அங்கு பாவிகள் துக்கத்தை அனுபவிக்கின்றனர், என்றும் அறியத்தக்கது. ஸ்வர்க்கமானது திவ்யலோகமென்றும், அமிருதலோகமென்றும், இரண்டு வகைப்பட்டதென்று சொல்லலாம். சந்திரமண்டலம் முதலிய லோகங்கள் அமிருதலோகங்களென்றும், ஆதித்தியலோகம், பிருஹஸ்பதி லோகம், புதலோகம் முதலிய உலகங்கள் திவ்வியலோகங்களென்றும் அறிக.

இங்கு கொடியபாவங்களைச் செய்தவர் மரணகாலத்தில் யாதனைக்குத் தயாராயிருக்கும் வாயவ்ய (யாதனை) சரீரத்தைப் பற்றிக்கொண்டு நரகம் சென்று தபிக்கின்றனர். புண்ணியங்களையே விசேஷமாய்ச் செய்தவர் அமிருத ஜலீய சரீரத்தோடு சந்திரலோகங்களிலாவது, திவ்வியசோதி சரீரத்தோடு பிருஹஸ்பதியாதி லோகங்களிலாவது,ஸுகத்தை அனுபவிக்கின்றனர். அவ்வுலகங்களில் தத்தம் கருமங்களுக்குத் தக்க ஸுக துக்கங்களை அனுபவித்துப் பின்னர், மற்றுமுள்ள கருமங்களின் பரிபாகத்திற்குத் தக்க ஜன்மத்தை எடுக்க, இங்கு வருகின்றனர். அதாவது ஸ்வர்க்கத்திலிருந்தோ, அல்லது நரகத்திலிருந்தோ, ஆகாயம் வருகின்றனர். பிறகு ஆகாயத்திலிருந்து வாயுவிலும், வாயுவிலிருந்து மேகத்திலும், வந்து சேருகின்றனர். பிறகு மேகத்திலிருந்து மழைத்துளி மூலமாய், பூமியில்வந்து இறங்குகின்றனர். பூமியில் விழும் மழைத்துளியானது, யாதானும் ஓர் செடி, கொடி, மரம் முதலியதற்கு ஏதுவாகின்றமையால், மழைத்துளி மூலமாய் பூமியிலிறங்கிய ஜீவர்கள் செடி, கொடி, மரம் முதலியவைகளின் மூலமாய் காய், கனி, நெல், கோதுமை முதலிய பதார்த்தங்களை யடைந்து, பிறகு அவைகளை புஜிக்கும் மிருகம், பறவை, மனிதர் முதலிய ப்ராணிகளின் தேஹத்தை யடைந்து, ரக்தமூலமாய் சுக்லரூபம்பெற்று, பிறகு ஸ்திரீயின் கர்ப்பத்தை யடைந்து, மிருகம், பறவை, மனிதர் முதலிய ப்ராணிகளாய் ஜனிக்கின்றனர். இவ்வாறு ஜனிக்கும் கிரமத்தில் செடி, கொடி, காய், கறி, தானிய முதலியவைகளுள் சிற்சில வகைகளில் பாப ஜீவர்களும், சிற்சில வகைகளில் புண்ணிய ஜீவர்களும் வந்தடைந்திருக்கக் கூடுமாதலால், பாபஜீவர்கள் நம்மை வந்தடையாதிருக்க வேண்டுமென்பதை முக்கியமாய்க் கருதியே, சிற்சில பதார்த்தங்களை புஜிக்கக்கூடாதென்று, தர்ம சாஸ்திரம் சொல்லுகின்றதென்பதும் அறியத்தக்கது.

ஜீவர்கள் லோகாந்தரம் செல்லுவதும், அங்கிருந்திங்கு வருவதும் இவ்விதமிருக்க, ஸ்தூல சரீரமானது பார்த்திவம், ஜலீயம், ஆக்கிநேயம், வாயவ்யம் என்று நான்கு விதமாயுள்ள தென்பது, புத்திக்கு விளங்காமை யாலோ, அல்லது மற்ற எக்காரணத்தினலோ, லோகாந்தரமாகிய ஸ்வர்க்க நரகங்கள் எங்கேயோ உள்ளன என்பதும், இந்த ஸ்தூல தேஹம் நீங்கியதும் ஜீவர்கள் வேறு ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டு அங்கு செல்லுகின்றார்கள் என்பதும், இல்லவே யில்லை. இந்த ஸ்தூலதேஹம் நீங்கினலும் இதற்குள்ளிருக்கின்ற காம, மானஸ சரீரங் (Astral body,) (Mental body) களால், ஜீவர்கள் இங்கே யேதுக்க ஸுகங்களை யனுபவிக்கின்றனர் என்று (Theosophical society) தியஸாபிகல் ஸங்கம் என்பதை சேர்ந்தவர்கள் சொல்லுகின்றனர் அதாவது.

ஸ்வர்க்கமாவது இப்பூமியிலெடுக்கிற இரண்டு ஜன்மங்களினிடையி லுள்ள காலத்தில் ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கிறதாயுள்ள ப்ரஞ்ஞை யின் நிலையேயன்றி வேறல்ல. அதில் நாம்ப்போதும் வஸிக்கிறோம். இது (Mental plane) மானஸிகலோகமாம். ஸுவர்லோக மென்று சொல் லப்படுவதும் இதுவே. இந்த உலகம் ஸ்தானத்தில் நம்மைவிட்டுக் கொஞ் சம்கூட விலகியிருக்கவில்லை. உண்மையில் ஒரே இடத்தில் அவைகள் நம்மை வியாபித்துக்கொண்டிருக்கின்றன.

காமசரீரத்தோடு துக்கத்தை யனுபவிக்குமிடமாகிய (Astral plane) காமலோகம் என்று ஒன்றுள்ளது. இதுவும் இவ்விடத்திலேயே நம்மைச சுற்றிலுமிருக்கின்றது. இதுவே புவர்லோகமென்று வழங்கப்பட்டது. காமம் பரிபூர்த்தி யடையாமல், துக்க ஸங்கற்பங்களோடு துக்கித்துத் தவி க்குமிடமிதுவே யாதலால், நரகமென்பது மிதுவே.

ஸ்வர்க்க நரகங்களில் ஸுகதுக்கங்களை யனுபவிக்க ஸ்தூலசரீரம் வேண்டியதில்லை. ஸ்வர்க்கத்தில்(Mental body) மானஸிக சரீரத்தாலும், நரகத்தில் Astral body எனும் காம சரீரத்தாலும் ஸுக துக்கங்களை புஜிக்கின்றார்கள்.

இறந்துபோய் விட்டதாகச் சொல்லப்படுகின்றவர்கள், அப்படிக் கிற ந்துபோயும் தன் ஸமீபத்திலேயே இருந்துகொண்டிருக்கின்றார்கள். தான் தூங்கும்போது தன்னுடைய ஸ்தூலசரீரத்தை சொற்பகாலத்துக்கு மட் டும் விலக்கிவைத்தால், அவர்களோடு கலந்து நின்று முன்போலவே ஸம் பாஷிக்கலாம், என்பதாம்.

இதுபோன்ற பற்பல விஷயங்களைச சொல்லுகின்றனர். இவ்விதம் இவர்கள் சொல்லுவது யுக்திக்கு ஒவ்வுமாயின் இதை நாம் ஒத்துக்கொ ள்ள வேண்டியதே யென்னலாம், யுக்திக்கு முறணுவதானல் இதை எவ் விதம் ஒத்துக்கொள்ளுவது? அன்றியும் Theosophy, யானது நமது

வேத சாஸ்திரங்களின் ஸாரம், என்றும் சொல்லுகின்றார்கள். ஆதலால் நமது வேதசாஸ்திரங்களில் இவ்விதம் சொல்லப்படுகின்றதா, என்பதை யும் பற்றி விசாரம் செய்யவேண்டும்.

ஜீவர்களின் கர்மங்களும், ஸ்வர்க்க நரகபோகங்களும், ஸ்வர்க்க நரக லோக நிலைமைகளும், இவ்வுலகத்திலிருந்து அவ்வுலகங்களுக்கு ஜீவர் கள் போக்கு வரத்து செய்தலும், ஆகிய இதுபோன்ற விஷயங்களை யுக்தி யுக்தமாயும், விசதமாயும், சொல்லுவது பற்றியே, உபநிஷதம், பிரும்ம ஸூத்திரம், பகவத்கீதாதி ஸ்மிருதி, முதலிய கிரந்தங்களாலாகிய இந்த வேதாந்த சாஸ்திரத்திற்கு இவ்வளவு மேன்மைதங்கியுள்ளது. ஆனல் உப நிஷத்து, பிரும்ம ஸூத்திரம், பகவத்கீதை முதலிய கிரந்தங்களில், பூர் வம் யாம்நிரூபித்தபடியே ஸ்வர்க்க நரகாதி ஸ்திதிகள் சொல்லப்பட்டி ருக்கின்றனவே யன்றி, இச்சங்கத்தார் சொல்லும் விஷயத்திற்குச் சிறி தும் ஆதாரம் காணப்படவில்லை. அன்றியும், இந்த ஸங்கத்தார் சொல் லும் முற்கூறிய விஷயங்கள், நமது சாஸ்திரங்களுக்கு முற்றும் விரோத மாகவு மிருக்கின்றன. அதாவது, நமது சாஸ்திரங்கள் ஸ்வர்க்க நரகங் கங்கள் ஸ்தூலங்களாகிய ஆதித்திய சந்திராதி லோகங்களென்றும், ஸ்தூல சரீரமின்றி ஸுகமோ, துக்கமோ, ஸங்கற்பமோ, யாதும் எற்படாதென் றும், மனிதர் இறந்ததும் வேறு ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டு லோகா ந்தரம் செல்லுகின்றனர் என்றும், கண்டாகோஷிக்கின்ற தென்பதை உண்மை யறிவாளர் அறிந்தவர்களே. இனி அவ்விதமாகிய வாக்கியங்கள் நம் சாஸ்திரத்தில் எங்குள்ளன வென்றும், அவையாவை யென்றும், அறிய விருப்பமிருக்குமாயின்; அவைகளில் சில வாக்கியங்களை இதிலேயே பின் னர் நிரூபித்திருக்கின்றமையால் காணலாம். இது நிற்க; இனி யுக்தியைப் பற்றிச் சிறிது விவேகிப்பாம். அதாவது (லோகம்) ஒன்பது 'லொகு உஙடூரெநே' எனும் (யாதக) ப்ரகிருதியிலிருந்து தோன்றிய சப்தம். ஆதலின் காணப்படுகின்றது எனும் அர்த்தத்தில் வந்த சொல்லாகின்ற மையால், அது ஸ்தூலங்களாகிய பஞ்ச பூதங்களாலேற்பட்ட உலகமென் றேஅறியப்படுகின்றது. இவ்விதம் உலகம்எனும் சொல்லானது வியக்தமா யுள்ளதெனும் பொருளில் வருவதாதலின்,ஸ்தூலமென்றே சொல்லவேண் டியதாயிருக்க, வியக்தமல்லாததும் ஸ்தூலமல்லாததுமாகிய காமலோகம், மானஸிகலோகம் என்பதே நரகமும் ஸ்வர்க்கமும் என்பது எவ்விதம்? கர் மம் செய்யுமிடமாகிய இவ்வுலகம் வியக்தமாயுள்ள ஸ்தூலலோகமே யா தலால், இதன் பயனை புஜிக்குமிடமாகிய லோகாந்தரமும் வியக்தமா யுள்ள ஸ்தூல லோகங்களாகவே யிருக்கவேண்டுமென்று ஏற்படுகின் றது. லோகாந்தரமாவது ஸ்வர்க்க நரகங்களென்றும் அவை பஞ்சபூத விகாரங்களாயுள்ள, ஸ்தூல லோகங்களென்றும், உண்மை இவ்விதமிருக்க இவ்வாறே உபநிஷதம், ப்ரும்மஸூத்ரம் முதலிய சாஸ்திரங்களிலும் சொ ல்லப்பட்டிருக்க,

“லோகாந்தரமாவது Astral plane Mental plane எனும் இடமே” என்றும்,

“அது ஸ்தூலபூதங்களா லுண்டானதல்ல” என்றும்,

“அது காமம் பரி பூர்த்தியடையாமல் கெட்ட ஸங்கற்பத்தோடு தவிக்கும் நிலமையும், மேலாகிய ஸங்கற்பங்களால் ஸுகரூபமாயுள்ள ப்ரஞ்ஞாஸ்திதியுமே” என்றும்,

“Physical body எனும் ஸ்தூலசரீரத்திலும் வேருகிய (Astral body) காமசரீரம் (Mental body) மானஸிக சரீரம், என்றிரண்டுள்ளன” வென்றும்,

“காம சரீரத்தோடு Astral plane ல் தவித்தலே நரகம்” என்றும்,

“மானஸிக சரீரத்தோடு Mental plane ல் ஸுகித்தலே ஸ்வர்க்கம் என்றும், Theosophical ஸங்கத்தினர் சொல்லுதல் எவ்விதமென்பது இனிது விளங்கக் கூடியதே யென்க. அன்றியும் Astral plane எனுமிடத்தில் காமசரீரத்தாலும், Mental plane எனும் இடத்தில் மானஸிக சரீரத்தாலும், என்று வேற்றுமைப்படுத்திச் சொல்லுவதால் காமசரீரம் வேறு, மானஸிக சரீரம் வேறு, என்று கொண்டதாகின்றது காமம், இச்சை, விருப்பம் இவை ஒரே அர்த்தத்தை யுடையனவென்றறிக. இச்சை, துவேஷம், ஸுகம், துக்கம் முதலிய ஸகலமும் மனமே யன்றி வேறல்ல. மனமே க்ஷணநேரம் இச்சையாகவும், க்ஷணநேரம் துவேஷமாகவும், க்ஷணநேரம் லோபமாகவும், க்ஷணநேரம் மாச்சரியமாகவும், க்ஷணநேரம் கர்வமாகவும், இன்னும் இதுபோன்ற பற்பல பாவனைகளாகவும் பரிணமிக்கின்றது. ஆதலால் இச்சை முதலிய ஸகல பாவனைகளும் மனதிலேயே அடங்கியுள்ளது.

𑌕𑌾𑌮𑌃𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍋𑌵𑌿𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑌾𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌽𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌧𑍃𑌤𑌿𑌰𑌧𑍃𑌤𑌿𑌰𑍍𑌹𑍀𑌰𑍍
𑌧𑍀𑌰𑍍𑌭𑍀𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂𑌮𑌨𑌏𑌵 ॥

என்றிவ்விதமே உபநிஷதமும் சொல்லுகின்றதாயிருக்க, இதற்கு முற்றும் மாருக, காமம்வேறு மனம்வேறு என்று வேற்றுமைப்படச் சொல்லுதல் அநுசிதமே என்க.

இனி மனமென்னப்படும் அந்தக் கரணத்தின் விருத்திகளே காமம், ஸங்கற்பம் முதலிய ஸகல பாவனைகளுமாதலின், விருத்திபேதத்தைக்கொண்டு ஔபசாரிகமாகவே Astral body வேறு Mental body வேறு என்று சொன்னதெனின் அல்ல. காமம் முதலிய ஸகலமும் அந்தக்கரண விருத்திகளே என்பது யுக்தமேயாயினும் (Astral plane) காமலோகம் என்றும் (Mental plane) மானஸீகலோகம், என்றும் லோகபேதம் சொல்லப்படுகின்றமையால், அதைப்பற்றி ஏற்படும் தேஹபேதமும் ஔபசாரிக

மல்ல என்றே சொல்லவேண்டியதாகின்றது. ஆதலால் Astral plane Mental plane என்ற பிரிவும் Astral body Mental body என்ற பிரிவும் உசிதமானென்பதையும் யோஜிக்க வேண்டியது

அன்றியும் காமசரீரம், மானஸிக சரீரம்எனும் இவ்விரண்டும் மனோ விருத்தியும் மனது மாதலால் ஸூக்ஷ்மங்களேயாம். மனோவிருத்திகளை இந்திரியத்தாலறிய முடியாதாதலால் ஸ்தூலமல்ல வென்பதில் சந்தேக மில்லை. இந்திரியம், ப்ராணன், மனது, இவைகளின் சேர்க்கையே ஸூக்ஷ்ம சரீரம் என்று, ஏற்கனவே சொல்லப்பட்டது. தொக்கு, மாம்ஸம், ரத்தம், எலும்பு, நரம்பு, மலம், மூத்திரம், கேசம், நகம் எனும் இவைகளின் சேர்க்கையே ஸ்தூல சரீரம் என்றும் சொல்லப்பட்டது.

ஸுகமோ, அல்லது துக்கமோ, அல்லது இச்சையோ, அல்லது துவேஷமோ, அல்லது ஞானமோ, அல்லது மற்ற எந்த பாவனையோ,எது ஏற்பட்டாலும் ஸ்தூல சரீரம் வேண்டிய தவசியமே. மூளை (Brain) என் பது ஸ்தூல சரீரத்தின் ஓர்பாகம். மனது ஸூக்ஷ்ம சரீரத்தின் பாகம். மூளையில் எப்போது மனம் வேலைசெய்கின்றதோ, அப்போது இச்சை, துவேஷம், ஸுகம், துக்கம், ஞானம் முதலியது ஏற்படுகின்றது. மூளை யில் மனம் வேலை செய்யாவிடில் சுகதுக்கம் முதலியது ஏற்படுகின்றதில் லை. இதனால் மூளையில் மனது வேலை செய்வதே, ஸகல பாவனைகளுக்கும் ஹேது, என்றறியப்படுகின்றது மூளையென்றது ஸ்தூல சரீராவயவம் என்றும், மனது என்பது ஸூக்ஷ்ம சரீராவயவ மென்றும், முன்னரே சொல்லப்பட்டமையால், எந்த பாவனை ஏற்பட்டாலும் ஸ்தூல சரீரத் தோடு ஸூக்ஷ்ம சரீரம் ஸம்பந்தித் திருத்தல் அவசியம் என்றறிக. காம சரீரம், மானஸிக சரீரம், என்று சொல்லப்படுவதாகிய இரண்டு சரீரங் களும் ஸ்தூலங்களல்லவே; அவை ஸூக்ஷ்மங்களே யன்றோ. ஸ்தூல சரீர மும், அதன் அவயவமுமாகிய மூளையெனும் இடமுமின்றி,கேவலம் மனது மாத்திரத்தினாலேயே ஸுகதுக்கானுபவம், ஸங்கற்பம், ஞானம் முதலியது ஏற்படுமா ? வேலை செய்வதற்கு ஓர் ஆதாரமின்றி வேலை ஏற்படுமா ? மனம் வேலை செய்வதற்கு ஆதாரமாகிய இடம் மூளையன்றோ; இடமாகிய ஸ்தூல சரீரமின்றி மனம் வேலை செய்கின்றதெனின், அதனை எவராவது ஒவ்வுவாரா ?

இனி ஸ்தூல தேஹ வ்யவஹாரம் யாது மில்லாத ஸ்வப்பனகாலத்தில், ஸுகதுக்க ஸங்கற்ப ஞானாதிகள் ஏற்படுகின்றனவன்றோ; அதுபோலவே Astral Plane Mental plane எனும் உலகங்களில் Astral body யாலும் Mental body யாலும் அனுபவம் சொல்லக் கூடாதோ எனின், கூடா தென்க. அதாவது,ஸ்வப்பன காலத்திலும் மனது ஸ்தூலதேஹத்தின் ஓர் பாகமாகிய Cerebellum எனும் இடத்திலேயே நின்று தொழிற்படுகின்

றது என்று, பூர்வமேயே நிரூபித்திருக்கின்றனம். ஆகவே அப்போதும் ஸ்தூலதேஹ ஸம்பந்தம் இருக்கின்றதென்பது வ்யக்தமாகின்றது.

இனி ஸ்வப்பன காலத்தில் ஸூக்ஷ்ம தேஹம், இந்த ஸ்தூல தேஹந் திலேயே யிருக்கிறதென்று, ஏன் சொல்லவேண்டும்? இதை விட்டு ஸூக்ஷ்மதேஹம் வெளியில் போகின்றதென்று சொல்லக் கூடாதோவெனின், அல்ல. ஸ்வப்பன காலத்தில் ஸூக்ஷ்ம சரீரம் ஸ்தூலத்தை விட்டு வெளிப் போகின்றதெனின், அந்த ஸமயம் மூச்சு விடுவதற்கும் இழுப்பதற்கும் ஹேதுவில்லாமற் போகின்றது அதாவது, உச்சுவாஸ நிச்சுவாஸங்கள் ப்ராணனால் ஏற்படுவது. ப்ராணன் ஸூக்ஷ்ம சரீரத்தின் அங்கமே யன்றோ. ஸூக்ஷ்ம சரீரம் ஸ்வப்பன காலத்தில் வெளிப்போகின்றதென்றால், ப்ராணனும் போகின்றதென்று ஏற்படுகின்றமையால், கனவுகாணும்போது உச்சுவாஸ நிச்சுவாஸ மிருக்கக்கூடாது என்றும், ஏற்படுகின்றது. கனவு காணும்போது மூச்சில்லாமலிருக்கும் மனிதனை உலகில் காணக்கூடுமா? கனவுகாணும் மனிதர்களெல்லோருக்கும் கனவு காலத்தில் மூச்சில்லா மற் போகுமானால் ஸ்வப்பனம் காணும்போது ஸூக்ஷ்ம சரீரம் வெளிப் போகின்றதென்னலாம். அன்றியும் ஸ்நேஹிதர் இறந்து போனதாகக் கனவுகாணும்போது வாய்விட்டுக்கதறுதலும், மலையிலிருந்து விழுகின்றதாகக் காணும்போது மார்பு துடிக்கலும், மங்கைபோடு கூடுவதாய்க்காணும்போது வீரியம் நழுவுதலும் ஏற்படுகின்றதைக் கவனித்தாலும், ஸ்வப்பன காலத்தில் ஸ்தூல சரீர ஸம்பந்த மிருக்கின்றதென்பது வியக்தமா யறியக்கூடியது. ஆதலின் ஸ்வப்பனத்திலும் ஸ்தூல தேஹ ஸம்பந்தமுள்ளது என்பதே நிர்ணயம் என்க. ஆதலால் ஸ்தூல தேஹ ஸம்பந்தமில்லாமல் ஸுகதுக்கானுபவம், ஸங்கற்பம், ஞானம் முதலிய யாதும் ஏற்படாதென்றறிக. இவ்விதமே கீதையிலும் பதினெட்டா மத்தியாயத்தில்.

பஞ்சைதானி மஹாபாஹோ காரணாநி நிபோத மே
ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தாநி ஸித்தயே ஸர்வகர்மணாம்॥

ஓ மஹாபாஹோ ஸகல கர்மங்களும் ஸித்திப்பதன் பொருட்டு வேதாந்தத்தில் நிர்ணயித்துக் கூறப்பட்டனவாகிய இவ்வைந்து காரணங்களையும் என்னிடம் தெரிந்து கொள்வாயாக.

அதிஷ்டானம் ததா கர்தா கரணம் ச ப்ருதக்விதம்
விவிதாஶ்ச ப்ருதக்சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம்

இச்சாத்துவேஷ ஸுகதுக்க ஞானாதிகள் அபிவ்யக்தமாவதற்கு ஆச்ரயமாகிய சரீரம், உபாதிலக்ஷணமாகிய சிதாபாஸனோடு கூடிய அகங்காரம், இந்திரிய மனோவுருத்திகள், ப்ராணபானாதி வியாபாரங்கள், ஐந்தாவது அநுக்கிரஹதேவதை என்க.

ஶரீரவாங்மநோபிர்யத் கர்ம ப்ராரபதே நர:
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ:॥

மனிதன் சரீரத்தாலாவது, வார்த்தையாலாவது, மனதினலாவது, நியாயமாகவோ, அல்லது விபரீதமாகவோ எந்தக் காரியத்தில் பிரவர்த்திக்கின்றனே அதற்கு இவ்வைந்து காரணங்கள் வேண்டியன.

என்று சொல்லப்பட்டுளது. இங்கு அதிஷ்டானம் என்றதனல், ஸ்தூலதேஹம் ஸகல காரியத்திற்கும் அவசியம் வேண்டியது என்று உபதேசிக்கப்பட்டதாகின்றது. இனி இங்கு அதிஷ்டானம் எனும் சொல்லுக்கு ஸூக்ஷ்மதேஹம் என்று பொருள் ஏன் சொல்லக்கூடாதெனின், கரணம்,சேஷ்டை,எனும் சொற்களால் ஸூக்ஷ்ம சரீரமே சொல்லப்பட்டமையால், அதிஷ்டானம் என்பதற்கு, ஸ்தூல சரீரத்தைத் தவிர வேறு யாதும் பொருள் சொல்ல முடியாது என்க. இவ்விதம் பகவத்கீதாதி வாக்கியங்களால் செய்யப்பட்டிருக்கிற நிர்ணயங்களுக்கும், யுக்திகளுக்கும் விரோதமாய், ஸ்தூலசரீரமின்றியே ஸுகதுக்கானுபவம் சொல்லுதலே, நமது சாஸ்திரத்தின் கருத்தென்றெண்ணுவது, அநுசிதமே என்க. நமது சாஸ்திரத்தில்,

## (யஜுர்வேதம்.)

தேவாநாமேவ மஹிமாநம் கத்வா ஆதித்யஸ்ய ஸாயுஜ்யம் கச்சதி॥

பித்ருணாமேவ மஹிமாநம் கத்வா சந்த்ரமஸஸ் ஸாயுஜ்யஸ் ஸலோகதாமாப்நோதி॥

## (ப்ருஹதாரண்யம்.)

யே யஜ்ஞேந தாநேந தபஸா லோகாஞ்ஜயந்தி தே தூமமபிஸம்பவந்தி தூமாத்ராத்ரிம் ராத்ரேரபக்ஷீயமாணபக்ஷம் அபக்ஷீயமாணபக்ஷாத்யாந் ஷண்மாஸாந் தக்ஷிணாதித்ய ஏதி மாஸேப்ய: பித்ருலோகம் பித்ருலோகாச்சந்த்ரம்॥

## (கௌஷீதகீ)

த ஏதம் தேவயாநம் பந்தாநமாஸாத்யாக்நிலோகமாகச்சதி ஸ வாயுலோகம் ஸ வருணலோகம் ஸ ஆதித்யலோகம் ஸ இந்த்ரலோகம் ஸ ப்ரஜாபதிலோகம் ஸ ப்ரஹ்மலோகம்॥

### (ப்ருஹதாரண்யம்.)

[illegible]

### (மண்டலப்ராம்.)

[illegible]

என்பது முதலிய சுருதிகளால் சந்திரன், சூரியன், நக்ஷத்திரம் முதலியன லோகங்களென்றும், இங்குமங்கும் ஜீவர்களுக்குப் போக்குவரத்துண்டென்றும்,

### (சாந்தோக்கியம்.)

[illegible]

என்பது முதலிய சுருதிகளால் ஆதித்த மண்டலத்தில் மண், ஜலம், இவைகளுமுள்ளன வென்றும் நிரூபிக்கப்படுகின்றது.

### (ப்ருஹதாரண்யம்.)

[illegible]

(கௌஷீதகீ)

[illegible]

### (ப்ருஹதாரண்யம்.)

[illegible]

என்பது முதலிய சுருதிகளால், பிதிருலோகம், கந்தர்வலோகம், தேவலோகம் முதலிய உலகங்களிலிருந்து, இங்கு திரும்பி வந்து பிறக்கும் முறையும், நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

(சிவகீதை)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்ற வாக்கியங்களால், இந்த தேஹத்திலிருந்து ஜீவன் வெளிப்படுதலின் முறையும், வெளிப்பட்டதும் வேறு தேஹத்தைப் பற்றுகின்றானென்பதும்,

[illegible]
[illegible]

என்றதனால் பாபம் செய்தவர் யாதநாதேஹத்தைப் பற்றிக்கொண்டு நரகம் செல்லுகின்றார்களென்பதும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்ற வாக்கியங்களால் தானதர்மங்களைச் செய்தவர் பிதிருயாண மார்க்கமாய சந்திரலோகம் சென்று, திவ்விய தேஹத்தைக்கொண்டு ஸ்வர்க்கத்தை புஜிக்கின்றனரென்றும்,

[illegible]
[illegible]

அர்சிராதி³னா ப்ராப்ய ஸூக்ஷ்மதே³ஹயோகே³ன
ஸ்ருஷ்டித்வம் ப்ரலோகாம்ஸ்தான் விஹ்ருத்ய லோகாந்தே³ஹம்
ஸம்யஜ்ய வைராக்³யஸ்த்ஸ ப்³ரஹ்மலோகாதி³தே³ஹதிஸ:
தி³வ்யவாஹிஸம்யாய ஜீவதே³நம் நயத்யேஸ:
ப்³ரஹ்மலோகே தி³வ்யதே³ஹே ஸ்வாஹாமாநஸ்யேஸ்தா²
தத்ராஹிகாவிரங்காரம் ப்³ரஹ்மணா ஸஹ ஸாயுஜ்யதே॥

உபாஸ்தி செய்தவர் ப்ருஹ்மலோகம் செல்லும் முறையும், அங்குதிவ்ய தேஹத்தோடிருந்து ஸுகத்தை புஜிக்கின்றதும், பின்னர் முக்தி யடைகின்றதும், சொல்லப்பட்டுள்ளது.

பஞ்சப்⁴ய ஏவ மாத்ராப்⁴ய: ப்ரேத்ய து³ஷ்க்ருதினாம் ந்ருணாம்
ஶரீரம் யாதனார்தீ²யம் அன்யது³த்பத்³யதே த்⁴ருவம்॥

என்று மனுஸ்ம்ருதியிலும், பஞ்சபூதாம்சங்களாகிய வேறு சரீரத்தைப் பற்றிக்கொண்டு சென்று, நரகலோகத்தில் துக்கம் அனுபவிக்கப் படுகின்றதென்றும் சொல்லப்படுகின்றது.

இந்திரிய மனுதிகளையெல்லாம் ஒன்ருய்ச சேர்த்துக்கொண்டு ஜீவன் இந்த ஸ்தூலதேஹத்தை விட்டதும், வேறு ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டே உத்கிரமணம் (லோகாந்தரம் செல்லுதலை) செய்கின்ருன், என்ற உண்மையானது.

மந:ஷஷ்டா²னீந்த்³ரியாணி ப்ரக்ருதிஸ்தா²னி கர்ஷதி
ஶரீரம் யத³வாப்னோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர:॥
க்³ருஹீத்வைதானி ஸம்யாதி வாயுர்க³ந்தா⁴னிவாஶயாத்॥

என்ற பகவத்கீதா வாக்கியத்தாலும், காட்டப்பட்டுள்ளது. அன்றியும் ப்ருஹ்மஸுத்திரத்திலும்,

“ ப்ராணக³தேஶ்ச ”
“ ததா³பீதே: ஸம்ஸாரவ்யபதே³ஶாத் ”
“ ந த்ருதீயே ததோ²பலப்³தே⁴: ”

முதலிய ஸுத்திரங்களால், ஸுக்ஷ்ம சரீரத்தைச சேர்த்துக்கொண்டு ஜீவன் (மற்றோர் ஸ்தூலத்தைப் பற்றிக்கொண்டு) லோகாந்தரம் செல்லுகின்ருன், என்ற லோகாந்தர யாத்திரை அறியப்படுகின்றது.

இவ்விதம் நமது சாஸ்திரங்களில் லோகாந்தரம் எனின்,ஸ்தூலலோகங்களே என்றும்,அவை ஆதித்திய சந்திர க்ருஹ நக்ஷத்திராதிகளே என்றும், அந்தலோகங்களில் பாஞ்சபௌதிகமாகிய ஸ்தூல சரீரத்தைப் பற்றிக் கொண்டே ஸுகதுக்கங்கள் அனுபவிக்கப் படுகின்றன வென்றும்,இங்கிருந்து ஜீவர்கள் தத்தம் கர்மங்களுக்கேற்ப அவ்விடங்களில் சென்று கர்ம பலத்தை புஜித்து, பின்னர் ஆகாச, வாயு, மேக, மழை, முறையே இவ்வுலகத்திலிறங்கி, ஓஷதி, அன்னம், ரத்தம், ரேதஸ் மூலமாய் கர்ப்பகோசம் சென்று பிறக்கின்றனர் என்றும்,வ்யக்தமாய் நிர்ணயிக்கப்பட்டிருக்க,

"லோகாந்தரம் என்பது ஸ்தூல லோகம் என்பதும், அது இதனிலும் அந்நியமாய் தூரத்திலுள்ள தென்பதும் அல்ல"

"ஜீவர்களுக்கு இதை விட்டுத்தனியாய் எங்கேயோ தூரத்திலுள்ள உலகங்களுக்குப் போக்கு வரத்துள்ளது என்பதுமில்லை"

"ஸ்தூலதேஹமில்லாமலே ஸுகதுக்கங்கள் அனுபவிக்கப்படுகின்றன"

என்று தியாஸாபிகல் ஸங்கத்தினர் சொல்லுகின்றது, நமது சாஸ்திரத்தின் கருத்தாகாது என்றும், நம் சாஸ்திரங்களுக்கு முற்றும் விரோதமே என்றும், வ்யக்தமாய் அறியக்கூடியதே என்க.

தியஸாபிகல் ஸங்கத்தினர் சொல்லுகின்றதாகிய மற்றுமோர் விஷயத்தைக்கவனிக்கவேண்டும். அதாவது, "இறந்துபோய் விட்டதாகச் சொல்லப்படுகின்றவர்கள் அப்படிக் கிறந்துபோயும், தனக்கு ஸமீபத்திலேயே இருந்து கொண்டிருக்கின்றார்களென்றும், தான் தூங்கும்போது தன்னுடைய ஸ்தூல சரீரத்தை ஸ்வல்பகாலத்துக்கு மட்டும் விலக்கிவைத்தால், அவர்களுடன் சேர்ந்து நின்று முன்போலவே கலந்து ஸம்பாஷிக்கக் கூடும்" என்று சொல்லுகின்றார்கள்.

இவர்களது கொள்கையில், இறந்து போனவர்களுக்கு ஸ்தூல தேஹமில்லை யென்றல்லவோ சொல்லப்படுகின்றது. ஸ்தூலதேஹத்தைக் கொஞ்சக்காலம் பிரித்திருந்தால், இறந்து போனவர்களைக் காணலாம் என்றதினால், இறந்து போனவர்களைக் காண்போர்களும் ஸ்தூல தேஹமிராதவர்கள் என்று ஏற்படுகின்றது. காண்பது எனும் தொழில் ஏற்பட வேண்டுமானால், கண்முதலிய ஸ்தூல கோளகங்கள் வேண்டும். ஸம்பாஷிப்பதற்கு கண்டம், வாய், நாக்கு, முதலிய ஸ்தூல தேஹாவயவங்கள் வேண்டியதவசியமே. ஸ்தூலதேஹத்தைச் சேர்ந்தவைகளான கண்,காது, வாய், கண்டம், நாக்கு முதலிய அவயவங்களில்லாதவர்களாகிய இருவர்கள் ஒருவரை யொருவர் கண்டு பேசிக்கொள்ளக்கூடும் என்பது யுக்திக்குச் சிறிதாவது ஒவ்வுகின்றதாகுமா ? இல்லை யன்றோ. அது யுக்திக்கு ஒவ்வாதது மாத்திரமல்ல. சாஸ்திரங்களுக்கும் ஒவ்வாததே யென்க.

"உபபத்யாரோஹாதத்திஷு:"

என்ற ப்ரும்மஸூத்திரம் முதலிய சாஸ்திரங்களில், ஸ்தூல சரீர மில்லாவிடில் ஞானேந்திரியம் கர்மேந்திரியம் எனும்இருவகை இந்திரியங் களும் சேஷ்டிக்க முடியாது என்று, நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றது. இவ் விதமே அனுபவத்திலும் உள்ளது. ஸ்தூல சரீர மில்லாவிடில், கேவல ஸூ க்ஷ்ம சரீர மாத்திரத்தினால் எவனாவது பேசுகின்றதையறிந்து அனுபவித் திருக்கின்றோமா ? அவ்விதம் முடியுமென்றால் அதனை யாராவது அங்கீ கரிப்பார்களா ? இல்லை யன்றோ; இவ்விதமிருக்க அனுபவம், யுக்தி, சாஸ் திரம் இம்மூன்றிற்கும் விரோதமாய்ச் சொல்லுவதாகிய இவர்களுடைய கொள்கையை வாஸ்தவமென்றால், இவ்விதம் ஸம்பவியாதென்று நிரூபிக் கின்றனவாகிய உபநிஷதம், பகவத்கீதை, ப்ரும்ம ஸூத்திரம் முதலிய சாஸ்திர க்ரந்தங்களை அபத்தங்களென்றே சொல்லவேண்டிய தாகும். அஹோ இதென்னகாலம். சுருதி, ப்ரும்ம ஸூத்திரம், பகவத்கீதை முதலிய சாஸ்திர க்ரந்தங்களின் மஹிமை அளவிறந்த தென்றும், அவைகளில் நிர் ணயிக்கப்பட்ட விஷயங்களே உண்மையாயுள்ளனவென்றும், அவைகளில் பிரதிபாதிக்கப்படும் ஸமயமே ஸம்பூர்ண மதம் என்றும், இதரகண்டங்களி லிருக்கின்றவர்களும் மிக்கக் கொண்டாடுகின்றதாயுள்ள இக்காலத்திலே யே, இவைகளில் சொல்லப்படுவதை அபத்தமென்று சொல்லவேண்டிய தாகின்றது அது மாத்திரமா; இந்த சாஸ்திர க்ரந்தங்களை ப்ராணனிலும் அதிகமாய்ப்பாராட்டிக் கொண்டிருந்தவர்களாகிய நம்மவர்களே இவை களைத் துச்சமாய்த் தள்ளும் காலமாகின்றது. இது நிற்க.

இந்த ஸ்தூல தேஹத்தினால் புஜிக்கவேண்டிய ஸுகதுக்கங்கள் புஜி த்து முடியும்போது, ஜீவன் ஸூக்ஷ்ம சரீராவயவங்களாகிய இந்திரிய மன ப்ராணன்களை முறையே ஒன்றொன்றாய் இருதயகமலத்தில் ஆகர்ஷித்து சேர்த்துக்கொண்டு, குடியிருந்தவன் தனது ஆடையாபரணம் முதலிய பொருள்களை யெடுத்துக்கொண்டு, ஜீர்ணமாகிய வீட்டை விட்டு வேறுவீட் டிற்குப்போகின்றது போலவே, வேறு ஸ்தூலத்தைப் பற்றிச்சென்று அவ் வுலகில் ஸுகதுக்கங்களை யனுபவிக்கின்றான். ஸ்தூலதேஹத்தைவிடுவதும் மற்றோர் ஸ்தூலத்தைப்பற்றிக்கொள்வதும், ஸ்வர்க்க நரகங்களில்ஸுகதுக் கங்களை யனுபவிக்கின்றதும், மறுபடி பிறக்கின்றதும், இறக்கின்றதும், மறுபடி வேறு ஸ்தூலத்தைப் பற்றுவதுமாய், இவ்விதம் ஓய்வொழிவின்றி வண்டிச்சக்கரம் சுழல்கின்றதுபோலவும், பெருஞ்சுழல்காற்றில் அகப்பட்ட துரும்பு போலவும், ஸம்ஸாரத்தில் கிடந்துழன்றலற படும்படி யிருக்கின் றமையால், ஸூக்ஷ்ம சரீரத்திற்கு ஸம்ஸார பந்தமுள்ள வரையில் நாசமில் லையென்பதும் அறிக.

இனி நித்திரையாகிய ஸுஷுப்தி காலத்தில் மனம் நசிக்கின்றதே எனின், அல்ல என்க. நாசமடைந்தால் மீண்டும் முன்போலாவதற்கு நியா

யமில்லையன்றோ; ஸுஷுப்தியில் மனதின் வேலையொன்றும் காணப்படாவிடினும், ஜாக்கிரத்திலும் ஸ்வப்பனத்திலும், மீண்டும் முன்போலாகின்றமையால், ஸூக்ஷ்ம சரீரத்திற்கு ஸுஷுப்தியில் நாசமேற்பட நியாயமில்லை. ஆனது பற்றியே.

"யாவதாத்மபாவித்வாச்ச நதோஷஸ்தத்தர்சநாத்"

என்ற பிரும்ம ஸூத்திரத்தில், மனதிற்கு ஸுஷுப்தியில் நாசமில்லையென்றும், லயமே உள்ளதென்றும். நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றது. இதுவரையில் இந்தப் புஸ்தகத்தில் மனதென்று சொல்லப்பட்டதானது மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் எனும் நான்கு விருத்திகளுக்கும் பொதுவிலுள்ள அந்தக்கரணம் எனும் பொருளில் சொல்லப்பட்டதேயன்றி வேறல்ல. Mind என்றே ஆங்கிலத்தில் வழங்குகின்றமையால் அதை ஒட்டி மனதெனும் சொல்லால் வழங்கினால் பலருக்கு எளிதில்விளங்குமென்று அவ்வாறு சொல்லப்பட்டது

மனதால்வரும் பயன் யாதெனின், மனதே பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஹேது; மனது பிரபஞ்சத்தை நாடிக்கொண்டே யிருக்கும். அந்த நாட்டம்உள்ளவரையில் கர்மம் ஏற்படும். கர்மமுள்ள வரையில் ஸ்வர்க்க நரகங்களில் ஸுகதுக்கானுபவமும்,ஜன்மமுமுள்ளது.மனது பஞ்சபூதங்களின் அம்சமாதலால் எப்போதும், பாஞ்சபௌதிகமாயுள்ள பிரபஞ்சத்திலேயே சென்று கொண்டிருக்கின்றதென்று, பூர்வம் மனோ ஹேது நிரூபண ப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. மனது பிரபஞ்சத்தில் செல்லுதலைத் தகைவது அரிதாதலால், அதற்கெனவே யோகம், உபாஸ்தி முதலியன விதிக்கப்பட்டிருக்கின்றன. மனதினில் வாஸனை யென்றொன்றுள்ளது. அது எப்போதும் நல்லகாரியங்களிலோ, அல்லது கெட்டகாரியங்களிலோ ஏவிக்கொண்டே யிருக்கின்றது.

கள் கஞ்சா முதலியவைகளை யுபயோகப் படுத்துவோன், "இனி இவைகளை யுபயோகிக்கக்கூடாது" என்று உறுதி செய்துகொண்டு சில காலம் அவ்வுபயோகத்தை விட்டிருந்தாலும், பூர்வம் அவைகளை யுபயோகித்து வந்த அப்பியாஸ விசேஷமானது, மீண்டும் அம்மனிதனை முன்போலவே அவைகளை உபயோகிக்கும்படி, விருப்பத்தை யுண்டாக்கி விடுகின்றது. ஒன்றைச் சிலகாலம் அப்பியஸித்தால் மனதினில் ஏற்பட்ட அதன் ஸம்ஸ்காரம், மீண்டும் அக்காரியத்தில் ஏவிக்கொண்டிருக்கும் என்பது, உலகில் பலகோடி திருஷ்டாந்தங்களில் காணக்கூடியதே. இதற்கு முன்னெடுக்கப்பட்ட ஜன்மங்களில் செய்யப்பட்ட காரியங்களுக்கும், அனுபவிக்கப்பட்ட விஷயங்களுக்கும். தக்கபடி, மனதினில் ஸம்ஸ்காரம் எவ்வளவோ ஊன்றியிருக்கவேண்டு மன்றோ. இந்த ஸம்ஸ்காரங்களே வாஸனைகளென்னப் படுகின்றன. அற்பகாலம் கஞ்சா, கள்முதலியவைகளை யுப

யோகித்த தனலேற்பட்ட வாஸனையானது, மிக்க உறுதிசெய்துகொண்டு அவ்வுபயோகத்தை விட்டிருக்கின்றவனையும், முன்போலவே அவைகளை யுபயோகிக்கும்படி செய்துவிடுமானல், அளவிறந்த ஜன்மங்களில் அனுபவித்துழன்ற விஷயபோகங்களாலேற்பட்டு மனதினிலூன்றிய வாஸனைகள் விஷயங்களில் மிகவும் பலமாக ஏவிக்கொண்டிருப்பன என்பது நம்மால் ஊஹிக்கக்கூடியதே என்க.

இதற்கு முன் எடுத்திருந்த அனந்தகோடி ஜந்மங்களில் எவ்வளவோ நல்லகாரியங்களையும் கெட்டகாரியங்களையும்செய்து விஷயபோகங்களேற்பட்டிருக்கக்கூடும். அவைகளுக்குத் தக்கபடி சுபாசுப வாஸனைகள் மனதினில் மிக்கத்திடமா யூன்றியிருந்திருக்கவேண்டும் நல்ல வாஸனைகள் நல்ல காரியத்திலும், கெட்டவாஸனைகள் கெட்டகாரியத்திலும் ஏவும்.

வாஸனையானது சக்திபோல் மனதிற்கும் எட்டாத தாயுள்ளது. சக்தியெல்லாம் அதன் காரியத்தினல் ஊஹிக்கக்கூடியது மாத்திரமன்றி நேரில் அறியக்கூடியதல்ல. ஒரே மனிதனுக்கு ஓர் ஸமயம் நல்ல காரியத்தில்விருப்பமும், ஓர் ஸமயம் கெட்டகாரியத்தில் விருப்பமும் ஏற்படுகின்றது. சிலர் கற்றறியாத மூடராயிருக்கும்போது நல்லகாரியம்செய்ய விரும்பினலும், கற்றறிந்த பிறகு கெட்டகாரியத்தைச்செய்ய விரும்புகின்றனர். சிலர் கெட்டகாரியம் செய்யக்கூடாதென்று எவ்வளவோ உறுதிசெய்து கொண்டிருக்கின்ற வராயினும், ஓரோர் ஸமயம் பிறர் மங்கையொடு கூடுதல் முதலிய கெட்டகாரியங்களில் விருப்ப முதித்துக்கலங்குகின்றனர். சிலர்படித்தறிந்த பின்னர் "நாம் இத்தனைகாலம் வரையில் கெட்டகாரியங்களையே செய்துகொண்டிருந்து விட்டோமே; இனியாவது நல்லகாரியங்களைச்செய்யவேண்டும்" என்று உறுதி செய்துகொண்டு கெட்டகாரியத்தில் மனதைச்சிறிதும் நாடவிடாமலிருக்கின்ற வராயினும், அழகினில் சிறந்த அன்னியர்மங்கை முதலிய பொருள்களை விரும்புதலாகிய மிக்கப்பாவ காரியங்களில் செல்லும்படியாகின்றதையும் காண்கின்றோம். இவைகளையெல்லாம் கவனித்தால்,ஒவ்வொரு ஜீவனுக்கும் மனதினில் ஊன்றிய எண்ணிறந்த வாஸனைகளிருக்கின்றன வென்றும், அவைகளுள் எந்த வாஸனை எந்த ஸமயத்தில் ஏவுகின்றதோ அந்த வாஸனைக்குத்தக்க காரியத்தில் அப்போது பிரவர்த்திக்கின்றனர் என்றும், எல்லோருக்கும் வாஸன வசமாகவே காரியங்களில் பிரவர்த்திக்க எண்ண முண்டாகின்றது என்றும், நன்கு விளங்குகின்றது.

வாஸனையானது ஜீவர்களை சுபகாரியத்திலோ, அல்லது அசுபகாரியத்திலோ ஏவுதலும்,ஸங்கற்பம், காமம், எனும் இவைகளின் மூலமாகவே என்றறிக. பிறன் மங்கை தென்படும் ஸமயத்தில்,இயல்பாகவே நேத்திரம் அம்மங்கையைப் பார்த்தாலும், நல்ல வாஸனை முனையப்பெற்றவன், இம்மங்கையை நாம் பார்க்கக்கூடாது என்று எண்ணி, மனதை அதனினின்

றும் பிரித்து ஓர் நல்ல காரியத்தில் செலுத்துகின்றான். அசுபவாஸனை யால் ஏவப்பெற்றவன் அம்மங்கையின் அங்கஸௌந்தரியாதி குணங்களை ஸங்கற்பிக்கின்றான். அவ்விதம் ஸங்கற்பிக்கவே இம்மங்கையை நாம் அநு பவிக்க வேண்டுமென்று விருப்ப முதிக்கின்றது. அவ்விருப்ப முதிக்கவே அவளோடு கூடுதற்குவழியைத்தேடுகின்றான். பிறகு அந்தக்கெட்டகாரியத் தைச் செய்கின்றான். விதையே முளையாயும், செடியாயும், மரமாயும், பரி ணமிக்கின்றதுபோல மனமே ஸங்கற்பமாயும், காமமாயும், நிச்சயமாயும் பரிணமிக்கின்றது. இதைச்செய்ய வேண்டுமென்று நிச்சயம் ஏற்படவே அக்காரியத்தைச் செய்கின்றான். வறுத்த விதை முளையாததினாலும்,வறுத் தல் முதலிய கேடின்றி ஸரியாயுள்ள விதையே முளைக்கின்றமையாலும், விதையில் முளைக்கக்கூடியதாகிய ஓர் சக்தியுள்ளதென்று வியக்தமாயறி யப்படுகின்றது. விதையே முளையாகப் பரிணமிக்கினும், அவ்விதம் பரிண மிக்கச்செய்வது அவ்விதையிலுள்ள முளைக்கச்செய்யும் சக்தி யென்பது போல, மனதே ஸங்கற்பமாய்ப் பரிணமிக்கினும், அவ்விதம் பரிணமிக்கச் செய்வது அம்மனதிலுள்ள ஸங்கற்போற்பாதக சக்தியே யென்றும் அறிக. அந்த சக்தியே வாஸனையென்பதாக ஏற்கனவே சொல்லப்பட்டது. ஆத லால்,ஸகல ஜீவர்களும் வாஸனு வசமாகவே விஷயங்களை ஸங்கற்பிக்கின் றவர்களாய், காமனைக்கு உட்பட்டு சுபாசுப காரியங்களில் பிரவிர்த்திக்கின் றனர், என்று நிர்ணயிக்கப்படுகின்றது.

இவ்விதம் சுபாசுப வாஸனைகளுக்கு உட்பட்டு, கர்மங்களைச்செய்தும் ஜன்மங்களையெடுத்தும் ஓய்வொழிவின்றி அல்லற்படும் ஜீவர்களுக்கு நலம் கிடைப்பதரிதாகவே யிருக்கின்றது. அரியதாகிய மனிதப்பிறவியைப்பெற் றதின் பயன், ஜன்மகர்மங்களுக்குட் படாமலிருக்கும் வழியைத்தேடுதலே யாம் என்க.

கர்மங்களினாலேயே ஜன்மங்களும்,ஜன்மங்களினாலேயே கர்மங்களும் ஏற்பட்டு,ஸம்ஸாரத்திற்குள் கிடந்து ஜீவர்கள் அல்லற்படுகின்றனர் என்ற தனால், கர்மமே ஜீவர்களுடைய ஸம்ஸார பந்தத்திற்குக் காரணம் என்றும், கர்மங்களே ஸுகதுக்கங்களைத் தருகின்றன, என்றும் ஏற்படுகின்றது. இதுவே போதுமானதாயிருக்க, ஈச்வரனென்ற ஒருவனையேன் ஒத்துக் கொள்ளவேண்டும்? கர்மத்தினாலேயே பிரபஞ்சவியாபாரம் நடைபெறுகின் றதா யிருக்கின்றமையால், ஈச்வரனென்பவனை யங்கீகரிக்கவேண்டியதில் லையே யெனின், இது உசிதமல்லவென்க. அதாவது, கர்மம் எனின் செய் யப்படும் தொழில் என்பதாம். செய்கை, கர்மம், வினை முதலிய சொற்கள் ஒரே அர்த்தத்தையுடையன வென்றறிக. தொழிலைச்செய்வோன் மாத்தி ரம் சேதனமேயன்றி தொழில் சேதனமல்ல. தொழில் என்பது அசேதன மே. அசேதனமெனின் அது இன்னாருக்கு இன்னபயனைத்தரவேண்டும் என்று, அறியத்தக்க யோக்கியதையில்லாதது என்றறிக. கர்மமே ஜீவர்களு க்கு ஸுகதுக்கங்களைக் கொடுக்கின்றதெனின், இவன் இதைச்செய்தவன்

இவனுக்கு இந்தப்பயனை இத்தனைகாலம் வரையில்அனுபவிக்கும்படி கொடுக்கவேண்டும் என்றறிந்தே, அவ்விதம் கொடுக்கின்றதாகவேண்டும். அவ்விதம் அறிவதற்கியலாதவினை, ஸுகதுக்கங்களைத் தரப்போதுமானதாகாதன்றோ கூலிக்காரன் செய்யும்வேலையே அவனுக்குக்கூலிதருகின்றதென்பதில்லை. அவ்வேலையை யறிந்த சேதனனாகிய எஜமானனே இவன் இன்னவேலையைச் செய்தவன், இதற்கு இவ்வளவு கூலிகொடுக்கவேண்டும், என்பதை யறிந்தே கொடுக்கக்காண்கின்றோம். கூலிக்காரனது வேலைக்குள்ள கூலியை எஜமானனாகிய சேதனனே கொடுக்கின்றதுபோல, ஜீவர்களின் கர்மங்களுக்குத்தக்க பயனை, ஓர்சேதனனே கொடுக்கவேண்டுமென்பது உசிதமாகின்றது. உலகில் எவனுக்காவது அவன் செய்தவேலையே அதற்குள்ள கூலியைக்கொடுக்கின்றதை நாம் கண்டிருப்போமானால், அதனை த்ருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு ஜீவர்களுக்கு, கர்மமே அதன் பயனைத் தரப்போதுமான தாதலால், அதற்கென ஈச்வரனை ஒத்துக்கொள்ளவேண்டியதில்லை யென்று சாதிக்கலாம்; ஆனால், உலகில் ஓரிடத்திலாவது, அவ்விதம் திருஷ்டாந்தம் காணப்படுகின்றதில்லை. ஆதலால் கர்மம் அசேதனமாதலால், அது ஓர்சேதனனிராவிட்டால் ஜீவனுக்கு ஸுகதுக்கங்களைக் கொடுக்க இயலாது என்று, வியக்தமாய்த்தெரிய வருகின்றது.

கொலைசெய்தவன், அக்குற்றத்திற்குத்தக்க தண்டனையைப்பெற்று கஷ்டப்படுகின்றதைக் காண்கின்றோம். அவனுக்கு அந்தத் தண்டனையை அக்கொலையே தருகின்றதில்லை. அக்குற்றம் வெளிப்பட்டால், அவனை நியாயாதிபரே தண்டிக்கின்றனர். அதுபோலவே ஜீவர்களின் கர்மங்களுக்குத் தக்கபயனை ஈச்வரனே தருகின்றான் என்று சொல்லவேண்டியதாகின்றது. உலகிலுள்ள ஜீவர்களோ, எண்ணிறந்த கோடிக்கணக்காய் பேதமுற்றிருக்கின்றனர். ஒவ்வொரு ஜீவனுக்குமுள்ள கர்மங்கள் கணக்கிலடங்காதனவாயிருக்கின்றன. ஆதலால், அத்தனைகோடி ஜீவர்கள் செய்யும் கர்மங்களையும், அவைகளின் பயனாகிய ஸுகதுக்கானுபவங்களையும் அறிந்து, அவ்வாறு தருபவன் ஒருவனிராவிடில், இத்தனைகோடி ஜீவராசிகளுக்கும் கர்மபலபோக மேற்பட நியாயமில்லை. ஆதலால் அப்படிப்பட்ட பேரறிவாளன் ஒருவன் இருக்கின்றான் என்பது நிச்சயமே. உலகிலுள்ள ஸகல ஜீவகோடிகளையும், அவர்களின் கர்மங்களையும், அக்கர்மங்களின் பயன்களையும் அறிவோன், ஸர்வக்ஞனாகவே இருக்கவேண்டுமன்றோ. ஸர்வக்ஞனெனின், எல்லாம்அறிந்தவன் என்பது பொருள். அப்படிப்பட்டமுற்றறிவாளனே ஈச்வரனென்க இவ்விதம் கர்மங்களுக்குத் தக்கபயனை ஜீவர்கள் புசிக்கின்றனராயினும், அப்பயனைத் தருவோனாகிய ஈச்வரன் என்பவனை, அவசியம் ஒத்துக்கொள்ள வேண்டியதாகின்றதாதலால் கர்மமே போதுமானதென்பது உசிதமல்ல என்று அறியத்தக்கது.

இவ்விதம் சொல்லியதனால்,குற்றம் செய்தவர் அரசனுடைய ஆக்ஞையால் தண்டனையடைவதுபோல, ஜீவர்கள் ஈசாக்ஞையால் கர்மபலத்தை

புஜிக்கின்றனர் என்று ஏற்பட்டது. இனி ஈசன் அவ்வாறு ஆக்ஞைசெய்த தற்கு முன், ஜீவர்கள் எந்த ஸ்திதியிலிருந்தனர் எனின், இவ்வுண்மை யறிக. ஈசாக்ஞை ஓர்காலமிராமலிருந்து மற்றோர் காலத்தில் ஏற்பட்டது என்பதில்லை. ஈச்வரன் ஓர்காலத்தில் இராமலிருந்து மற்றோர் காலத்தில் பிறந்தவனென்பதுஇல்லாமல், எப்படி அநாதியாயிருக்கின்றானோ, அப்படி யே ஈசாக்ஞையும் அநாதி என்றறிக. ஈசாக்ஞை யநாதியாயிருந்தால், அவ் வாக்ஞைக்கு விஷயமாகும் ஜீவர்களும் அநாதியே யென்றும், ஜீவர்கள் அநாதியெனின், அவர்கள் கிடந்தல்லற்படுமிடமாகிய பிரபஞ்சமும் அநா தியே யென்றும் அறியப்படுகின்றது. ஆதலால் ஜீவேச ஜகங்கள் அநாதி யே யென்பதறிக.

இனி அநாதியென்பது யுக்திக்கு ஒவ்வவில்லையே; அதனை எப்படி ஒத்துக்கொள்ளுவது எனின், இது அயுக்தமே. புத்தி ஏற்றுக்கொள்ளாத விஷயத்தை ஒத்துக்கொள்ளுவதில்லை யென்பது உசிதமாகுமா? சில விஷ யங்கள்புத்தியேற்றுக் கொள்ளும்படி விசாரிக்கத்தகாதனவாயிருக்கக்கூடும்; அதனால் அவ்விஷயங்களை ஒத்துக்கொள்ள மாட்டேனென்பது தகுதியா மோ? விதை முந்தியதா மரம் முந்தியதா எனின், இன்னதென்று சொல்ல முடியவில்லை. விதையில்லாவிடில் மரமில்லை யாதலால் விதையே முந்திய தென்போமாயின், மரமிராவிடில் விதையில்லை யாதலால் மரமே முந்தியது என்று சொல்லவேண்டியதாகும். இவ்விதம் சொல்லிக்கொண்டே யிருக் கின், இதுவே முந்தியது இதுவே பிந்தியது என்று சொல்லமுடியாமல் போகின்றமையால், முடிவில் இது அனவஸ்தையென்றே சொல்லவேண் டியதாகின்றது. அதாவது விசாரிக்க இயலாதது என்பதாம். அவ்வனவஸ் தையென்பதை, புத்தி எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டியதாகின்றதோ, அப்படியே அநாதியென்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டியதென்க.

இனி ஈச்வரனுடைய தன்மை யாது எனின், ஜீவர்களுக்குள்ளது போல் அவனிடம் எந்தகுணமுமில்லை என்றும், அவன் ஸ்வபாவ நியதமாய் ஸகல ஜீவர்களுக்கும் ஸுக ஹேதுவாகவே உள்ளவனென்றும் அறியத் தக்கது. ஈசனுடைய தன்மை அற்பமானதல்ல வென்றும், அவன் ஸ்வ பாவ நியதமாய் ஸகலருக்கும் ஸுகத்தையே தருகின்றவனென்றும் சொல் லுவது உசிதமோ? உலகில் வாழ்நாள் முழுதும் சிலர் துன்பத்தையே யடையவும், அவ்விதம் சிலர் ஸுகத்தையே பெறவும் காண்கின்றோ மன் றோ. ஜீவர்கள் துன்பமடைவதும் ஸுகப்படுவதும் ஈசாக்ஞையாலேயே என்று, பூர்வம் நிரூபிக்கப்பட்டது. அப்படியானால் ஈசனே சிலரைத்துன் புறுத்துகின்றவனென்றும், சிலரை ஸுகிக்கச் செய்கின்றவனென்றும், ஏற்படுகின்றது. எவரைத் துன்புறுத்துகின்றானோ அவர்களிடம் வெறுப் பும், எவர்களை ஸுகிக்கச் செய்கின்றானோ அவர்களிடம் பிரியமும், உள்ள தென்பது உசிதமன்றோ. இவ்விதம் ஈசனுக்கும் சிலரிடம் பிரியமும், சிலரி

டம் துவேஷமும் இருக்கின்றது எனின், அது ஈசவரத்தன்மைக்குத்தகுதியாகுமா ? அற்பகுண முடையவர்களாகிய மனிதர்களுக்கன்றோ சிலரிடம் பிரியமும், சிலரிடம் துவேஷமும் இருக்கின்றது ஈசனுக்கும் அவ்வாறுயின் அவனை ஈசவரனென்பது அநுசிதமல்லவா எனின், அல்ல. அதாவது, ஈசன் ஸகல ஜீவர்களிடத்திலும் ஓரே விதமாகிய ஸ்வபாவமே உடையவன். அவன் பாரபக்ஷமுடையவனல்ல. ஈசன் ஸ்வபாவத்தில் ஸுகரூபன். அவன் ஸ்வபாவ நியதமாகிய ஸுகமானது ஸகல ஜீவர்களாலும் அனுபவிக்கப்படுகின்றது. ஆயினும் சில ஜீவர்கள் பாவங்களைச்செய்து துக்கத்தையும், சிலர் புண்ணியங்களைசசெய்து ஸுகத்தையும் அனுபவிக்கின்றனர். இவ்விதமேயன்றி ஈசன்பார பக்ஷமுடையவன் என்பதும், அவன் ராகத்வேஷாதிகளுள்ளவன் என்பதும் மிக்க அநுசிதமே என்க. நீதிநெறிமாறாத அரசனை ஈசனுக்கு நிகராகச் சொல்லலாம். அரசன் ஸகல பிரஜைகளுக்கும் நலத்தையே செய்வோனுயினும், குற்றம் செய்தவர் தண்டனையையும், கண்ணியமாகிய நடத்தை யுடையோர் கௌரவத்தையும் பெறுகின்றனர். அது போலவே, ஈசன் ஸ்வபாவ நியதமாய் ஸகல ஜீவர்களுக்கும் ஸுக ஹேதுவாயுள்ளவனுயினும், சிலர் புண்ணியம் செய்தலால் ஸுகத்தையும், சிலர் பாவம் செய்தலால் துக்கத்தையும் அனுபவிக்கின்றனர். உலகில் கொலை செய்தவன் கடுந்தண்டனையைப் பெறுதற்கு ஹேதுவானது, அவன் செய்த குற்றமே என்பதை விட்டு, அரசனுக்கு அக்குற்றவாளியினிடம் துவேஷமுள்ளது என்பது உசிதமா ? நீதிவழுவாத அரசரிடம் பாரபக்ஷத்தைக் கற்பிப்பது உசிதமல்லவன்றோ. கௌரவமாகிய நடத்தையுடையோரிடம் அரசனுக்குப் பிரியமுள்ளதென்று சொல்லி, அரசனுக்குப்பார பக்ஷமிருக்கின்றது என்பது அநுசிதமே யன்றோ. இதுபோலவே ஈசன் எல்லோருக்கும் பொதுவாய் ஸுகத்தையே செய்வோன். ஆயினும், ஜீவர்கள் அதனேடுகூட தமது செயலால் சுகதுக்கங்களையும் அனுபவிக்கின்றனர் என்றறிக.

இனி அரசன், ஸகல ஜீவர்களுக்கும் பொதுவில் ஸுகம் தருவோன் என்பதை எப்படி ஒத்துக்கொள்ளலாகும்? குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனையால் துக்கத்தையே தருகின்றுனன்றோ எனின், அல்ல. தண்டனை யடைந்து சிறைச்சாலையி லிருக்கின்றவர்களுக்கும், தேஹத்தில் அஸௌக்கியம் நேர்ந்த காலத்தில், வைத்தியர் (Doctor) களைக் கொண்டு தக்க மருந்தைகளைக் கொடுத்து ஸௌக்கியப்படுத்துதலைக் காண்கின்றோம். இதைக் கவனித்தால் அரசனுக்கு ப்பாரபக்ஷமே யில்லை யென்பதும், குற்றம் செய்தவர்களிடம் துவேஷமில்லை யென்பதும், அவன் எல்லோருக்கும் நலத்தையே செய்கின்றவனென்றும், நன்றாய் விளங்குகின்றது. இதுபோலவே ஈசனது ஸ்வபாவ நியதஸுகமானது, ஸகல ஜீவர்களாலும் பொதுவில் அனுபவிக்கப்படுகின்றது. அதாவது, பாவம் செய்து அதனுல் அங்கஹீனராய்ப் பிறந்து கஷ்டப்படும் ஜீவர்களுக்கும் ஸுஷுப்தியில் ஸுகமிருக்கின்றது ஸுஷுப்தி ஸுகம், ஜீவனது செயல்களால்

லாம் ஓய்ந்துபோன ஸமயத்தில் அனுபவிக்கப்படுதலால், அது இவர்களது செயலால் வந்ததென்பது கூடாது. ஆதலால், அது ஈசனது ஸ்வபாவ நியதமாகிய ஸுகமே என்றறிக. ஸுஷுப்தியில் ஸுகமானது, மனிதர், பறவை, மிருகம், தேவர், நரகர், பாவம் செய்தவர், புண்ணியம் செய்தவர் முதலிய ஸகல ஜீவர்களுக்கும் பொதுவில் உள்ளது. ஈசனது ஸ்வபாவநியதஸுகம், ஸகல ஜீவர்களாலும் பொதுவில் வித்தியாஸமின்றி அனுபவிக்கப்படுகின்றமையால், ஈசன் பாரபக்ஷமுடையவனல்ல என்றறிக. புண்ணியம் செய்தவர்களால், ஈசனது ஸ்வபாவ நியதமான ஸுகம் ஒன்றும், தமது புண்ணியங்களின் பலனாகவந்த ஸுகம் ஒன்றும், ஆக ஸுகம் இருவிதமாய் அனுபவிக்கப்படுகின்றது. பாவம் செய்தவர்களால், ஈசனது ஸ்வபாவநியதமாகிய ஸுகம் மாத்திரமே அனுபவிக்கப்படுகின்றது. ஜீவர்களின் செய்கை யாதுமில்லாத ஸமயமே ஸுஷுப்தி என்னப்படுகின்றது. அந்த ஸமயமே ஈசனது ஸ்வபாவநியதமாகிய ஸுகம் அனுபவிக்கப்படுகின்றதென்பதைக் கவனித்தால், ஜீவர்கள் தமது ஸகல செயல்களையும் விடுத்து, மனோமௌனமாகிய நிலைமையில் இருப்பார்களானால் ஈசனது ஸ்வபாவநியதமாகிய ஸுகம் நன்கு அனுபவிக்கலாகும் என்றும் இதனால் அறியத்தக்கது.

ஜீவர்களது செயல்களெல்லாம் நீங்கிய ஸுஷுப்தியில், ஈசனது ஸ்வபாவநியதஸுகமே அனுபவிக்கப்படுகின்றது என்றதனால், ஸுகானுபவம் உள்ளது என்று ஏற்படுகின்றது. ஸுஷுப்தியில் ஸுகமுள்ளதென்பதை எப்படி நம்புவது எனின், அது இவ்விதமறியத்தக்கது. உலகில், எந்த ப்ராணியும் துக்கத்தை விரும்புகின்றதில்லை. ஸகல ஜீவர்களாலும் விரும்பப்படுவது ஸுகமே என்பது நிச்சயம். ஸுஷுப்தியை விரும்பாத ஜீவர் யாருமில்லை. ஸுஷுப்தியை ஸகல ஜீவர்களும் விரும்புகின்றனர். ஆதலால் ஸுஷுப்தியில் ஸுகம் உள்ளது என்பது வ்யக்தமாய் அறியப்படுகின்றது. காரணமில்லாமல் காரியம் ஏற்படுவதில்லை என்பது நியாயமாதலால், யாதானும் ஒன்றை ஒருவன் (ஸ்மரித்தால்) நினைத்தால், பூர்வம் அதனைக் கேள்வியாலாவது, பார்வையாலாவது, மற்றெவ்விதத்தினாலாவது, அனுபவித்திருக்க வேண்டும் என்பது நிச்சயம். ஸுஷுப்தி நீங்கியதும் "இதுவரையிலும் நான் ஒன்றுமறியாமல் ஸுகமாய்த் தூங்கினேன்" என்று ஸகலரும் ஸ்மரிக்கின்றனர். அந்த நினைவினு (ஸ்மரணத்தா) ல், அதன் காரணமாகிய அனுபவம், பூர்வம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று அறியப்படுகின்றது. ஆதலால் ஸுஷுப்தியில் அஞ்ஞானமும் ஸுகமும் உள்ளதென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

இனி, நன்றாய் வேலைசெய்வோருக்கு நல்ல நித்திரை வருகின்றது; அவ்வித மில்லாதவர்க்கு நல்ல நித்திரை வரக்காணோம்; ஆதலால் வேலை

யால் அழுத்து, மனம் முதலிய கரணங்கள் ஓய்ந்தொடுங்கிப்போதலே ஸுஷுப்தி என்பது உசிதமாயிருக்கின்றது. ஸுகத்தை விரும்பி ஸுஷுப்தி செய்ய யத்தனிக்கின்றனர் என்பது உசிதமல்ல. சிலர் தனக்கு ஸுஷுப்தி கூடாது, தாம் விழித்தேயிருக்க வேண்டும் என்று,மிக்க ஜாக்கிரதையாயிருக்கினும், தமது அறிவில்லாமல் பரவசமாய்த் தூங்கும்படியாகின்றமையால், கருவி கரணங்கள் ஓய்ந்து அழுத்து ஒடுங்கிப்போதலே ஸுஷுப்தியிலுள்ளது என்று சொல்லக்கூடாதோ வெனின், கூடாது என்க. நல்ல நித்திரை வருகிறதற்கு நன்றாய் வேலைசெய்தல் காரணம் என்பது உசிதமே; ஆயினும் அது நிமித்த மாத்திரமின்றி வேறல்ல. நன்றாய் வேலைசெய்வதால் கருவி கரணங்கள் ஓய்ந்தொடுங்குகின்றன என்பது வாஸ்தவமாயினும், அவ்வாறு ஒடுங்குதலாகிய ஸுஷுப்தியில், ஸுகமுள்ளது என்பதும், வாஸ்தவமே என்க. ஸுஷுப்தியாவது கருவிகரணங்கள் ஓய்ந்து போதல் மாத்திரமே எனின், ஸுஷுப்தியிலிருந்து எழுந்த ஸகலரும், இதுவரையில் யான் கருவி கரணங்களோய்ந்திருந்தேன் என்றே சொல்லவேண்டியதாகும். உலகானுபவம் ஒருவருக்காவது அப்படியில்லை. நான் இதுவரையில் ஸுகமாய்த் தூங்கினேனென்றே ஸகலருக்கும் அனுபவம் ஏற்படுகின்றது. சாஸ்திரமாயினும் யுக்தியாயினும் அனுபவத்தை அநுஸரித்து இருந்தாலொழிய ஒத்துக்கொள்ளக் கூடியதல்ல. அனுபவம் எல்லோருக்கும் ஒற்றுமைப்பட்டிருக்குமாயின் அதுவே உண்மை. அவ்வாறுள்ள அனுபவத்தினால் ஸுஷுப்தியில் ஸுகமுள்ளதென்றே அறிவுறுத்தப்படுகின்றது.

இனி ஸுஷுப்தியில் ஸுகதுக்கங்களில்லை. முன்னிருந்ததுக்கம் நீங்கியிருத்தலே உள்ளது. துக்க மிராதிருத்தல் மாத்திரமே ஸகலப்பிராணிகளாலும்,ஸுகம் என்பதாக வ்யவஹரிக்கப்படுகின்றது. உலகில் அனுபவம் ஒருவிதமாகவும், வ்யவஹாரம் மற்றோர்விதமாகவும் இருக்கலாம். ஆதலால் ஸுஷுப்தியில் ஸுகமுள்ளதென்று ஏன் சொல்லவேண்டும் எனின், இது உசிதமல்ல. அதாவது துக்கமிராதிருத்தலாகிய துக்காபாவமானது மண், கல், சுவர் முதலியவைகளுக்கு முள்ளது. அவைகளுக்குத்துக்கமில்லை; ஸுகமுமில்லை. ஆதலால் துக்காபாவமுள்ளதென்று ஏற்படுகின்றது. அப்படியானால் ஸுஷுப்தியை விரும்புவோர்களை, மண், கல், சுவர் முதலியவைகளுக்கு ஸமானராவதற்கே விரும்புகின்றவர்கள் என்று சொல்லவேண்டியதாகின்றது ஆனால் அப்படிச் சொல்லுவது சிறிதும் பொருத்தமுடையதல்ல என்க.

அன்றியும், துக்காபாவத்தையே விரும்பி ஸுஷுப்திசெய்ய முயலுகின்றன ரெனின், ஸுகிகள் தூக்கத்தை விரும்ப நியாயமில்லை. துக்கமிருப்பவர்களே துக்கமில்லாமல் போவதை விரும்பக்கூடுமென்றி, துக்கமில்லாதவர்களுக்கு ஸுஷுப்தியில் விருப்பம் வர ஹேதுவில்லாமற்

போகின்றது. ரோக மிருப்பவர்களே ரோகம் நீங்குவதற்காக ஔஷதம் புசிப்பதும், பத்தியமிருப்பதும் உசிதம். ரோகமில்லாமல் ஆரோக்கியமாயிருப்பவர் பத்திய நியமத்தோடு ஔஷதம் புசிப்பதில்லை. தூக்கமாட்டாத பளுவாகிய மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு சிரமத்தோடு நடப்பவன், அச்சுமைகளை யிறக்கிவைத்து சிரமப் பரிகாரம் செய்துகொள்ள விரும்புவதுண்டு. சுமையில்லாதவன் சுமையை இறக்கிவைத்துக் களைப்பாற எண்ணுகிறானென்றால், அது எப்படி பொருந்தும்? கடன் உள்ளவன் கடனைக்கழிக்க விரும்புவதுண்டு. கடனையில்லாது முதலுள்ளவனுக்குக் கடன்கழிக்க வேண்டுமென்று எண்ணமேற்பட நியாயமில்லையன்றோ. அவ்விதமே, ஸுஷுப்தியில் துக்கமில்லாதிருத்தலே உள்ளதெனின், துக்கமுள்ளவர்கள் மாத்திரம் ஸுஷுப்தியை விரும்பவேண்டுமன்றி, அபாரஸுகபோகத்தி லிருக்கின்றவர்கள் ஸுஷுப்தியை விரும்ப நியாயமில்லாமற் போகின்றது. ஆனால், உலகில் அபாரஸுகபோகத்திலிருப்பவர்களும் கூட, தமது ஸுகபோக ஸுகஸாதனங்களைத் துச்சமாய்த் தள்ளிவிட்டுத் தூங்க விரும்புகின்றார்கள். உலகம் முழுதிற்கும் ஏக சக்கிராதிபதியாயுள்ளவனும், இருபது வயதுள்ளவனும், அரோகதிடதேஹனும், அழகில் ஒப்பில்லாதவனும், ஸகல சாஸ்திர கலைகளையும் அறிந்தவனும், அளவிலடங்காத ஆசையுடையோனும், தனது ரூபகுண விசேஷங்களுக்குத் தக்க ஓர் பெண்மணியோடு கூடியவனுமா யிருந்தாலும், அம்மங்கை ஸுகத்தையும் விடுத்து, ஸுஷுப்திசெய்ய விரும்புகின்றான். ஆதலால், ஸுஷுப்தியில் அபாரஸுகமுள்ள தென்பது நன்கறியப்படுகின்றது.

இனி ஸுஷுப்தி செய்யாவிடில் வியாதி முதலியவைகளால் கெடுதி நேரும். ஆதலால் அப்படிப்பட்ட கெடுதிக்கு அஞ்சியே ஸுஷுப்தியை விரும்புகின்றனரென்று சொல்லக்கூடாதோ வெனின், இதுவும் அநுசிதமே என்க. அதாவது, உலகில்பசு பக்ஷியாதிகளும் ஸுஷுப்தியை விரும்புகின்றன. ஆனால், ஸுஷுப்தி செய்யாவிட்டால் ரோகமேற்பட்டுத் துன்புறும்படியாகும் என்று தெரிந்துகொள்ளத்தக்க அறிவுபரிபாகம் அவைகளுக்கிருப்ப தில்லை. ஆதலால், அவைகள் ஸுஷுப்தியை விரும்ப நியாயமில்லையே. ஸுகத்தை விரும்புதற்கோ எனின் ஸகலப்பிராணிகளுக்கும் நியாயமிருக்கின்றது. பசுபக்ஷியாதிகளும் கூட ஸ்திரீஸுக போகத்தை விரும்புவதை நாம் அறிகின்றோம். ஸுஷுப்தி செய்யாவிடில் ரோகம் முதலியவைகளால் துன்புறும்படியாகுமாதலின் ஸுஷுப்திசெய்ய வேண்டும் எனும், விவேகம்அவைகளுக்கில்லையே. அன்றியும் சிறு சிசுக்களும் நித்திரையைவேண்டி அழுகின்றதென்பதைஅறிந்து கொண்டவர்களாகிய தாய் முதலியவர்கள், சிசுக்களின் நித்திரைக்குப் படுக்கவைக்காதிருத்தல் இடையூறு என்பதைத் தெரிந்து கொண்டவர்களாதலால்,அச்சிசுக்களைத் தொட்டிலில்படுக்கவைக்க,அவைகளும் சுகமாய் தூங்குதல் ஸகலருக்கும் பிரத்தியக்ஷ ஸித்தமேயன்றோ. தூங்காவிடில் ரோகம்

முதலியவைகளால் கேடு வருமாதலால் தூங்கவேண்டுமென்று அறிந்து கொண்டே சிசுக்கள், நித்திரையை விரும்பி அழுகின்றனவென்றால், இதனையாராவது உசிதமாகக் கொள்ளுவார்களா? இல்லையன்றோ. ஸகல ஜனங்களுக்கும் எது மாறாமல் அனுபவத்திலிருக்கின்றதோ அதுவே உண்மை. ஸகல மனிதர்களும் ஸுஷுப்தி நீங்கியதும் "இதுகாறும் ஒன்று மறியாமல் ஸுகமாய்த் தூங்கினேன்" என்கின்றமையால் ஸகலருக்கும் ஸுஷுப்தியில் ஸுகமுள்ளது என்று நிச்சயிக்கப்படுகின்றது. அந்த ஸமயம் ஜாக்கிரத்தில் போல வெளிப்பிரபஞ்சமாவது, அல்லது ஸ்வப்பனம் போல மனப்பிரபஞ்சமாவது இல்லாததினால், ஸுஷுப்தி ஸுகத்தை வெளிப்பிரபஞ்ச ஸுகம் என்றாவது, மானஸிக விஷயஸுகம் என்றாவது சொல்ல இடமில்லை. ஆதலால் அது நிஷ்ப்ரபஞ்சமாயும் நித்தியமாயும் உள்ள ஸுகம் என்றே நிர்ணயிக்கப்படுகின்றது. அதுவே பரமாத்ம ஸுகம் என்றும், ஐச்வரஸ்வபாவநியத ஸுகம் என்றும் அறிக.

இவ்விதம் ஸுஷுப்தி ஸுகமே பரமாத்மஸுகமெனின், ஸுஷுப்திசெய்கின்றவர்களை ஜீவன் முக்தராகிய ஞானிகளென்றுசொல்லலாமே; வருவிலேயே தூக்கத்தில் பரமாத்மஸுகம் கிடைக்கின்றதாயிருக்க, வீணில் சாஸ்திரங்களைக் கற்றுணர்வதும், தியானம் முதலியவைகளை அப்பயஸிப்பதும் வேண்டாமே எனின் அல்ல. ஸுஷுப்தியில் பரமாத்மஸுகம் அனுபவிக்கப்படினும் அது அஞ்ஞானத்தோடு கூடவே அனுபவிக்கப்படுகின்றது. "நான் ஒன்றும் அறியாமல் ஸுகமாய்" என்ற லோகாநுபவத்தினால், அஞ்ஞானமு மிருக்கின்றது என்று ஏற்படுகின்றது. அந்த அஞ்ஞானத்தை நீக்கிவிட்டால், பரமாத்மஸுக மாத்திரம் மிஞ்சி நிற்கும். பரமாத்மஸுக மாத்திரமாய் மிஞ்சி நிற்கும் நிலைமையே ஜீவன்முக்தியென்று சொல்லப்படுகின்றது. அந்த அஞ்ஞானத்தை நீக்குவதற்காகவே சிரவணமனன நிதித்தியாஸங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் சிரவணாதிகள் வீணல்ல என்றறிக.

இனி அந்த அஞ்ஞானத்தை எப்படி தொலையச்செய்வது எனின், தனது செயல்களெல்லாவற்றையும் விடுத்துத் தூக்கத்திற்கும் இடங்கொடாமல், பூர்வம் "ஸுஷுப்தியில் மிஞ்சியது ஸாக்ஷிபோதமாகிய நித்திய ஸுகவஸ்து" என்று நிரூபிக்கப்பட்டதே, அந்த பரமாத்ம வஸ்துவினில் மனதை நிறுத்தியப்பியஸித்து வந்தால், ஸங்கற்பத்திற் கிடமில்லாமற் போகின்றமையால், மனதிலூன்றியஸகல வாஸனைகளும் குன்றிக்ரமமாய் அழிந்துபோகும்.

ஜீவர்கள் வாஸனைகளின் ஏவுதலுக்குட்பட்டு, சுபாசுப காரியங்களைச் செய்கின்றனர். வாஸனையானது நேராகவே சுபாசுப காரியங்களில் ஏவுகின்றதில்லை. நல்ல வாஸனையானது நல்லதையும், கெட்ட வாஸனை யானது கெட்டதையும் ஸங்கற்பிக்கச்செய்யும். உதாஹரணமாக

தற்செயலாய் ஓர் அழகிய மங்கை எதிர்ப்படும்போது, இயற்கையினால் நேத்திரேந்திரியம் அம்மங்கையைப் பார்த்தாலும், சுபவாஸனையால் ஏவப்பட்டவனாயின் "பிறன் மங்கையை நோக்கக்கூடாது பிறர் மங்கை உடன்பிறந்தாளுக்கு நிகரன்றோ" என்றெண்ணி, வேறு விஷயத்திற் சித்தத்தைச் செலுத்துகின்றான். அசுபவாஸனையால் ஏவப்பட்டவனாயின் "ஓ ஹோ இந்த மங்கையின் அங்கங்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன" என்று, அவளது அவயவங்களின் அழகை ஸங்கற்பிக்கின்றான். அவ்விதம் ஸங்கற்பத்திற்கு இடங்கொடுக்கவே "இவளோடு கூடி ஸுகிக்கவேண்டும்" என்று அம்மங்கையைக்காமுறுகின்றான். பிறகு அவ்விதம் கூடுவதற்குத் தக்கவழியைத் தேடுகின்றான். பிறகு அப்படிப்பட்ட பாவச்செயலையும் செய்கின்றான். இவ்விதம் வாஸனையால் ஸங்கற்பமுதிக்கின்றது. ஸங்கற்பத்தால் காமம் உதிக்கின்றது. காமத்தினால் செய்யத் துணிபடைகின்றான். நிச்சயத்தினால் செய்கை நிகழ்கின்றது. இவ்விதமே உலக நடையில் உள்ளதாதலின், வாஸனையானது ஸங்கற்ப காம மூலமாகவே செய்கைக்கு ஹேதுவாகின்றதென்பது நிர்ணயமே என்க ஆனது பற்றியே,

விஷயேஷ்வாவிஶச்சேத ஸங்கல்பயதி தத்குணாந்
ஸம்யக்ஸங்கல்பநாத்காம: காமாத்பும்ஸ: ப்ரவர்த்தநம்||

என்று சங்கரபகவத்பாதர் முதலிய பெரியோர்களால் உபதேசிக்கப்பட்டுள்ளது.

வாஸனைகளால் உதிப்பன கெட்ட ஸங்கற்பங்களாயிருந்தால் "ஓ ஹோ நமக்குக் கெட்ட வாஸனை முளைத்திருக்கின்றதினாலன்றோ இத்தகைய கெட்ட காரியங்களில் ஸங்கற்பமுதிக்கின்றதுஎன்றும், கெட்டகாரியம் இப்போது ஸுகம்போலத் தோன்றினும் பிறகு அபாரமாகிய நரக யாதனைகளுக்கும், இழிய ஜன்மங்களுக்கும் ஹேதுவாகின்றமையால் இதனில் சித்தத்தை விடக்கூடாது" என்றும் திடவிவேகத்தால் உறுதி செய்துகொண்டு மனதை நிக்ரஹிக்கவேண்டும். அப்படி ஸங்கற்பத்திற்கு இடம்கொடாமல் நிக்ரஹித்து விட்டால், அதனால் ஏற்படும் காமத்திற்கு ஹேதுவில்லாமல் போகின்றமையால் அந்த ஸங்கற்பம் கெட்டு அழிந்து போகும்.

இனி, பூர்வஜன்ம வாஸனையின் காரியங்களாகிய ஸங்கற்பகாமங்களைத் தடுக்கக்கூடுமென்பதை எப்படி ஒத்துக்கொள்ளுவது? விவேகியாயினும் தனது பூர்வஜன்ம வினைக்குத் தக்கபடியே சேஷ்டிக்கின்றான். பூர்வ வினையைமீற எவனாலும் மாளாது என்றே பெரியோர்களும் சொல்லுகின்றனர்.

𑌸𑌦𑍃𑌶𑌂 𑌚𑍇𑌷𑍍𑌟𑌤𑍇 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑌪𑌿
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌕𑌿𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿

*ஞானவானும் தனது பூர்வவினைக்குத் தக்கபடியே சேஷ்டிக்கின்றான். ஜீவர்கள் பிரகிருதியை அடைகின்றனர். நிக்கிரஹம் யாது செய்வதாம்.*

என்பது முதலிய பகவத்கீதாதி வாக்கியங்களிலும் இவ்விதமே யன்றோ காணப்படுகின்றது. இது இவ்வித மிருக்க, ஸங்கற்பகாமங்களுக்கிடங்கொடுக்கின்றவனும் அசுப வாஸனையின்படி நடக்கக்கூடாதெனின், அதை எப்படி ஒத்துக்கொள்ளுவது, எனும் சங்கை பலருககு நிகழும். ஆதலின், இவ்விஷயத்தைச்சற்று ஆராய்ந்துபார்க்கவேண்டும். அதாவது, மனதில் வாஸனையென்றும், தர்மாதர்மமென்றும், இரண்டு விதமாகிய ஸம்ஸ்காரங்கள் உள்ளன. வாஸனையாவது, பூர்வம் நிகழ்ந்த விஷயபோக அப்பியாஸத்தினால் ஏற்பட்ட விசேஷப்பற்றேயாம் என்று,பூர்வமே சொல்லப்பட்டது. தர்மாதர்மங்களே புண்ணிய பாவங்களாகிய கர்மங்களென்று சொல்லப்படுகின்றன. புண்ணியபாவ கர்மங்கள் ஸஞ்சிதங்களென்றும் ப்ராரப்தங்களென்றும் இருவகைப் படுவனவாம்.

இந்த ஜன்மத்திற்குமுன் செய்யப்பட்டிருக்கும் புண்ணிய பாவங்களெல்லாம், ஒவ்வொரு ஜீவனின் மனதில்,தர்மாதர்மரூபமாய்ப் பதிந்திருக்கும். அப்படிப்பட்ட அனந்தகோடி கர்மங்களிலுள்ளதாகிய பெரும் புண்ணியமானது பரிபக்குவப்பட்டு, அரிய இம்மனித ஜன்மத்தையும், இதனால் அனுபவிக்கவேண்டிய எண்ணிறந்த ஸுகதுக்கங்களையும் தருவதற்குத் தலைப்பட்டுள்ளது. ஆதலால், இதனை ப்ராரப்தகர்ம மென்கின்றனர். ப்ர, ஆரப்தம் எனின், பயன்கொடுக்க ஆரம்பிக்கப்பட்டது என்பது பொருளாதலால், தற்காலம் பயன்கொடுக்கத் தலைப்பட்டிருக்கும் கர்மத்திற்கு ப்ராரப்தமென்று பெயர். இதனைத்தடுக்க எவனாலுமியலாது. ப்ராரப்தம் சுபமாய் இருந்தால் ஸுகமும், அசுபமாயிருந்தால் துக்கமும் வருவது நிச்சயம். எவ்விதமாகிய புருஷயத்தனத்தைச் செய்தாலும் எந்த ஸமயத்தில் எந்த ஸுகதுக்கம் ஏற்படுமோ, அந்த ஸமயத்தில் அது வந்தே தீருமாதலால், அதனைத்தடுப்பதரிது என்றறிக. ஸஞ்சிதமாவது, இதுவரையில் பரிபக்குவப் படாமல், இனி மறுபிறவிகளில் பக்குவப்பட்டுப் பயன் தருவனவாகிய கர்மங்களே யாம்.

ப்ராரப்த கர்மமானது முக்கிய ப்ராரப்தமென்றும், அவாந்தர ப்ராரப்தமென்றும் இருவிதமாகும். ஓர் பெரும் புண்ணியம் செய்யும் காலத்தின் இடையில் சிலபாவங்களைச செய்தலும்,ஓர் பெரும் பாவத்தைச்செய்யும் காலத்தின் இடையிலேயே சில புண்ணியங்களைச் செய்தலும் உலகில் காணப்படுகின்றது இவைகளுள் பெரிதாய்ச் செய்யப்படும் கர்மம் முக்கிய

மாயும், இடையில் செய்யப்படுவன அமுக்கியங்களாயும் இருக்கின்றமையால், இவைகள் மனதிலூன்றி யிருந்து, பின்னர் பயன்தரும் காலத்தில் முக்கிய ப்ராரப்தமெனவும் அவாந்தர ப்ராரப்தமெனவும் சொல்லப்படுகின்றன. சிலர் ஓர் பெரிய ஸுகத்திலிருக்கும்போது இடையில் சிலதுக்கங்களையும், சிலர் பெரிய துக்கத்தை யனுபவித்துக்கொண்டிருக்கும் காலத்திலேயே இடையில் சில ஸுகங்களையும், அனுபவிக்கும்படி ஏற்படுகின்றதை நாம் காண்கின்றோம். இதனில் நீடித்தது முக்கிய ப்ராப்தமென்றும் மற்றவை அவாந்தர ப்ராரப்தங்களென்றும் அறிக.

இவன் நல்லசெய்கை செய்தாலும், அல்லது கெட்டகாரியம் செய்தாலும், அல்லது யாதும் செய்யாமல் இருந்தாலும், ப்ராரப்த கர்மத்தால் வரும் ஸுகதுக்கம் வந்தேதீரும். இவன் நல்லது செய்யினும் கெட்டது செய்யினும் இப்போது வரும்பயன் ஒன்றேயானால்,எதனைச்செய்வது உசிதம் ? கெட்டது செய்தால் இதன் பயனாகிய துக்கத்தை ஜன்மாந்தரத்தில் அனுபவித்தே தீரவேண்டுமாதலால், இனித் துன்பத்திற்கே ஹேதுவாகின்றது. நல்லது செய்தால் அது ஜன்மாந்திரத்தில் ஸுகத்திற்கேஹேதுவாகின்றமையால் இப்போதிய செய்கைகளை நல்லவைகளாகவே செய்ய வேண்டுமென்பதே யுக்தமென்க.

ஸ்வற்பகாலம் அப்பியாஸத்தில் பொடி, புகையிலை, சுருட்டு, கள், கஞ்சா முதலிய உபயோகங்கள் ஏற்பட்டிருந்து, சிலகாலத்திற்குப்பின், இவைகெட்ட அப்பியாஸங்கள் என்று தோன்றி நிறுத்தி விட்டிருக்கினும், மீண்டும் ஓரோர் ஸமயத்தில்,முன்போலவேஅவைகளை யுபயோகிக்கவேண்டுமென்று சபலமுண்டாகின்றது. அந்த சபலத்திற்கு ஹேது,பூர்வம் அவைகளின் அப்பியாஸத்தினால் ஏற்பட்டு மனதிலுள்ளபற்றேயாம். அநந்த கோடிஜந்மங்களில், ஸ்திரீபோகம் முதலிய காரியங்கள் அப்பியாஸத்தில் ஏற்பட்டிருக்கின்றமையால் அவைகளுக்குத் தக்கபடி விசேஷப்பற்று மனதினில் எவ்வளவு திடமாக ஊன்றியிருக்கவேண்டு மென்று சற்று ஊஹித்துப் பார்க்கவேண்டும். அந்தப்பற்றே வாஸனை யென்னப்படுமென்று ஏற்கனவே சொல்லப்பட்டது. வாஸனை வேறு; ப்ராரப்தகர்மம் வேறு; வாஸனையால் ஸங்கற்பமும், ஸங்கற்பத்தால் காமமும் ஏற்படுகின்றது. காமம் ஏற்படின், உடனே இதைச்செய்ய வேணடுமென்று நிச்சயம் ஏற்படுகின்றது. ஆதலால் வாஸனை பரம்பரையாய்ச் செய்கைக்கும், நேரில் ஸங்கற்பத்திற்கும் ஏதுவாகின்றது. ப்ராரப்தம் ஸுகதுக்கானுபவங்களுக்கு மாத்திரம் ஹேதுவேயன்றி, ஸங்கற்பகாமங்களுக்கும் செய்கைகளுக்கும் ஹேதுவல்ல. ஸங்கற்பமானது வாஸனையாலேற்படுகின்றது. ஸங்கற்ப முதல் செய்கையீறாகியஸகலமும் இவனது இப்போதியதாகியகாரியங்களேயாம். செய்கையால் வரும் ஸுகதுக்கங்கள் பிராரப்தகர்மப் பயன்களேயாம். ஆதலால், மனிதர் வாஸனையையும் ப்ராரப்தபலமாகிய ஸுகதுக்கத்தையும் தடுக்க இயலா விடினும், ஸங்கற்பமுதல் செய்கையீறாகிய கெட்டவை

களுக்கு இடம் கொடுக்காமல் நல்லவைகளிலேயே செல்லவேண்டும் என்பதே நிர்ணயம். கெட்ட வாஸனையால் கெட்ட ஸங்கற்ப முதிக்கும்போது, மனதை நிக்ரஹித்து, அதற்குப்பதிலாய் நல்ல ஸங்கற்பத்திற் கிடங்கொடுக்கக்கூடிய ஸ்வதந்திரத்தன்மை மனிதருக்குள்ளது. ஆதலால் இதைச் செய்யாதே, இதனைச்செய்குக என்று, விதி நிஷேத ரூபமாய் சாஸ்திரம் பிரவர்த்தித்திருக்கின்றது. சிலர் இவ்வுண்மையறியாமல் வாஸனையையும் ப்ராரப்த கர்மத்தையும் ஒன்றென்பதாக எண்ணி மதிமயங்கி, "யான் என்னசெய்வேன் எனது ப்ராரப்தம் என்னைக்கெட்ட கார்யத்தில் ஏவும் போது அதனை மீறி நடக்கமுடியுமா" என்று சொல்லிக்கொண்டு மிகவும் கெட்டகாரியங்களைச் செய்கின்றனர். வாஸனையால் வருவது ஸங்கற்பம். மனிதனால் ஸ்வதந்திரமாய்ச் செய்யப்படுவன காமக்குரோதாதி செய்கைகள். ப்ராரப்தாயத்தமாய் வருவது ஸுகதுக்கானுபவம். இவ்விதம் விவேகித்துக் கொள்ளவேண்டும். இவ்வித முண்மை யறிந்தவர்களுக்குக் கெட்ட வாஸனையால் உண்டாகும் ஸங்கற்பத்தை, காமஹேது வாகாமலிருக்கும்படி தடுக்க இயலும். ஸங்கற்பத்தால் வரும் காமத்தைத் தடுத்தால் செய்கை நிகழாது. ஆனது பற்றியே,

𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌶𑍇𑌷𑌤𑌃
𑌮𑌨𑌸𑍈𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑌂𑌵𑌿𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃॥

என்று பகவானால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது.

𑌸𑌦𑍃𑌶𑌂𑌚𑍇𑌷𑍍𑌟𑌤𑍇𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌃𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑌪𑌿
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂𑌯𑌾𑌨𑍍𑌤𑌿𑌭𑍂𑌤𑌾𑌨𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃𑌕𑌿𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

என்ற ச்லோகத்திலுள்ள ப்ரகிருதி எனும் சொல்லுக்கும், பூர்வ ஜன்மங்களில் அப்பியாஸத்தில் வந்த சுபாசுப விஷய வாஸனை யென்பதே பொருள் என்று அறியத்தக்கது. அவ்விதமன்றி ப்ராரப்தகர்மமென்று அர்த்தங்கொள்ளுதல், முன் பின்னுக்கு விரோதமேயாகும். ஆனது பற்றியே,

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑍌𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌
𑌤𑌯𑍋𑌰𑍍𑌨𑌵𑌶𑌮𑌾𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍𑌤𑍌𑌹𑍍𑌯𑌸𑍍𑌯𑌪𑌰𑌿𑌪𑌨𑍍𑌥𑌿𑌨𑍌॥

எனும் அடுத்த ச்லோகத்தில், ப்ரகிருதியானது ஏவினாலும் ராகத்துவேஷங்களுக்கு வசமாகக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது.

"𑌤𑌂𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍁𑌃𑌖𑌸𑌂𑌯𑍋𑌗𑌵𑌿𑌯𑍋𑌗𑌂𑌯𑍋𑌗𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌮𑍍"

எனும் ச்ருதியானது வாஸனை வேறு கர்மம் வேறு என்று அறிவுறுத்துகின்றது. இந்த ச்ருதியின் அர்த்தமாவது, தம்=பரலோகம் செல்லுகின்றவனாகிய அந்தஜீவனை, வித்யாகர்மணீ=ஞானமும் செய்யப்பட்டிருந்த புண்ணியபாவ கர்மங்களும், ஸமந்வாரபேதே=நன்கு பற்றிச் செல்லுகின்றன, பூர்வப்ரஜ்ஞா ச=பூர்வ ஜன்மங்களில் அப்பியஸிக்கப்பட்ட மாலை, சந்தனம், மங்கை முதலிய விஷய போக வாஸனைகளும் பற்றிக்கொண்டு செல்லுகின்றன என்பதாம். இவ்வுண்மையே, ப்ரும்மஸூத்திரம் மூன்றாவதத்தியாயம் நாலாவது பாதத்தில்,

"ஸமந்வாரம்பணாத்"

என்ற ஸூத்திரத்தினால் விளக்கப்பட்டிருக்கின்றது.

கெட்ட வாஸனைகளால் வரும் ஸங்கற்பகாமங்களுக் கிடங்கொடாமலும், கெட்டகாரியஞ் செய்யாமலுமிருக்கக் கூடிய ஸ்வதந்தரத்துவம் மனிதனுக்கில்லையென்றும், ஸகலமும் ப்ராரப்தா தீனமேயென்றும் சொன்னால் நியாயஸ்தலம், நியாயாதிபதி, சிறைச்சாலை முதலியவைகள் வேண்டியதில்லையென்றேற்படும். வேதசாஸ்திரங்கள் ஸகலமும் வீணாகவே முடியும். ஆதலால் வாஸனையின் காரியங்களாகிய ஸங்கற்பகாமங்களைத் தடுக்கலாம் என்றும், ப்ராரப்தமாகிய ஸுகதுக்கத்தைத் தடுக்கமுடியா தென்றும் சொல்லுவதே யுக்திக்கும் அனுபவத்திற்கும் சாஸ்திரங்களுக்கும் பொருந்தியது. ஆனது பற்றியே,

ப்ராக்தநவாஸநாஜாலம் நியோஜயதி மாம் யதா
முநே ததைவ திஷ்டாமி க்ருபண: கிம் கரோம்யஹம்॥

பூர்வ வாஸனைகள் என்னை எப்படி ஏவுகின்றனவோ அப்படியே நிற்கின்றேன். ஓமுனிவரே தீனனாகிய நான் என்ன செய்வேன் என்று சங்கித்த ராமனுக்கு.

த்விவிதோ வாஸநாவ்யூஹ: ஶுபஶ்சைவாஶுபஶ்ச தே
வாஸநௌகேந ஶுத்தேந தத்ர சேதத்ய நீயஸே
தத்க்ரமேணாஶு தேநைவ பதம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வதம்

ஓ ராமா. சுபமென்றும் அசுபமென்றும் இருவிதமாக வாஸனைக்கூட்டங்கள் உள்ளன. அவைகளுள் சுத்த வாஸனைக் கூட்டங்களால் ஏவப்படுவாயாயின், அவ்வழியே சென்றால் க்ரமமாய் சாச்வதமான பதம்பெறுவாய்.

அத சேதஶுபோ பாவஸ்த்வாம் யோஜயதி ஸங்கடே
ப்ராக்தநஸ்தததஸௌ யத்நாஜ்ஜேதவ்யோ பவதா ஸ்வயம்॥

*அசுப வாஸனை கெட்ட காரியத்தில் ஏவுமாயின், அப்பூர்வ வாஸனையானது முயற்சிகொண்டு உன்னால் ஜயிக்கத்தக்கது.*

என்று உபதேசிக்கப் பட்டதாக வாஸிஷ்டத்திலும் சொல்லப்படுகின்றது. சுபப்ராரப்தம் வந்திருக்கும்போது அசுபவாஸனை யேவுவதும், அசுப ப்ராரப்தம் வரும்போது சுபவாஸனையேவுவதுமுண்டு. சுபப்ராரப்தமும் அசுப வாஸனையும் நேருமானால், பிறன் மங்கையைச்சேருதல் முதலிய காரியங்கள் மூலமாய் ஸுகமனுபவிக்கப்படும். வாஸனை சுபமும் ப்ராரப்தம் அசுபமுமானால், வ்ரதோபவாஸ தானதர்மங்களைச்செய்து வியாதி, தரித்திரம் முதலியவைகளின் மூலமாய்த் துக்கமனுபவிக்கப்படும். வாஸனை ப்ராரப்தம் இவ்விரண்டும் அசுபமானால் கொலைகளவு முதலியதைச்செய்து தண்டனைப்படுதல் முதலியதன்மூலமாய்த் துன்பப்படலாகும். வாஸனை ப்ராரப்தம் இவ்விரண்டும் சுபமானால் க்ஷேத்திராடனம், தீர்த்தயாத்திரை முதலியவைகளைசெய்ய சசென்று ஸத்குருலாப ஞானோபதேசாதிகள் கிடைக்கப்பெறலாம். கெட்ட வாஸனைகளை விவேகததாலும் நல்ல வாஸ[illegible]யங்களாலும் நல்ல ஸஹவா ஸத்தாலும் வெல்லக்கூடும். கெட்ட வாஸனைகளை விவேக முதலியவைகளால் தகைந்து, பூர்வம் ஈச்வ ரஸ்வபாவங்கியத ஸுகமென்று காட்டிய நிர்க்குண ஸச்சிதாநந்த பரமாத்ம ஸ்வரூபத்தில் மனதை நிறுத்தியப்பியஸித்துவந்தால், ஸங்கற்பகாமங்களுக் கிடமில்லாமற் போகின்றமையால், இருவித வாஸனைகளும் கிரமமாய் ஒழிந்துபோகும். அப்போது மனம் ஸங்கற்பவி கற்பமின்றி பரிபூர்ணாநந்த பரமாத்ம வஸ்துவிலேயே அடங்கி, அகண்டாநந்தாத்ம வடிவமாய்ப்பரிணமிக்கும். அப்படி பரிணமித்தலே அகண்டாகார விருத்தியென்றும், ஞானமென்றும் சொல்லப்படுவதாம். மனோவிருத்தி எதனை நாடுகின்றதோ அதனிலுள்ள அஞ்ஞானம் நீங்குமாதலால், அகண்டானந்த வடிவமாகப் புத்திவிருத்தி யுதிக்கின், அது அகண்டானந்த வஸ்துவை மறைத்துக்கொண்டிருந்தஅஞ்ஞானத்தை நீக்கிவிடும். அஞ்ஞானம் ஒழிந்தால், அதன் மூலமாய்ஏற்பட்ட ஸகல கர்மங்களும் ஒழிந்துபோகும். பிறகு வஸிஷ்டர், ஜனகர், யாக்ஞியவல்க்யர், சுகர், வாமதேவர் முதலிய மஹானுபாவர்கள்போல ஜீவன்முக்தராகலாம். இப்படிப்பட்ட நிலைமைக்கு மனமே ஹேதுவாயிருக்கின்றமையால், அதன் தத்துவத்தையறிந்து கொள்ளுதல் அவசியமே. ஆதலால் மனதின் உண்மையை உள்ளபடி அறிந்துகொண்டு அவ்வழி நடப்பார்களாயின் உலக இன்பமும் பேரின்பமும் பெறலாம். என்றறிக.

## மனஸ்தத்துவம் ஸம்பூர்ணம்.

ஶுபமஸ்து

---

**மகாமகோபாத்யாய, டாக்டர்**